
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்



## ரசிகர்களிடம் திருட்டு!

## கோடி கோடியாய்ச் சுருட்டு!

படிப்பகம்

www.padippakam.com

எல்லாமே இயல்பாக இருப்பதாய் பாசாங்கு செய்கின்ற பேர்வழிகளின் சாதீய மானேபாவத்தை வாழ்க்கையின் இண்டு இடுக்குகளிலிருந்து இழுத்து வந்து அம்பலப்படுத்துகிறது. ''கவர்மெண்ட் பிராமணன்''. ''இதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை?'' என்று யாரும் தப்பிவிட முடியாத படிக்கு 'மேல்சாதி' உணர்வின் சகல விதமான திரைச்சீலைகளையும் எடுத்துப்போட்டு ''இது உன்னுடையது தானா பார்! நீயே சரி பார்த்துக் கொள்'' என்று வாசகனை அனுபவத்துக்குள்ளாக்குகிறது நூல். எந்தப் பகுதியை படிக்கும் போதும் மெய்மறக்கச் செய்யாமல் வாசகனையும் வாழ்க்கைப் பரப்பிற்கு இழுத்துவந்து உணர்வினை தட்டிவிடுவதே இந்நூலின் சிறப்பு.

''அன்று ஒரு வீர சைவரின் வீட்டில் யாரோ இறந்துவிட்டார்கள்... நாங்கள் வந்ததை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகே அவர்களும் பாடையை தூக்க ஆரம்பிப்பார்கள். பிணத்தின் மேல் இரைக்கப்படும் சில்லறைக் காசுகள் கீழே விழும்போது எடுத்துக் கொள்வது தலித்துகள் வேலை. தலித்துகள் இல்லாவிட்டால் அவர்கள் இரைக்கும் சில்லறைக் காசுகளுக்கு என்ன மரியாதை இருக்கிறது?'' (நூல் பக்: 14, 15).

சாதித்திமிரை ஏதோ புதிய விசயம் போல பார்க்க முற்படும் வாசகர்களின் கற்பனை உலகத்திற்கு வேட்டு வைத்து நிஜ உலகத்துக்கு நெட்டித் தள்ளுகின்றன, அரவிந்த மாளகத்தியின் அனுபவங்கள். நூல் முன்வைக்கும் விசயத்திலிருந்து நழுவி விடாதபடிக்கு பாவண்ணனின் மொழியாக்க நடை நூலுக்கு சரியான பிடிமானம்.

பள்ளிக் கூடத்திலிருந்து பல்கலைக்கழகம் வரை - மாட்டுக்கு சினை போடும் இடத்திலிருந்து மந்த்ராலயம் வரை தீண்டாமையின் நுட்பங்களை நீங்கள் கண்டதுண்டா? ''சினைக்கு போன எருமையும் ஓடிவந்த காளையும்'' ''கவர்மெண்ட் பிராமணனின் ராகவேந்திர பக்தி'' ஆகிய தலைப்புகளில் அதை நீங்கள் காணலாம். 'மேல் சாதி' என்ற போர்வைக்குள் நடக்கும் கீழ்த்தரமான வேலைகளை சந்திக்கு இழுக்கின்றது ''மஞ்சள் நீர் என்னும் ஈஸ்ட்மென்ட் கலர் படம்''. தமிழ்நாட்டிலும் கூட ஊர்த்திருவிழா என்ற பெயரில் தாழ்த்தப்பட்ட பெண்களை சடங்கு, விளையாட்டு சாக்கில் பாலியல் வக்கிரத்தில் தள்ளி ரசிக்கும் கலாச்சாரத்தின் மீது காரித்துப்பும் பகுதி இது.

''பூணூல், சிவங்கலிங்க நூலின் பெருமை'' எனும் பகுதியில் 'மேல் சாதியின்' இரட்டை வேடத்தை எடுத்து

## ■ நூல் அறிமுகம் ■

# ''கவர்ன்மெண்ட் பிராமணன்''

விடுகிறார், ''இவர்கள் சும்மா தோப்புக்கு போகிற சாக்கில் தண்ணீர் நிரம்பிய செம்பை கையில் ஏந்திக் கொண்டு மலைப்பக்கம் செல்வார்கள். பார்க்கிறவர்களுக்கு என்னமோ மலம் கழிக்க போகிறான் என்ற எண்ணம்தான் தோன்றும். ஆனால் இவர்கள் செல்வது சாராயம் காய்ச்சும் இடத்திற்கு,...'' (பக் 61) குடிக்கிறது நாட்டு சரக்கு, எதுக்குடா சாதி முறுக்கு? என்று நம்மையும் கேட்கத் தூண்டும்.

''என் முன்னாள் காதலி'', ''எதிர்காலத்தோடு விளையாடும் பெண்கள்'' பகுதிகள் விரிவான அளவில் அனுபவத்தை பகிர்ந்து கொள்கின்றன. தாழ்த்தப்பட்டவர்களை காதலிப்பதாய் நெருங்கும் பிற சாதிக்காரர்களின் கையாலாகாத்தனத்தையும், காதலும் ஒரு அடக்குமுறையாக தாழ்த்தப்பட்டவர்கள் மீது திணிக்கப்படுவதையும் விளக்கும் பகுதிகள் இவை. ''மார்க்சியமும் எச்சில் தட்டும்'' போலி கம்யூனிஸ்டுகளின் இரண்டகத்தை, நுட்பமாகச் சாதிபார்க்கும் அவர்களின் சாமர்த்தியத்தை அம்பலப்படுத்துகிறது.

இந்த நூலின் ''படிக்கத் தொடங்கும் முன்பு வாசகர்களோடு, இன்னும் பல பகுதிகள் வாழ்க்கையின் புரியாத பகுதிகளை புரிய வைக்கிறது,'' என்ற முதல் பகுதி முக்கியமானது. அரவிந்த மாளகத்தி தன்னுடைய தற்போதைய

**கவர்ன்மென்ட் பிராமணன்**



அனுபவத்தை ஓரிடத்தில் இப்படி
சொல்கிறார், ''மாளியோடு (அதாவ
மாளகத்தியோடு) கூடப்படித்த நண்ட
களே இப்போது அவனிடமிரந்
விலகி நின்று என்னங்க என்று விளிக்
றார்கள்... அதற்குக் காரணம் அவ
பெரிய மனிதன் என்று அவர்க
நினைப்பதுதான்.'' (பக். 7)

தான் தனிமைப்படுவதாக உ
ரும் அரவிந்த மாளகத்தி ஓரிடத்தி
தன்னைப்பற்றிய சுய விமர்சனமா
இப்படிச் சொல்கிறார், ''ஒரு தலி
துக்கு இருக்கக்கூடிய எல்லா அம்சங்
ளும் கூட என்னிடம் உண்டு, அ
சமயத்தில் ஒரு சாதாரண மனிதனிட
இருக்கக் கூடிய எல்லா அம்சங்களு
கூட என்னிடம உண்டு.'' (பக். 7) இ
தச் சாதாரண மனிதன் என்பவன் ஒ
தொழிலாளியா? விவசாயியா? அர
ஊழியனா? அறிவு ஜீவியா? அவ
என்னவாக இருக்கிறார்? இதில் அவ
எந்த வர்க்கத்தோடு தன்னை அடைய
ளப்படுத்திக் கொள்ள விரும்புகிறா
எந்த வர்க்கத்தின் அரசியலுக்கா
தன்னை மாற்றிக் கொள்ள விரும்பு
றார் என்பதைப் பொருத்தே, அவ
தனது தலித் அனுபவத்தைத் திரும்பி
பார்க்கும் முறையும், முன்னோக்கு
முறையும் அமைகிறது.

ஜெகனாபாத் (தலித்) படுசெ
லையைப் பார்க்கும் அடிப்படை வர்
கத்தை சேர்ந்த தலித் ஆயுதந்தாங்
களத்தில் நிற்பதையும், முப்படைகளை
யும் முதுகிற்கு பின்னால் வைத்து
கொண்டு 'தலித்' ஜனாதிபதி கே.ஆ
நாராயணன் ஆளும் வர்க்கத்து நாற்க
லியிலிருந்து வெறுமனே அறிக்கை
விடுவதையும் புரிந்து கொண்டே
போதும்! இந்த வர்க்க இருப்பைச் ச
பார்த்துக் கொள்ளும் அனுபவத்தி
ருந்து எந்த ஒரு எழுத்தாளனும் தப்பி
துச் செல்வதென்பது தனிமைப்படுவது
லேயே போய் முடியும் என்பதை இந்
சந்தர்ப்பத்தில் நாம் பகிர்ந்து கொள்
வும் ''வாழ்க்கை என்பதைத் திறந்த பு
தகமாக்கி'' உதவி செய்கிறார் அரவிந்
மாளகத்தி.

• துரை. சண்முக

''கவர்ன்மெண்ட் பிராமணன்''
— அரவிந்த மாளகத்தி.
தமிழில் பாவண்ணன்.

வெளியீடு:
விடியல் பதிப்பகம், கோவை.
விலை: ரூ. 45.00

கிடைக்குமிடம்:
கீழைக்காற்று வெளியீட்டகம்
சென்னை - 2

படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 16
• குரல்: 11-12
• மே '99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# சுவரெழுத்துக்குத் தடை: கருத்துரிமை மீது தி.மு.க. அரசின் புதிய தாக்குதல்

புரட்சிகர இயக்கங்கள், தொழிச் சங்கங்கள், ஜனநாயக அமைப்புகள் போன்றோரின் கருத்துரிமையைப் பறிக்கின்ற ''பொது இடங்களை அலங்கோலம் செய்வதைத் தடுக்கும் சட்டம்'' (Prevention of Public Places Disfigurement Act) எனும் சட்டத்தைக் கடுமையாக அமல்படுத்தவிருப்பதாகத் தமிழ்க அரசு அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது. 16.4.99 அன்று எல்லா நாளிதழ்களிலும் வெளியிடப்பட்டுள்ள அவ்வறிவிப்பு கீழ்க் கண்டவாறு கூறுகிறது:

''தனியாருக்குச் சொந்தமான இடங்களில் சம்பந்தப்பட்ட உரிமையாளர்களின் அனுமதி பெறாமலோ, அல்லது அரசுக்குச் சொந்தமான பொது இடங்களில் அரசின் அனுமதி பெறாமலோ விளம்பரச் சுவரொட்டிகள் அல்லது விளம்பரங்கள் இடம் பெறக்கூடாது என்று ஏற்கனவே சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்திற்குப் புறம்பாக விளம்பரங்கள் ஏற்கனவே செய்யப்பட்டிருந்தால் அவற்றைச் செய்த அரசியல் கட்சியினர் உட்பட அனைவரும் தாமாகவே முன்வந்து உடனடியாக நீக்கிவிட வேண்டும்.'' ''அப்படிச் செய்யத் தவறினால் கட்சி பாகுபாடு எதுவுமின்றி அந்த விளம்பரங்களை அகற்றவும் அதற்குக் காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் காவல்துறை அறிவுறுத்தப்பட்டுள்ளது. இனி, அனுமதியின்றி சுவர் விளம்பரங்கள் எழுதுபவர்கள் மீது, எழுதும்போதே கைது செய்து குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்படுகிறது.''

இந்தச் சட்டம் ஏற்கனவே நாணயமாக அமல்படுத்தப்பட்டிருந்தாலோ, இனி அவ்வாறு அமல்படுத்தப்பட்டாலோ சிறையிலிருக்க வேண்டியவர்கள் ஆளும் கட்சிப் பிரமுகர்கள், அமைச்சர்கள், ஓட்டுப் பொறுக்கித் தலைவர்கள், திரையரங்க முதலாளிகள், பல்வேறு தனியார் தொழில் நிறுவனங்களின் அதிபர்கள் போன்றோர்கள்தான். ஆனால் இவர்களையெல்லாம் சிறை வைப்பதற்காகவோ, மேற்படி விளம்பரங்களைத் தடுப்பதற்காகவோ இந்த உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

மாறாக, இப்படியொரு உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னரே கடந்த சில மாதங்களாக எந்தப் பிரச்சினைக்காகச் சுவரொட்டி ஒட்டினாலும், சுவரெழுத்து எழுதினாலும் ம.க.இ.க. தோழர்கள் கைது செய்யப்படுகின்றனர். அமெரிக்க மான்சாண்டோ விதை நிறுவனத்தை வெளியேற்றக் கோரும் சுவர் விளம்பரம் எழுதியதற்காக நெய்வேலியில் எமது தோழர்கள் மூன்று முறை கைது செய்யப்பட்டுள்ளனர். பொது இடங்களை அலங்கோலப்படுத்தியதாக கரூர் பு.மா.இ.மு. அமைப்பாளர் தோழர். தவமணி தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். கோவை, கம்பம், திருச்சி இன்னும் பல இடங்களில் இப்படிப்பட்ட கைதுகள்.

கருத்தைத் தெரிவிப்பதற்கான வழிகளையெல்லாம் அடைத்துவிட்டு அரசியல் சட்டத்தில் கருத்துரிமை வழங்கப்பட்டுள்ளதாக மோசடி செய்வதுதான் முதலாளித்துவப் பண நாயகத்தின் வழிமுறை. புரட்சிகர அமைப்புகள், தொழிற் சங்கங்கள், ஜனநாயக அமைப்புகள் ஆகியோரது கருத்துக்களை வானொளி இருட்டடிப்பு செய்கிறது; சுப்பிரமணிய சாமி, வாழப்பாடி போன்ற ஒரு நபர் கட்சிகளின் அறிக்கைகளையும், பாராளுமன்ற அரசியல் சீரழிவுகளையும் வெளியிடும் பத்திரிகைகள் புரட்சிகர அமைப்புகளின் அறிக்கைகளையும், மக்கள் பிரச்சினைக்கான போராட்டங்களையும் திட்டமிட்டே இருட்டடிப்பு செய்கின்றன.

இந்நிலையில் மக்கள் பிரச்சினையோ, காவல்துறை ஒடுக்குமுறையோ, சாதி வெறித் தாக்குதலோ, முதலாளிகளின் கதவடைப்போ, அதிகாரவர்க்க ஊழலோ எதுவானாலும் இவற்றை எதிர்த்துப் பிரச்சாரம் செய்ய சுவரெழுத்து, சுவரொட்டி போன்ற வடிவங்களையே பயன்படுத்த வேண்டியுள்ளது. இந்த வடிவங்களை முற்றாகத் தடை செய்வதன் வாயிலாக ஆளும் வர்க்க ஓட்டுப் பொறுக்கி அரசியலைத் தவிர மாற்று எதுவுமே இல்லை என்ற மாயையை உருவாக்கவும் அப்பட்டமான போலீசு ஆட்சியை நடத்தவும் இந்த அரசு முயல்கிறது.

குடிசைகளை ஒழிப்பதன் மூலம் நகரை அழகுபடுத்தும் திட்டம் உழைக்கும் மக்களின் வாழ்வுரிமையைப் பறிப்பதைப் போலவே, சுவரெழுத்துக்களைத் தடை செய்வதன் மூலம் தமிழகத்தைத் 'தூய்மைப்படுத்தும்' இந்தத் திட்டம் மக்களின் கருத்துரிமையைப் பறிக்கும் சதித் திட்டமாகும். இந்த அறிவிப்பிற்கு பத்திரிகை - பார்ப்பனத் தூய்மைவாதிகளின் ஆதரவும், மலேசியா - சிங்கப்பூரைப் போல தமிழகத்தை சுத்தம் செய்யத் துடிக்கும் புதிய பார்ப்பனர்களான 'இன்டர்நெட்' தமிழர்களின் ஆதரவும் நிச்சயம் கிடைக்கும். ஆனால் உழைக்கும் தமிழ் மக்களும் அவர்களது அமைப்புகளும் இந்தக் கறுப்புச் சட்டத்தை முறியடிக்க வேண்டும். •

படிப்பகம்

www.padippakam.com

# படையப்பா:
# ரசிகர்களிடம் திருட்டு! கோடி கோடியாய்ச் சுருட்டு!



"கல்லானாலும் தணிகை மலையின் கல்லாவேன், ஒரு மரமானாலும் பழமுதிர்ச் சோலை மரமாவேன்" என்ற பக்திப் பாடலை முருக பக்தர்கள் அறிவார்கள். "சுருட்டானாலும் படையப்பாவின் சுருட்டாவேன்" என்று ஒரு பாடல் எழுதலாம். கல்லாகவோ மரமாகவோ மாற பக்தர்கள் யாரும் தயாரில்லையெனினும் சுருட்டாக மாற ரஜினி ரசிகர்கள் தயார்.

பக்தர்கள் மொட்டை போடுகிறார்களா, ரசிகர்கள் ஒருபடி மேலே போய் முடியிலேயே 'படையப்பா' என்று எழுத்து வெட்டிக் கொள்கிறார்கள். ஆனால் திருத்தணி, பழநி என்று தலையில் எழுத்து வெட்டிய பக்தர்களை நாம் இதுவரை கண்டதில்லை.

முருகனுக்கு பால்குடமா, ரஜினி கட்டு அவுட்டுக்கு பால் பாரல். பூந்தமல்லியில் 1500 லிட்டர் பாலை 6 பாரல்களில் கொண்டு வந்து மோட்டார் போட்டு குழாய் மூலம் பீய்ச்சியடித்து ரஜினி கட் அவுட்டுக்கு பால் அபிசேகம் செய்திருக்கிறார்கள். தெருவெல்லாம் உண்மையிலேயே பாலாறு ஓடியிருக்கிறது.

இன்னும் என்ன, பச்சை குத்துவது, காவடி, அலகு அனைத்தும் உண்டு. மேற்கண்ட அனைத்தையும் ரசிகர்கள் பெருமையுடனோ கூச்சத்துடனோ ஒத்துக் கொள்வார்கள்.

ஆனால் தங்கள் தலைவனுக்குத் தாங்கள் செலுத்தும் காணிக்கையைப் பற்றி மட்டும் அவர்களுக்குத் தெரியாது. பக்தர்களுக்கும் ரசிகர்களுக்குமுள்ள முக்கியமான வேறுபாடுகளில் ஒன்று இது.

**20 அடிக்கு 15 அடி சுவரொட்டி 100-க்கு 10 ரூபாய் வட்டி!**

படையப்பா வெளியாவதற்கு முதல்நாள் இரவு சுமார் ஒரு மணி; திருச்சியில் ஒரு தேநீர்க் கடை; விறுவிறுப்பாக வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. வழக்கமாக இரவு 12 மணிக்குள் கடையை அடைக்காவிட்டால் கடையில் புகுந்து அடித்து நொறுக்கும் காவல் துறை, படையப்பா வெளியாவதையொட்டி விடிய விடியக் கடை நடத்த சிறப்புச் சலுகை வழங்கியிருந்தது.

ரசிகர்கள் சிலர் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்தார்கள். 6 சுவரொட்டிகள் சேர்ந்த 15 அடிக்கு இருபதடி சுவரொட்டி ஒன்றின் விலை 50 ரூபாய். குறைந்தது 200 சுவரொட்டிகளாவது அடித்திருப்பார்கள் - மொத்தம் 10,000 ரூபாய் செலவு.

ஒட்டி முடித்தபின் தேநீர் குடித்தபடியே மறுநாள் டிக்கெட் என்ன விலைக்குப் போகும் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். தலைவர் படத்தின் டிக்கெட் விலை அதிகமாக, அதிகமாக பெருமை தான் என்றாலும், அவ்வளவு காசு கொடுத்துப் படம் பார்க்க முடியாதே என்ற வருத்தமும் அவர்கள் பேச்சில் கலந்திருந்தது.

படம் பார்க்க முடியாவிட்டாலும், 10,000 ரூபாய்க்கு சுவரொட்டி அடித்த ரசிகர்களில் ஒருவர் ஓட்டை உடைசல் பிளாஸ்டிக் வாங்கி விற்கும் தள்ளு வண்டி வியாபாரியாம்.

மறுநாள் திருச்சியில் 20 ரூபாய் டிக்கெட்டின் விலை ரூ. 450. போலீசார் யாருமே இல்லையா என்று வாசகர்கள் யாரேனும் சந்தேகிக்கக் கூடும். இருந்தார்கள்; டி.எஸ்.பி. தலைமையில் 50 போலீசார் கட்டுப்பாடாக நின்று கள்ளச் சந்தை விற்பனையை இடையூறு ஏதுமின்றி ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்கள்.

திறமைக்குப் பெயர் போனதல்லவா தமிழகக் காவல்துறை! தமிழகம் முழுவதும் படையப்பா திரையிடப்படும் அரங்குகளில் கள்ளச் சந்தை விற்பனையில் எந்தவித 'அசம்பாவிதமும்' ஏற்படா வண்ணம் முழுப் பந்தோபஸ்துக்கு ஏற்பாடு செய்திருந்தது காவல்துறை.




**படம் பார்க்க முடியாவிட்டாலும், வட்டிக்குக் கடன் வாங்கி சுவரொட்டி அடிக்கும் ரசிகர்கள்**

**படையப்பா வசூல் சாதனையை உடையப்பா!**

சென்னையில் டிக்கெட் விலை ரூ. 500. விழுப்புரத்தில் அமைச்சர் தலைமையில் உடன் பிறப்புகள் ஒரு பெரும் படையாகச் சென்று, கள்ளச் சந்தையில் என்ன விலையோ அதை முறையாகச் செலுத்தி, டிக்கெட் வாங்கிப் படம் பார்த்திருக்கின்றனர். அமைச்சர் என்ற அகம் பாவத்தில் அவர் சட்டம் பேசவில்லை என்பதும், ஆளும் கட்சி என்ற திமிரில் கழக உடன்பிறப்புகள் விலையைக் குறைக்கச் சொல்லி கலாட்டா செய்யாமல் கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"படையப்பா - முந்தைய வசூல் சாதனைகளையெல்லாம் உடையப்பா" என்று கலைஞரே வாழ்த்திவிட்டதால் வசூல் சாதனையை உடைக்க உதவி செய்வது நம் கடமை என்ற காரணத்தினால் எல்லா திரையரங்குகளிலும் கள்ளச் சந்தை விற்பனைக்கு உரிய பாதுகாப்பு அளித்தனர்.

ரஜினியின் புதுப்படம் வெளிவந்தால் கொஞ்ச நாட்களுக்கு கள்ளச் சந்தையில்தான் டிக்கெட் விற்கும் என்பது ஊரறிந்த சேதி. ஆனால் இந்தப் பணமெல்லாம் யாருக்குப் போகிறது? திரையரங்க முதலாளியும் உள்ளூர் ரசிகர் மன்றத் தலைவர்களும்தான் இந்தக் கொள்ளையைப் பங்கு போட்டுக் கொள்வதாக ரசிகர்கள் பலர் நினைக்கிறார்கள். இது உண்மையல்ல.

**ரஜினிக்கு ஒதுங்கியது 100 கோடி!**

உள்ளூர் ரசிகர் மன்றத் தலைவனுக்கு எலும்புத் துண்டு, திரையரங்க முதலாளிக்கு கறியோடு சேர்ந்த எலும்பு, ரஜினிக்கு எலும்பே இல்லாத கறி - என்ற


படிப்பகம்

www.padippakam.com

விகிதத்தில்தான் இந்தக் கள்ளச் சந்தைக் கொள்ளை பங்கு போடப்படுகிறது. படையப்பா படத்தில் ரஜினிக்கு ஒதுங்கியிருக்கக் கூடிய 'கறியின்' எடையை ரூபாய்க் கணக்கில் சொன்னால் சுமார் 100 கோடி ரூபாய். (பார்க்க: பெட்டிச் செய்தி)

இதைச் சொன்னவுடனே ஒரு கேள்வியை எதிர்பார்க்கலாம். ''20 ரூபாய் டிக்கெட்டை 500 ரூபாய் கொடுத்து வாங்குன்னு ரஜினி சொன்னாரா? 10 நாள் பொறுத்துதான் படம் பாக்குறது; உனக்கு திமிரு, வெறி. அதுக்கு அவரு என்ன செய்ய முடியும்?'' என்பதுதான் அந்த வழக்கமான கேள்வி.

அப்படிப் பார்த்தால் நாம் கொடுப்பதனால்தான் அரசியல்வாதி இலஞ்சம் வாங்குகிறான்; நாம் கவனக் குறைவாக இருப்பதனால்தான் திருடன் கொள்ளையடிக்கிறான் என்று வியாக்கியானம் செய்ய வேண்டியதுதான்.

ரசிகன் கண்டிக்கப்பட வேண்டிய முட்டாள்; ரஜினியோ தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளி.

ரசிகர்களின் வெறி தானாக உருவாவது அல்ல, உருவாக்கப்படுவது என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தாங்கள் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் தமிழக இளைஞர்கள் ரசிகர் மன்றம் வைத்துத் தங்களைத் தொல்லை செய்வது போலவும், வேறு வழியில்லாமல் தாங்கள் அதைச் சகித்துக் கொண்டு அவர்களை நல்வழிப்படுத்த முயற்சிப்பதைப் போலவும் பம்மாத்துக் காட்டுகிறார்கள் நடிகர்கள்.

**வெறி உருவாக்கப்படுகிறது!**

''விபச்சாரத் தரகன் - விடுதிக்காரன் - விலைமாதர்'' கூட்டணியைப் போல, ''சாராயக்கடை - சாக்கனாக் கடை - வட்டிக் கடை'' கூட்டணியைப் போல ''சினிமா கதாநாயகன், முதலாளிகள் - பத்திரிகைகள் - ரசிகர் மன்ற'' கூட்டணி வேலை செய்கிறது.

படம் வெளிவருவதற்கு முன்பே 'ரஜினி ரசிகன்' பத்திரிகை 8 படையப்பா சிறப்பிதழ்கள் வெளியிட்டுள்ளது; 15 இலட்சம் ரஜினி போஸ்டர்களை விற்றுள்ளது; ஆட்டோக்களில் ஒட்ட ரஜினி ஸ்டிக்கர்கள் இலட்சக் கணக்கில் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. படம் வெளி வருவதற்கு முன் தமிழ் தினசரிகளும் வார இதழ்களும் சினிமா செய்தி என்ற பெயரில் வெளியிட்ட 'படையப்பா' பட விளம்பரங்களுக்கு விளம்பரக் கட்டணத்தின் அடிப்படையில் கணக்கு போட்டால் பல கோடி ரூபாய் வரும்.

இவையன்றி ''பட பூசையில் உடைத்த தேங்காய்க்குள் பூ இருந்ததனால் வெற்றி உறுதி'' என்பன போன்ற சகுனச் செய்திகள்; ''அரசியலுக்கு வருவதைப் பற்றி இந்தப் படத்தில் தெளிவாக அறிவிக்கப் போகிறார்'' என்ற வதந்திகள்; படையப்பா படத்தை உலகெங்குமுள்ள பயங்கரவாதிகளை வைத்து ஜெயலலிதா தடுப்பதைப் போலவும் ரஜினி அதையெல்லாம் எதிர்த்து உயிரைப் பணயம் வைத்துப் போராடி, படத்தை வெளியிடுவது போலவும் கட்டுக் கதைகள்; படத்தின் கதை என்ன, கதாநாயகி யார் என்பது பற்றிய ரகசியத் தகவல்கள், புலனாய்வுகள்...

நத்திப் பிழைக்கும் பத்திரிகையாளர்கள் மூலம் ரஜினி கும்பல் திட்டமிட்டே உருவாக்கிய பரபரப்புகள் இவை. நக்கீரனால் நடத்தப்படும் 'ரஜினி ரசிகன்' முதல் அறிவாளிகளின் தினமணி வரை யாரும் இதற்கு விதிவிலக்கல்ல.

இவையனைத்தாலும் போதையூட்டப்படுவதனால்தான் திருச்சி பிளாஸ்டிக் வியாபாரியைப் போன்ற ரசிகர்கள் 5 வட்டி 10 வட்டிக்குக் கடன் வாங்கி சுவரொட்டி அடித்து ஒட்டுகிறார்கள்.

படத்தின் தயாரிப்புச் செலவு 5 கோடி ரூபாய்தான். ஆனால் தமிழகத்திலுள்ள ரசிகர் மன்றங்கள் ஒட்டிய சுவரொட்டிகளின் மதிப்பு 10 கோடி ரூபாயைத் தாண்டும். ஏப்ரல் 10-ம் தேதியன்று படையப்பா வெளி வருகிறது என்ற ஒரு நிகழ்ச்சியைத் தவிர என்ற தமிழகத்தில் ஒரு கல்யாணமோ, காதுகுத்தோ, கருமாதியோ, பொதுக் கூட்டமோ கூடக் கிடையாது என்பது போல எல்லா ஊர்களிலும் எங்கு திரும்பினாலும் படையப்பா சுவரொட்டிகள் மட்டுமே.

## கள்ளக் கணக்கு!

''படையப்பா திரைப்படத்தின் தயாரிப்புச் செலவு 5 கோடி ரூபாய். விற்பனை 30 கோடிக்கும் அதிகம் என்று உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. பட ஆடியோ காசெட் உரிமை 2.85 கோடிக்கும், வெளிநாட்டு உரிமை 1.80 கோடிக்கும் விற்கப்பட்டுள்ளது. படச்சுருள் 180 பிரிண்டுகள் போடப்பட்டுள்ளன'' - இவை படையப்பா புகழ்பாடும் இந்தியா டுடே வெளியிட்டுள்ள கட்டுரையில் காணப்படும் தகவல்கள்.

இந்தத் தகவல்களில் தயாரிப்புச் செலவு, விற்பனைத் தொகை போன்ற விவரங்கள் சந்தேகத்துக்கு உரியவையெனினும், 180 பிரிண்டுகள் என்பது ஆதாரபூர்வமானதே. இதனடிப்படையிலும், நாம் நேரடியாகக் கண்டறிந்த விவரங்களின் அடிப்படையிலும் ஒரு எளிய கணக்குப் போட்டுப் பார்ப்போம்.

180 பிரிண்டுகளில் வெளிநாடுகளுக்கு அனுப்பியவை போக 150 பிரிண்டுகள் 150 திரையரங்குகளில் வெளியிடப்படுகின்றன. குறைந்த பட்சம் படம் வெளியான முதல் மூன்று நாட்களில் 25 ரூபாய் மதிப்புள்ள டிக்கெட் 400 முதல் 500 ரூபாய்க்கு விற்கப்பட்டுள்ளது. குறைந்த பட்சமாகக் கணக்கிட்டாலும் ஒரு டிக்கெட்டுக்கு ரூ. 300 இலாபம்.

திரையரங்குகளில் 900 முதல் 1500 இருக்கைகள் உள்ளன. முதல் மூன்று நாட்களில் நின்று கொண்டும் தரையில் அமர்ந்தும் படம் பார்க்கும் ரசிகர்கள் பல நூறு பேர். இருப்பினும் 1200 இருக்கைகள் சராசரி எனக் கொள்வோம்.

ஒரு காட்சிக்குக் கள்ளச் சந்தை இலாபம் (ரூ. 300 x 1200) 3,60,000 ரூபாய். மூன்று நாட்களில் மொத்தம் 12 காட்சிகளுக்கு (ரூ. 3,60,000 x 12) 43,20,000 ரூபாய்.

அடுத்த ஒரு வாரத்திற்கு 100 ரூபாய் விலையில் டிக்கெட் விற்றதாகக் கொண்டாலும் ரூ. 75 வீதம் 84 காட்சிகளுக்கு கள்ளச் சந்தை இலாபம் 25,20,000.

மொத்தத்தில் முதல் 10 நாட்களில் ஒரு திரையரங்கின் கள்ளச் சந்தை இலாபம் 70 இலட்சம். 150 திரையரங்குகளுக்கு 105 கோடி ரூபாய்! அதற்கு மேல் இப்படம் 100 நாள் ஓடினால் அதன் இலாபக் கணக்கு தனி.

இந்தக் கணக்கு கூட மிகவும் குறைவு என்று நிரூபிப்பது போல தமிழன் எக்ஸ்பிரஸ் ஒரு செய்தி வெளியிட்டுள்ளது. படையப்பா படத்தின் திருட்டு வீடியோ பற்றி திரையரங்க முதலாளிகள் கவலைப்படவில்லையாம். ஏனென்றால் அவர்கள் போட்ட காசை, (அதாவது சுமார் 70 இலட்சத்தை) ஒரே வாரத்தில் எடுத்துவிட்டார்களாம்.

ரஜினியின் படத்துக்கு விநியோகஸ்தர் அவரேதான். படையப்பா படத்தின் தயாரிப்பாளரோ ரசிகர் மன்றத் தலைவர் சத்தியநாராயணன்.

இந்தக் கணக்கு தவறு என்றோ, வசூல் அவ்வளவு இருக்காது என்றோ விளக்கம் சொல்பவர்களுக்கு நம்முடைய பதில் ஒன்றுதான் - ஊழல் ராணியை எதிர்க்கும் யோக்கியர் கணக்கை பகிரங்கமாக சொல்லட்டும்!



படிப்பகம்

www.padippakam.com

இப்படிப் பல முனைகளிலிருந்தும் வெறியேற்றி விட்டபின் 20 ரூபாய் டிக்கெட்டை 500 ரூபாய்க்கு ஏன் வாங்குகிறாய் என்று கேட்பதும், சாராயத்தை ஊற்றி மேளம் அடிக்கவிட்டு ''ஏன்டா ஆடுகிறாய்'' என்று கேட்பதும், ஒன்று தான்.

**ரசிகர் மனற செயலரா, அரசு தலைமைச் செயலரா?**

உதிரியாக இருக்கும் ரசிகர்கள் மன்றமாக ஆக்கப்படுவதும், அவை பதிவு செய்யப்படுவதும், மாவட்டச் செயலர்கள் மேலேயிருந்து நியமிக்கப்படுவதும், அவர்கள் ஏதோ பன்னாட்டுக் கம்பெனியின் பிராந்திய அதிகாரி போல மாருதி கார் செல் ஃபோனுடன் அலைவதும் எதற்காக? கள்ளச் சந்தையில் டிக்கெட் விற்று ரஜினிக்கு கோடிக் கணக்கில் சுருட்டிக் கொடுக்கவும் மிச்சம் மீதியைப் பொறுக்கித் தின்னவும்தான்.

ஒரு சாதாரண மனிதனின் பொது அறிவுக்கு எட்டக் கூடிய உண்மைதான் இது. ஆண்டுக்கு ஒரு படம் நடிக்கும் ஒரு நடிகரின் (இப்போது இரண்டு ஆண்டுக்கு ஒன்று) 'அகில உலக' ரசிகர் மன்றத் தலைவர் சத்திய நாராயணன் மாவட்டந் தோறும் சுற்றுப் பயணம் செய்தபடி இருக்கிறாரே எதற்கு? குளம் வெட்டுவது, தூர் வாருவது, சாலை அமைப்பது போன்ற பணிகளில் ரசிகர் மன்றங்கள் ஈடுபட்டிருக்கின்றனவா, அவற்றைப் பார்வையிட இவர் சுற்றுப் பயணம் போகிறாரா?

படம் வராத காலத்திலும் கள்ளச் சந்தைத் தலைவர்களான மாவட்ட செயலர்கள் கலைந்து விடாமல் பார்த்துக் கொள்வது, அவர்களிடையிலான தகராறுகளுக்கு கட்டை பஞ்சாயத்து செய்வது, அன்னதானம், தையல் மிஷின், பாடப் புத்தக விநியோகம் போன்ற நாடகங்கள் மூலம் படம் வராத காலத்திலும் ரசிகர்களுக்குப் போதை இறங்காமல், கலைந்து விடாமல் பார்த்துக் கொள்வது - இது தான் அகில உலகத் தலைவரின் வேலை.

தமிழ்த் திரையுலகமே திவால் நிலையில் மூழ்கிக் கொண்டிருக்கும் போது ரஜினி படம் மட்டும் கோடி கோடியாய் குவிப்பதும், 50 நாள் ஓடிய படங்களெல்லாம் அசல் கூடத் திரும்ப வராமல் தடுமாறும் போது ரஜினி படம், போட்ட முதலையும் மூன்று மடங்கு இலாபத்தையும் முதல்நாள் வசூலிலேயே பார்த்து விடுவதும் இப்படித்தான்.

**வரி ஏய்ப்புக்கு அரசு உடந்தை!**

இனி பிரச்சினையின் இன்னொரு பக்கத்தைப் பார்ப்போம்.

திரையரங்க முதலாளிகளின் கஷ்டத்தைத் 'தாயுள்ளத்துடன்' பரிசீலித்து



'படையப்பா, வசூல் சாதனையை உடையப்பா!' - ரஜினிக்கு கருணாநிதி வாழ்த்து

10 ரூபாய் டிக்கெட்டை 15 ஆகவோ, 20 ஆகவோ விருப்பம் போல ஏற்றிக் கொள்ள ஏற்கனவே அனுமதித்திருந்தார் ஜெயலலிதா.

தற்போது சூப்பர் ஸ்டார், சுப்ரீம் ஸ்டார் போன்ற கலைஞர்களின் துன்பத்தைத் 'தாயுள்ளத்துடன்' பரிசீலித்து 500 ரூபாய்க்கு டிக்கெட் விற்க அனுமதித்திருக்கிறார் கலைஞர்.

500 ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்குபவன் திமிரெடுத்தவன் என்றே வைத்துக் கொள்வோம். அதற்குரிய கேளிக்கை வரி வசூலிக்கக் கூடாது என்று ரசிகன் தடுத்தானா? சிறு வியாபாரிகளின் ரத்தம் குடிக்கும் வணிக வரித் துறை அதிகாரிகள் யாருக்கும் இந்த வரி ஏய்ப்பு பற்றி தெரியவே தெரியாதா?

5 கோடி ரூபாய் படம் 30 கோடிக்கு விற்றதாக இந்தியா டுடே எழுதுகிறது. 60 இலட்சம், 70 இலட்சம் முன்பணம் கொடுத்தாக திரையரங்க முதலாளிகள் சொல்கிறார்கள். 60 இலட்சத்தை 180-ஆல் (180 பிரிண்டுகள்) பெருக்கினால் கிடைப்பது 108 கோடி என்ற பெருக்கல் கணக்கு வருமான வரித் துறை, வருவாய் புலன் ஆய்வுத் துறை அதிகாரிகளுக்குத் தெரியாதா? இதை ஆயாமல் அவர்கள் முட்டைக்கு முடி ஆய்ந்து கொண்டிருக்கிறார்களா?



'சட்டப்படி கொள்ளையடிக்க உதவுங்கள்' ★நடிகர் சரத்குமார்★

மின்சார வரி கட்டவில்லையென்றால் மறுநாளே பியூஸ் கட்டையைப் பிடுங்கும் அரசு, கோடிக் கணக்கில் வரி ஏய்க்கும் ரஜினியிடம் எதைப் பிடுங்கப் போகிறது?

''அளவுக்கதிகமா ஆசைப்பட்ட ஆணும், அளவுக்கதிகமா கோப்பப்பட்ட பெண்ணும் நன்றாக வாழ்ந்ததா சரித்திரமில்லே'' என்பது படையப்பாவின் கைதட்டல் பெறும் வசனம். 5 கோடி ரூபாய் முதல் போட்டு 100 கோடி கொள்ளையடிப்பது ரொம்பவும் அளவான ஆசை போலும்!

**முதலாளிகள் - ரஜினி கூட்டு சதி!**

கள்ளச் சந்தை லாபமொன்றையே குறியாகக் கொண்ட இந்தக் கொள்ளைக் கூட்டம் எந்த அளவுக்கு இரக்கமற்றது, நரித்தனமானது என்பதை நிரூபிக்கும் விதமாக தினமலர் நாளிதழில் ஒரு செய்தி வெளிவந்தது.

படையப்பா வெளியாவதற்குச் சில நாட்கள் முன்னதாகத் திரையரங்கு முதலாளிகள் ரஜினியைச் சந்தித்தார்களாம். ''படம் வெளியாகும் நாளன்று வணிக வரித்துறையின் கெடுபிடி இருக்குமென்று ஒரு வதந்தி. உங்களுக்கு இலட்சக் கணக்கில் கொடுத்து படத்தை வாங்கியிருக்கிறோமே, கள்ளச் சந்தையில் டிக்கெட் விற்காவிட்டால் நாங்கள் கரையேற முடியாதே'' என்று புலம்பினார்களாம்.

அதே நேரத்தில் டி. ராஜேந்தர், சரத்குமார் ஆகிய தி.மு.க. பிரமுகர்களின் படங்களும் வெளியாவதால் பிரச்சினை நமக்கும் பிரச்சினை எதுவும் இருக்காதென்றும், ''யாமிருக்க பயமேன்?'' என்றும் சமாதானம் சொல்லியனுப்பினாராம் படையப்பா.

மீண்டும் வந்தார்கள் திரையரங்க முதலாளிகள். ''கள்ளச் சந்தை விலை அதிகமாக இருந்தால் நாங்களே அதிகாரிகளுக்குப் புகார் செய்வோம் என்று ரசிகர்கள் மிரட்டுகிறார்களே'' என்று மன்றத் தலைவர் சத்திய நாராயணனிடம் புலம்பினார்களாம். ''திரையரங்க முதலாளிகளிடம் யாராவது தகராறு செய்தால் உடனே அந்த மன்றங்களையே கலைத்து விடுவேன்'' என்று சம்பந்தப்பட்ட ரசிகர் மன்றங்களை மிரட்டினாராம் அகில உலகத் தலைவர்.

இந்த ரகசியம் தஞ்சையின் தெருவுக்கு வந்துவிட்டது. ரசிகர் மன்றக் காட்சி என்று வழக்கமாகத் தரப்படும் சலுகைகூடத் தங்களுக்குத் தரப்படவில்லை என்று திரையரங்கத்துக்கு எதிராக சாலை மறியல் நடத்தினார்கள் ரசிகர்கள். தர வேண்டாம் என்று உத்தரவு போட்டவனே தங்கள் தலைவன்தான்


படிப்பகம்

www.padippakam.com

என்ற உண்மை அந்த மூடர்களுக்குத் தெரியவில்லை.

கொடி தோரணம் கட்டி, சொந்த செலவில் போஸ்டர் ஒட்டி, பச்சை குத்தி, மொட்டை போட்டு, அலகு குத்தி ஆடும் ரசிகன் அடிமுட்டாளாகவே இருக்கட்டும். இத்தனையும் செய்ததற்கு கைம்மாறாகக்கூட ஒரு டிக்கெட்டை உள்ள விலையில் கொடுக்க முடியாது; கள்ள விலையில் 400, 500 கொடுத்துத் தான் வாங்கவேண்டும் என்று சொல்லும் இந்தக் கும்பலை பிணந்தின்னி என்பதா ஓநாய் என்று அழைப்பதா?

ஏமாளி ரசிகர்களைக் கொள்ளையடிப்பது, வரி ஏய்ப்பு செய்வது ஆகியவை பற்றியெல்லாம் இந்தக் கள்ளச்சந்தைக் கதாநாயகர்களான ரஜினி, கமல், சரத், விஜய், விஜயகாந்த் ஆகியோருக்கு கடுகளவு உறுத்தல் கூட இருக்காதா? இந்தக் கேள்விக்கு 13.1.99 தேவி வார இதழில் தெளிவாகப் பதில் சொல்கிறார் சரத்குமார்.

**ஏழைகளைக் கொள்ளையடிக்க உதவுங்கள்! - சரத்குமார்**

"பெரிய பெரிய ஆர்ட்டிஸ்டுகளின் படங்கள் ரிலீஸ் ஆகும்போது நாலு வாரம் ஐந்து வாரம் ப்ளாட்டா போடும் போது, (அதாவது 20 ரூபாய் டிக்கெட்டை 400-க்கு விற்கும்போது) அதன் கலெக்ஷன் ரேஞ்சே வேற! அதனால்தான் டிஸ்டிரிபியூட்டர்கள் தயாரிப்பாளர்களுக்கு 'ஹெவி அமவுண்டு' அட்வான்ஸ் கொடுத்து புக் பண்ணி விடுகிறார்கள். இந்த அமவுண்டை பட ரிலீஸின் போது நாலைந்து வாரங்களில் எடுத்து விட முடியும். நார்மல் ரேட்டுல, படம் ஓடினால் போட்ட பணத்தை எடுக்கிறது ரொம்பவும் கஷ்டம். ரொம்ப நாளாகும். ரிஸ்க்கும் கூட!"

"அதனால் நமது முதல்வர் கலைஞர் கருணையுடன் புதிய வழியைக் கண்டுபிடித்து சினிமாவை காப்பாற்ற வேண்டும். கட்டணத்தை உயர்த்துவது பற்றி கூட ஆலோசிக்கலாம். படம் ரிலீஸான தும் தங்கள் அபிமான நடிகனின் படத்தை என்ன விலை கொடுத்தாவது பார்க்கணும்னு துடிக்கிறவங்க லோகிளாஸ்லதான் இருக்காங்க. நாலஞ்சு வாரம் அடிச்சுப் பிடிச்சு வெறியோட அவங்கதான் படம் பார்க்க வருகிறார்கள். அதற்கு பிறகு கலெக்ஷன் இருப்பதில்லை! ஸோ... முதல் அஞ்சு வாரத்தை பெஸ்டிவல் சீசனா நினைச்சு ஒரு வழியை கலைஞர் காட்டவேண்டும்."

தன்னுடைய 'லோ கிளாஸ்' ரசிகனை ஏமாற்றவும் திருடவும் உரிமை வேண்டும் என்பதை இதைவிடப் பச்சையாகக் கேட்கமுடியுமா? படம் வெளியாகி 5 வாரத்திற்கு கள்ளச் சந்தையில் டிக்கெட் விற்கவும், வரி ஏய்ப்பு செய்யவும் சட்டப்படியே உரிமை வேண்டும் என்பதை இதைவிட வெளிப்படையாகக் கேட்க முடியுமா?

சரத்குமாரின் இந்தப் பேட்டி வெளியான தேவி (13.1.99) இதழ் "ரஜினி - சரத் இரகசிய சந்திப்பு" என்று இதற்குத் தலைப்பிட்டு, அவர்களது சந்திப்பில் ஏதோ மிகப்பெரிய அரசியல் முக்கியத்துவம் உள்ளதைப் போன்று எழுதுகிறது. "ஊரைக் கொள்ளையடிப்பது எப்படி" என்று சூப்பர் ஸ்டாரும் சுப்ரீம் ஸ்டாரும் இரகசியமாகத் திட்டம் போட்டால் அதற்கும் அரசியல் மரியாதை!

> தலைசிறந்த
> தமிழக காவல்துறைக்கு
> **நன்றி! நன்றி!!**
>
> திருட்டு வீடியோ திருடர்கள்
> மீது அதிரடி நடவடிக்கை
> எடுத்து வரும் சென்னை மாநகர
> காவல்துறை ஆணையர்
> **திரு. காளிமுத்து**
> அவர்களுக்கும் மாநகர காவல்
> துறையைச் சேர்ந்த
> அனைவருக்கும் **நன்றி!**
>
> இராமனாதபுரம் மாவட்டம்,
> கீழக்கரையில், கேபிள் டிவி
> ஆப்ரேட்டர் முரு[illegible]சன் கைது!
> உரிமையாளர் [illegible]துமைதீன்
> டி[illegible] திரு. R.சுந்தர், கீழக்கரை
> ஆய்வாளர் திரு.மங்களேஸ்வரன்,
> துணைஆய்வாளர் திரு.ஆனந்த்
> மற்றும் உடன் சென்ற
> காவலர்கள் அனைவருக்கும்
> **படையப்பாவின்**
> **நெஞ்சார்ந்த நன்றி!**

*கள்ளச் சந்தைக்குப் பாதுகாப்பு*
திருட்டு விடியோவுக்கு வலைவீச்சு
*போலீசு-படையப்பா கூட்டணி*

**கால் திருடனைப் பிடி முழுத் திருடன் பரிசு தருவார்!**

கள்ளச் சந்தையில் ரசிகன் டிக்கெட் வாங்க வேண்டும்; அரங்கு நிறைந்த காட்சிகளாக படம் ஓடவேண்டும் என்பதற்காக அவன் 15, 20 முறை திரும்பத் திரும்ப அதே படத்தைப் பார்க்க வேண்டும்; ரசிகன் என்ற பிராணியின் கடமை அதோடு முடியவில்லை. திருட்டு காசெட், வீடியோ, சி.டி.யையும், ஒளிபரப்பும் கேபிள் டி.விக்காரனையும் பிடித்துத் தரவேண்டுமாம். தகவல் தரும் ரசிகருக்கு சூப்பர் ஸ்டார் கையால் 25,000 பரிசு தரப்படுமாம்.

தமிழகத்தைத் திருட எனக்கு மட்டும்தான் உரிமை உண்டு என்பதுதானே இதற்குப் பொருள்!

படையப்பா ஓடுகின்ற திரையரங்குகளில் கள்ளச் சந்தை டிக்கெட் விற்றதாக ஒரேயொரு ஆளைக்கூடப் பிடிக்காத காவல்துறை, திருட்டு வீடியோவை வலைவீசிப் பிடிக்கிறது. அந்த போலீசு அதிகாரிகளை பத்திரிகையில் விளம்பரம் கொடுத்துப் பாராட்டுகிறார் 'படையப்பா'.

**தாலி அறுத்த காசில் தருமம் செய்கிறார் எசமான்!**

படையப்பாவின் வருமானம் சிந்தாமல் சிதறாமல் தன் கைக்கு வந்து சேர வேண்டும் என்று ரஜினி இப்படி அரும்பாடு படுவதற்குக் காரணம் இருக்கிறதாம்.

"இந்தப் படத்தின் மூலம் வரும் வருவாயை வைத்து கல்வி அறக்கட்டளை தொடங்கப் போறதா அறிவிச்சிருக்கார் ரஜினி சார். இதன் மூலம் பணக் கஷ்டப்படுகிற ஏழை மாணவர்கள் கல்வி அறிவு பெற முடியும். அவர்களின் குடும்பம் தழைக்கும். ரஜினி என்கிற நல்ல உள்ளத்திடம் உள்ள இந்த உன்னத எண்ணம் ஈடேறணும். அதற்காக இந்தப் படம் மாபெரும் வெற்றியடையணும்." (சத்திய நாராயணன் பேட்டி)

கந்து வட்டிக்குக் கடன் வாங்கி, பெண்டாட்டி நகையை அடமானம் வைத்து, பாத்திரம் பண்டத்தை விற்று, வீட்டில் காசைத் திருடி... எதையாவது செய்து கள்ளச் சந்தையில் டிக்கெட் வாங்கி அந்த 'நல்ல உள்ளத்திடம்' 100 கோடி ரூபாயைக் கொடுத்தால், அதை வைத்து அவர் ஏழை மாணவர்களுக்கு 'உதவி' செய்வாராம்.

எவ்வளவு உதவி என்பதும் எல்லா பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்தில் வந்துவிட்டது. ஒரு மாவட்டத்துக்கு ஒரு இலட்சம் வீதம் 29 இலட்ச ரூபாயை அள்ளிக் கொடுத்திருக்கிறார். 100 ரூபாய் திருடி 30 காசு இனாம். பழனி படிக்கட்டுப் பிச்சைக்காரனிடம் கையேந்தினால் கூட அதிகம் கிடைக்கும். இந்த 29 இலட்சம் தருமத்துக்கு பத்திரிகை செய்திகள் தந்த விளம்பரத்தின் மதிப்பு 30 இலட்சம் இருக்கும்.

ஒவ்வொரு திருடனும் கிடைக்கின்ற முதல் சந்தர்ப்பத்திலேயே வள்ளலாக மாற விரும்புகிறான். பிறகு வள்ளலோ அதிகாரபூர்வமாக ஊரைக் கொள்ளையடிக்கும் பொருட்டு விரும்பும் வள்ளலோ முதல்வராக விரும்புகிறான்.

"என் ஒரு துளி வியர்வைக்கு ஒரு பவுன் தங்கக் காசு கொடுத்தது தமிழ்லவா" என்று பாடுகிறார் படையப்பா. முற்றிலும் உண்மை! ஆனால், அந்தத் தங்கம் ஊர் தாலியறுத்த தங்கம்!

• சூரியன்

www.padippakam.com

# தமிழ்க் கல்விக்கு தடைகள் எவை?

இந்த நாட்டில் நவீனக் கல்வி, பொதுக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டு ஆகிறது. இங்கே பயிற்றுமொழி எதுவாக இருக்கவேண்டும் என்கிற வாதப் பிரதிவாதம் அப்போதிருந்தே தொடர்கிறது.

1854 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சார்லஸ் உட் என்பவர் தலைமையிலான ஒரு குழு அப்போது பின்வருமாறு பரிந்துரைத்தது. ''தொடக்கக் கல்வியை ஆங்கிலத்தின் வாயிலாகவோ, இந்தியமொழிகளின் வாயிலாகவோ கற்றுத்தரலாம். கல்லூரி அளவில் இப்போதைக்கு ஆங்கிலமே இருக்கட்டும். ஆனால் நவீன இந்திய மொழிகளில் கற்பிப்பதற்குரிய வகையில் அவற்றைத் தகவமைக்க ஊக்குவிக்க வேண்டும்.''

அன்றைய ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இன்றைய முத்தமிழ்வித்தகர் கருணாநிதி ஆட்சிவரை எவ்வளவோ ஆட்சியாளரும் கல்வியாளரும் வந்துபோயினர். ஆனால் சார்லஸ் உட் குழுவின் பரிந்துரைதான் இன்னமும் அமலில் இருக்கிறது.

1965 மொழிப்போர் தியாகிகளின் நினைவையொட்டி 1968 இல் சட்டமன்றத்தில் உரையாற்றிய திராவிட முன்னேற்றக் கழக நிறுவனரும் மாநில முதலமைச்சருமான அண்ணாத்துரை தமிழக மக்களுக்குப் பின்வருமாறு வாக்குறுதியளித்தார், ''தமிழகத்தில் தமிழ் பயிற்றுமொழியாகவும் பாடமொழியாகவும் எல்லாக் கல்லூரிகளிலும், நிர்வாக மொழியாக பல்வேறு துறைகளிலும் ஐந்தாண்டு காலத்திற்குள் நடைமுறைக்கு வருவதற்கான துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.''

மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தி, ''அடுத்த ஆண்டிலேயே சர்க்கார் கல்லூரிகள் அனைத்திலும் தமிழ்பாட மொழியாக்கப்படும்..... அதுமட்டுமல்ல. ஆங்கிலப் பிரிவு அகற்றப்படும்'' என்று வாக்களித்தார்.

அண்ணாத்துரையின் வாரிசுகளான இரண்டு திராவிடக் கட்சிகள்தாம் கடந்த முப்பதாண்டுகளாகத் தமிழ்நாட்டை ஆண்டு வருகின்றன. ஆனால் அவரது வாக்குறுதி என்ன ஆனது? தமிழ் மக்களை ஏய்ப்பதற்காக அவ்வப்போது பயன்படுத்தப்படுகிறது. மற்றபடி தமிழைப் பயிற்றுமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் ஆக்கும் கொள்கை திராவிடக் கட்சிகள் ''அகில இந்தியத் தேசியத்தோடு ஐக்கியமான'' பரிணாம வளர்ச்சியோடு கரைந்து போனது.

இந்தக் காலம் முழுவதும தமிழ்வழிக் கல்விக்கான கோரிக்கையைப் பல்வேறு தமிழ் அறிஞர்களும் ஆர்வலர்களும் அமைப்புகளும் வலியுறுத்தி வந்திருக்கின்றன. அந்த வரிசையில் ''தமிழ்ச் சான்றோர் பேரவை'' என்னும் அமைப்பின் தலைமையில் பலபத்துக் குழுக்கள் திரண்டு, தமிழ் வழிக் கல்வியை வலியுறுத்தி, கடந்த ஏப்ரல் 25-ஆம் நாள் முதல் நூறு தமிழ் உணர்வாளர்கள் தலைநகர் சென்னையில் ''சாகும்வரை பட்டினிப்போர்'' துவங்கினர். இப்போராட்டத்திற்கு தலைமையேற்க இருந்த சிலம்பொலி செல்லப்பனார், முதல் நாளன்று முதல்வர் விடுத்த வாக்குறுதி அறிக்கையை ஏற்று விலகிக் கொண்டார்.

தமது கோரிக்கை குறித்து தெளிவான, திட்டவட்டமான உறுதிமொழி தராத கருணாநிதியின் வேண்டுகோளை ஏற்க மறுத்த போராட்டக் குழு ''சாகும் வரை பட்டினிப்போரை''த் தொடங்கியது. அமைச்சர் தமிழ்க் குடிமகனுடன் பேச்சு வார்த்தையும் தொடங்கி, அவர் அளித்த வாக்குறுதிகளை ஏற்று அடுத்த நாளே ''பட்டினிப்போரை'' முடித்துக் கொண்டது.

உடனடியாகவே ஒரு வல்லுநர் குழு அமைத்து, அதன் பரிந்துரை அடிப்படையில் வரும் கல்வி ஆண்டில் தமிழைப் பயிற்று மொழியாக்குவதில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பது என்பதுதான் தமிழக அரசின் வாக்குறுதி. அதன்படி குழுவும் அமைக்கப்பட்டுவிட்டது. தமிழக அரசின் முயற்சிகளை எதிர்த்து ஆங்கிலப் பள்ளிகள் நடத்துவோர் உயர் நீதிமன்றத்தில் வழக்கும் போட்டுவிட்டனர். தமது போராட்டம் மாபெரும் வெற்றியடைந்து விட்டதாக த.சா. பேரவை அறிவித்திருக்கிறது.

தமிழ்வழிக் கல்விக்கான கோரிக்கை வெறுமனே கல்வி மற்றும் மொழி உரிமைப் பிரச்சினை மட்டுமல்ல. இது உண்மையில் அரசியல் பொருளாதாரம், பண்பாடு மற்றும் சமூகப் பிரச்சினையாக உள்ளது. இந்தத் தளங்களிலான ஆக்கபூர்வமான, சரியான உறுதியான போராட்டமின்றி, குறிப்பான எதிரிகளை எதிர்க்காமல் பிரச்சினையின் மையப் பகுதியை நோக்கித் தாக்குதல் கொடுக்காமல், தொடுகோடு வரைவது போல் வெறுமனே தொட்டுக் கொண்டு போவதாகவே இந்த இயக்கம் இருக்கிறது.

''இந்த இயக்கம் அரசுக்கும் வேறு யாருக்கும் எதிரானதல்ல; ஆங்கிலக் கல்விக்கும் எதிரானதல்ல; தமிழ்ச் சமுதாயத்தில் ஆங்கில மோகம் எப்படி வந்ததெனத் தெரியவில்லை'' என்று போராட்டத் தலைமையே அறிவித்துள்ளது.

அது மட்டுமல்ல. தமிழ்வழிக் கல்வியை உதடளவில் ஆதரித்துவிட்டு உண்மையில் அதற்கு எதிரான கொள்கையைக் கடைப்பிடிக்கும் பா.ஜ.க., த.மா.க. மற்றும் போலி மார்க்சிஸ்டு ஆகிய கட்சிகளின் ஆதரவைத் தேடிப் போய் மூக்குடைபட்டது. முதலில் இயக்கத்தில் பங்கேற்ற போலி மார்க்சிஸ்டுகள், இந்த இயக்கமே பிரிவினைவாத தன்மையுடையது என்று குற்றஞ்சாட்டி விலகிக் கொண்டது. இந்தித் திணிப்புக்கு காரணமான காங்கிரசின் பாரம்பரிய உரிமை பாராட்டும் த.மா.க. தலைவர் போராட்டத்தையே கைவிடும்படி கோரிக்கை விட்டார். சமசுக்கிருத மயமாக்கப்பட்ட இந்தி திணிப்பை வெறியோடு வலியுறுத்தும் பா.ஜ.க., சமசுக்கிருத ஆண்டு, சரசுவதி வந்தனம் என்று இந்துவெறி பாசிச-பார்ப்பன பா.ஜ.க.வின் ஆதரவை நாடியது. இவையெல்லாம் இந்த இயக்கத்தின் சமரசப் போக்கையே காட்டின.

''தமிழில் கல்வி வேண்டும்! தமிழில் படித்தோர்க்கு வேலை வேண்டும்!'' என்ற கோரிக்கை சரியானது, அவசியமானது தமிழ் மக்களின் நியாயமான அடிப்படை உரிமையாகும். அதை அடைவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளை தமிழ் மக்கள் அனைவரும் வரவேற்கவும், ஆதரிக்கவும் வேண்டும். அதேசமயம் இந்தக் கோரிக்கை முழுமையாக வெற்றியடைய இன்னும் நாம் நீண்ட தூரம் போக வேண்டும்.

தமிழ் வழிக் கல்விக்கான கோரிக்கை வெறுமனே கல்வி மற்றும் மொழி உரிமைப் பிரச்சினை மட்டுமல்ல. இது உண்மையில் அரசியல், பொருளாதாரம், பண்பாடு மற்றும் சமூகப் பிரச்சினையாக உள்ளது. இந்தத் தளங்களிலான ஆக்கப்பூர்வமான, சரியான போராட்டம் தேவை. குறிப்பான எதிரிகளை எதிர்க்காமல், பிரச்சினையின் மையப் பகுதியை நோக்கித் தாக்குதல் தொடுக்காமல், தொடுகோடு வரைவது போல் வெறுமனே தொட்டுக் கொண்டு போகும் எந்தவொரு இயக்கமும் வெற்றி பெறாது.

குறிப்பாக, தமிழ் வழிக்கல்விக்குத் தடையாக இருக்கும் காரணங்கள் எவை? அதற்கு எதிரான சக்திகள் எவை? தமிழ் வழிக் கல்விக்குத் தடையான காரணங்களை அகற்றவும், அதற்கு எதிரான சக்திகளை முறியடிக்கவும் போராடாத இயக்கம் எதுவும் அதன் இலக்கை எட்டவே முடியாது.

1. அடுத்தடுத்து வந்த மாநில அரசுகள், குறிப்பாக திராவிடக் கட்சிகள் தமிழ் வழிக் கல்வியைக் கொண்டு வருவதற்காக

www.padippakam.com

மேற்கொண்ட முயற்சிகள் அரை குறையானவை; அவை அதற்காகத் தகுந்த அக்கறை காட்டவில்லை. அதுமட்டுமல்ல, தாய்மொழி வழிக் கல்விக்கான உரிமையை மத்திய அரசிடம் பறிகொடுத்துவிட்டன. இனி, கல்வித் துறை அதிகார உரிமையைப் பெறாமல் தாய்மொழி வழிக் கல்வியைக் கொண்டு வருவது சாத்தியமில்லாத நிலையே உள்ளது.




2. இந்தி அல்லது ஆங்கில மொழி வழிக் கல்வி தவிர வேறு மாநிலத் தாய்மொழி வழிக் கல்வியைப் புகுத்தமுடியாதவாறு அடுத்தடுத்து வந்த மத்திய அரசுகள் நடவடிக்கை எடுத்துவிட்டன. ஏற்கனவே மாநில அரசுகளிடம் இருந்த கல்வித்துறை அதிகாரங்களை மத்திய அரசு பறித்துக்கொண்டுவிட்டது. இந்திபேசாத மாநில மக்கள் தமது தாய்மொழியைப் பயிற்றுமொழியாகக் கொள்வதை முற்றாகத் தடுக்கும் நோக்கத்துடனேதான், இந்தி மற்றும் ஆங்கிலமொழி கல்வியைக் கொண்ட ''நவோதயா'' பள்ளிகளைத் திறந்து, அவற்றையே ''முன் மாதிரி'' களாகக் கொள்ளுமாறு மத்திய அரசு திணிக்கிறது.

3. முன்பு, அரசுத்துறை மற்றும் அறக்கட்டளைகள் என்கிற பெயரில் சாதி,மத அமைப்புகளால் பெரும்பாலான கல்வி நிறுவனங்கள் நடத்தப்பட்டுவந்தன. அவற்றோடு இப்போது சுயநிதி, தன்னாட்சிக் கல்வி நிறுவனங்கள் புற்றீசல்கள் போலப் பெருகிவிட்டன. கள்ளச்சாராய வியாபாரிகள் முதல் ஓட்டுப்பொறுக்கி அரசியல்வாதிகள் வரை பல்வேறுவகையான சமூக விரோத சக்திகள் கொள்ளையடிக்கும் நிறுவனங்களாகவே கல்வி நிலையங்கள் விளங்குகின்றன. குறிப்பாக ''நர்சரி'' எனப்படும் மழலையர் பள்ளி முதல் ''மெட்ரிக்'' எனப்படும் மைய, மாநில வாரியங்களின் அங்கீகாரம்பெற்ற உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் கொழுத்த இலாபம் ஈட்டக்கூடிய வணிக நிறுவனங்களாக முளைத்துவிட்டன. இவர்களின் பகற்கொள்ளைக்கு ஆங்கில வழிக் கல்வியும், இந்திப்பாட வகுப்புகளும் கவர்ச்சியும், மதிப்புமளிக்கிறது.

4. பத்திரிக்கைகள், சினிமா, வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகிய மக்கள் திரள் செய்தித் தொடர்பு சாதனங்கள் எல்லாமே ஆங்கில மோகத்தைப் பரப்புவதோடு, தமிழைச் சீரழிப்பதையும் தொடர்ந்து செய்து வருகின்றன. இதற்குக் காரணம் பார்ப்பன ஆதிக்க சக்திகள் மட்டுமல்ல, ''தமிழர்கள்'' நடத்தும் நிறுவனங்களும் அந்த முறைகளையே பின்பற்றுகின்றன. செய்திப் பத்திரிக்கைகள் பலவும் கோட்டுப்பை கதைப் புத்தகங்களும் ஆங்கிலம் கலந்த மணிப் பிரவாள நடையிலேயே எழுதப்படுகின்றன. சினிமாப் பாடல்களும் வசனங்களும் ஒரு வித கழிசடை நடையிலேயே தரப்படுகின்றன. வானொலியில், வானொளியில் பிரமுகர்களின் பேட்டிகள் உட்பட பல நிகழ்ச்சிகளில் தொடர்ச்சியாகத் தமிழில் பேசுவதே கிடையாது. பெயருக்குத் தான் தமிழ் நிகழ்ச்சிகள். தமிழ், ஆங்கிலச் சொற்களைக் கோர்த்துப் பேசுவதும், சிறிது நேரத்தில் ஆங்கிலத்திலேயே பேசுவதும்தான் வழக்காக உள்ளது. நுனி நாக்கு ஆங்கிலப் பேச்சுப் பாணியிலேயே வானொளிகளில் தமிழைச் சிதைத்துக் குதறுகிறார்கள். கவிஞர் காசி ஆனந்தன் எழுதியதைப்போல ''தமிங்கலம்'' தான் இந்த மக்கள் திரள் ஊகங்களின் ஆட்சிமொழியாக உள்ளது.

5. பார்ப்பன மற்றும் மேல்சாதி மேட்டுக்குடியினரிடம் குடிகொண்டிருக்கும் ஆங்கில மோகம் தமிழ்வழிக் கல்விக்கும் பெருந்தடையாய் விளங்குகிறது. பரவிவரும் பொறுக்கி அரசியல் - கழிசடைப் பண்பாடு இதற்கு உறுதுணையாக அமைந்துள்ளது. மறைமலை அடிகள், காலம் முதல் ஆங்கில மற்றும் சமசுக்கிருதக் கலப்பில் இருந்து தமிழைத் தூய்மைப்படுத்தி வளர்ப்பதற்கான இயக்கம் வளர்ந்து, 1960-இன் இறுதியில் அதன் உச்சகட்டத்தை எட்டியது. அடுத்தடுத்து நடந்த உலகத் தமிழ் மாநாடுகளும் தொடர் முயற்சிகளும் இத்தப்பணியை முன்னெடுத்துச் செல்லும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அந்த முயற்சிகள் எல்லாம் கருச்சிதைவு அடைந்ததோடு, ஆங்கில - இந்தி மொழிக் கலப்பில் இருந்து காப்பாற்றவில்லை என்றால் தமிழே அழிந்துவிடும்; ஆங்கிலம் இந்தி போன்ற அந்நியப் பண்பாட்டுப் படையெடுப்பு, அதற்குத் தமிழர்கள் பலியாவது காரணமாக தமிழன் தன் பண்பாட்டு அடையாளத்தையே இழந்துபோகும் நிலை ஏற்படும். மாநகராட்சி முதல் உள்ளூராட்சிவரையிலான அமைப்புகள் மற்றும் அரசுத்துறைகளில் தமிழ்வழிக் கல்வியைக் கொண்ட பள்ளிகள் ஏராளமாக இருப்பினும் தமிழர்கள், குறிப்பாக நடுத்தர மக்கள், மற்றும் மேல்தட்டுத் தொழிலாளர்களே தமது மக்களை அவற்றில் சேர்ப்பதில்லை. இயலாத நிலையிலும் ஆங்கில மோகங்கொண்டு, ஆங்கில வழிக் கல்விக் கூடங்களிலேயே சேர்க்கின்றனர். கல்வியை மட்டுமல்ல, நம் வாழ்வின் அனைத்துத் துறைகளையும் ஆங்கில மோகம் ஆக்கிரமித்துள்ளது. அதன் வெளிப்பாடுதான் தமிழ்மொழி வழிக் கல்விநிராகரிப்பு ஆகும்.

இப்போது தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்திப் போராடிய த.சா. பேரவை தலைமையிலான போராட்டக்காரர்கள் மேற்கண்ட ஐந்தையும் ஒரு பெரும்பொருட்டாகக் கருதவில்லை. இவைகள் எல்லாம் தமிழ் வழிக் கல்விக்குத் தடைகளாக இருக்கும் துணைக் காரணங்கள்தாம் என்று ஒதுக்கிவிடுகின்றனர்.

ஏற்கனவே அரசுத்துறையிலும், கிராம, நகர, பெருநகர உள்ளூராட்சி அமைப்புகள் மூலமாகவும் நடத்தப்படும் கல்வி நிலையங்களில் வேண்டுமளவு தமிழ்வழிக் கல்விக்கான வகுப்புகள் - வாய்ப்புகள் இருக்கினறன. ஏற்கனவே 41, 417 அரசு சார்பான ஆரம்ப பள்ளியில் தமிழே பயிற்று மொழியாக உள்ளது. (2,402 பள்ளிகளில் மட்டுமே ஆங்கிலம் பயிற்று மொழியாக உள்ளது. இதுதவிர 100 சிறுபான்மையினர் பள்ளிகள் பிறமொழிகள் பயிற்று மொழியாக உள்ளன.) இவ்வளவு வாய்ப்புகள் இருந்தும் ஓரளவு மட்டுமே வசதியுள்ள பெற்றோர்கள்கூட தமிழ் வழிக் கல்விக் - கூடங்களில் தமது மக்களை சேர்க்க மறுப்பது ஏன்? ஆங்கிலவழிக்கல்வி நிறுவனங்களை நாடிப்போய் ஆயிரக்கணக்கில் செலவழிப்பதும் ஏன்?

பல்வேறு கல்லூரிகளிலும் தொடங்கப்பட்ட தமிழ்வழிக் கல்வி வகுப்புகளுக்கும் போதிய எண்ணிக்கையில்லான மாணவர்கள் சேராததால் அவை மூடப்பட்டனவே ஏன்? ஆங்கிலம் படித்தோர்க்கு மட்டும் வேலைவாய்ப்பிருப்பதாக மக்கள் தவறான எண்ணம் கொண்டிருப்பதனால் மட்டும்தானா? நடைமுறையில், வேலை வாய்ப்பு ஓரளவாவது கிடைத்துவரும் தனியார் துறைகளில் ஆங்கிலப் படிப்பு வலியுறுத்தப்படுவதில்லையா?

மருத்துவம் உட்பட உயர்கல்வி முழுவதையும் தனியாரிடம் ஒப்படைப்பது,


படிப்பகம்

www.padippakam.com

தன்னாட்சி, சுயநிதிக் கல்வி நிறுவனங்களை வரைமுறையின்றி அனுமதிப்பதே அரசுக் கொள்கையாக இருக்கும்போது, அதை எதிர்த்து முறியடிக்காமல் தமிழ்வழிக் கல்வி சாத்தியமாகுமா? எந்தக் கட்சி அரசானாலும் கடைப்பிடிக்கும் உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்க்காமல் தமிழ்வழிக் கல்வியை தனியான பிரச்சினையாகக் கருத முடியுமா?

ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்குமான விதியைத் தீர்மானிப்பவை எவை? அதைத் தாய்மொழியாகக் கொண்ட சமுதாயத்தின் பொருளாதார, அரசியல், அறிவியல் - பண்பாட்டுத் துறையிலான மாற்றங்கள் தாம். இவையின்றித் தனியே மொழியின் ஆராய்ச்சியும் வளர்ச்சியும் பயன்பாடும் சாத்தியப்படாது. நிர்வாக அமைப்புகளுக்கும் - உற்பத்திக்கும் தேவையான அலுவலர்கள் - தொழிலாளர்களை உருவாக்குவதற்கும் தான் காலனிய ஆட்சிக்காலத்தில் நவீன, பொதுக்கல்வி இந்த நாட்டில் புகுத்தப்பட்டது. பெருமளவில் இல்லாவிட்டாலும் கணிசமான அளவுக்கு இப்போது கல்வி பரவியுள்ளது. காலனிய ஆட்சி மற்றும் நிர்வாக முறையின் தொடர்ச்சியாக இன்றைய அரைக்காலனிய - தரகு அதிகார உற்பத்தி மற்றும் அரசியல் அமைப்பு நீடிப்பதும், 150 ஆண்டுகால அடிமை வாழ்வின் காரணமாகவும் நகர்ப்புற மேட்டுக்குடியிடம் தங்கிப்போன ஏகாதிபத்தியப் பண்பாட்டு மோகம், ஆங்கில மோகம் நீடிக்கிறது.




இந்துவெறி பாசிச–பார்ப்பன பா.ஜ.க., சான்றோர் பேரவையைப் பிரிவினைவாதிகள் எனக் குற்றஞ்சாட்டும் போலி மார்க்சிஸ்டுகள், இந்தி திணிப்பை ஏற்கும் த.மா.கா மூப்பனார் – போன்றவர்களின் ஆதரவை நாடியது, தமிழ்ச் சான்றோர் பேரவையின் சமரசப்போக்கையே காட்டுகிறது

ஆங்கிலேயப் பாதிரிமார்கள் உரைநடைத் தமிழை அறிமுகப் படுத்தியதில் துவங்கி பத்திரிகைகள், திரைப்படங்கள், வானொலி-வானொளி என்று பெருந்திரள் மக்கள் தொடர்பு சாதனங்கள் சமூகப் பண்பாட்டுத் தளத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இன்றைய நிலையில் பள்ளி - கல்லூரி-பல்கலைக்கழகக் கல்வியையும், பெருந்திரள் மக்கள் தொடர்பு சாதனங்களையும் கட்டுப்படுத்துபவர்களும் இயக்குபவர்களும்தான் நிகழ்காலத் தமிழ், வளரும் தமிழின் தன்மையைத் தீர்மானிக்கிறார்கள். அவர்கள் ஆங்கில, இந்திக் கல்வி மற்றும் பண்பாட்டு மோகத்தைப் புகுத்தும் அடிப்படையிலேயே சமுதாயத்தையும் மொழியையும் கூட இட்டுச் செல்கிறார்கள். அவர்கள் பழைய ''பண்டிதத் தமிழ்'' ''நாட்டுப்புற மக்கள் தமிழ்'' இரண்டுக்கும் மாறாக ஒரு நிகழ்காலத் தமிழை உருவாக்கி, வளர்க்கிறார்கள்.

இந்தப் போக்கு முழுவதும் காலனிய காலத்தில் இருந்தே சமூகம் சந்தைப் பொருளாதாரமயமாகி வருவதுடன் நெருக்கமாக இணைந்தது. விற்பனைக்காக சரக்குகளைத் தயாரிப்பதைப் போலவே கல்வி, அறிவியல் பயிற்சியும் பயன்பாடும் மாறிவிட்டது; பத்திரிகைகள், பதிப்பகங்கள், திரைப்படங்கள், நாடகங்கள், கலைநிகழ்ச்சிகள், வானொலி-வானொளி ஆகிய நிறுவனங்கள் நடத்துவதும், அவற்றின் கலை, இலக்கியப் படைப்புகளும் கூட வியாபாரத்துக்கானவையாகவே உள்ளன. ஒரு நூற்றாண்டு கால இடைவிடா, தீவிர முயற்சிக்குப் பிறகு அந்நிய மொழி பண்பாட்டுக் கலப்பில் இருந்து மீட்கப்பட்ட தமிழ் ஒரு பத்தாண்டுகளுக்குள்ளாகவே மீண்டும் மாசுபட்ட, சீரழிந்த, சிதைந்த தமிழாகத் திட்டமிட்டு மாற்றப்படுகிறது.

பாலகுமாரன் - பாக்கியராஜ், மதன் - சுதாங்கன் வாசந்தி-மாலன், பிரபுதேவா - ரகுமான், வாலி - வைரமுத்து, மணிரத்னம் - ஷங்கர் போன்றவர்களின் இலக்கியம், இசை, உரையாடல் அடங்கிய கலைதான் ''முத்தமிழ்'' — நிகழ்கால, வளரும் தமிழாக மக்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்போது, கள்ளக் கடத்தல்காரனும் சாராய வியாபாரியும் கல்வி நிறுவனங்களின்'' அறங்காவலர்கள்'' ஆகிவிட்ட போது தமிழறிஞர்களும் ஆர்வலர்களும் பழைய ''முத்தமிழ்'' ஆராய்ச்சி நடத்துவது தமிழர் பெருமை பேசிட மட்டுமே உதவும். ஆகவே, அவற்றுக்கு மாற்றாக புதிய, மக்கள் ஏற்கும் படைப்புகள் புரட்சிகரமான உள்ளடக்கத்துடன் உருவாக்கிட வேண்டும். 1965-இல் மாபெரும் தியாகங்கள் புரிந்து மொழிப்போர் நடத்திய தமிழ்ச் சமுதாயத்தின் அடுத்த தலைமுறையே ஆங்கில - இந்திக் கல்வி, பண்பாட்டு மோகத்தில் வீழ்ந்ததற்கான காரணத்தைக் கண்டு, புரிந்து கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல, பொருளுற்பத்தியும் இப்போது வெகுவாகப் பன்னாட்டுமயமாகி வருகிறது. அது இனம், மொழி ஆகிய எல்லைகளைக் கடந்த ஒரு பன்னாட்டு உழைப்பு மற்றும் விற்பனைச் சந்தைக்கான கல்வி, பண்பாட்டு நிறுவனங்களை உருவாக்கி வருகிறது. சுருக்கமாகச் சொன்னால், பன்னாட்டு-தேசங்கடந்த தொழில் கழகங்களின் தேவைக்கான நபர்களைத் தயாரிக்கும் சுயநிதி-தன்னாட்சி கல்வி நிறுவனங்களும் பன்னாட்டுப் பத்திரிக்கைகள், விண்கோள்வழி வானொளிகளும் தமிழ் மக்களின் பொருளாதார, கல்வி-பண்பாட்டு வாழ்வினைத் தீர்மானிக்கின்றன.

இந்த நிலையில் நமது கோரிக்கை, இயக்கம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்? பயிற்றுமொழிக் கொள்கை உட்பட கல்வித் துறையில் மத்திய அரசின் தலையீடு முற்றாக அகற்றப்பட வேண்டும். ஆரம்பப்பள்ளிக் கல்வி உட்பட அனைத்து மட்டத்திலும் ''மெட்ரிக் பள்ளிகள்'' பிற பள்ளிகள் என்று இரண்டு வர்க்க மாணவர்களை - இரண்டு வகுப்பு மக்களை உருவாக்கும் கல்விமுறை ஒழிக்கப்படவேண்டும். இலவச கட்டாய தமிழ்வழிக் கல்வி முறை புகுத்தப்பட வேண்டும். தமிழ் அறியாதவர்களுக்கு அரசுத் துறையில் வேலை தரக் கூடாது. அரசு நிர்வாகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் தமிழில் இருக்க வேண்டும். தனியார் துறையுடன் அரசுக்குள்ள தொடர்புகள் அனைத்தும் தமிழில் இருக்க வேண்டும். தமிழைச் சீரழித்து, ஆங்கில மோகத்தைப் பரப்பும் பத்திரிக்கைகள், சினிமா, வானொலி, தொலைக்காட்சி அமைப்புகள் மீது முற்றுகை - முடக்குதல் உட்பட எல்லா வழிகளிலுமான தாக்குதல் தொடுக்க வேண்டும். இது ஏதோ அதிதீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்கான முடிவாக முன்வைக்கப்படவில்லை. வேறுமொழி - நாகரீகமான தமிழ்மொழி அவர்களுக்குப் புரியாது, இதை அவர்கள் மதிப்பதில்லை, மறந்து போய்விட்டார்கள் என்பதற்காகச் சொல்கிறோம். ●

**தன்னாட்சி, சுயநிதிக் கல்வி நிறுவனங்களை வரைமுறையின்றி அனுமதிப்பதே அரசுக் கொள்கையாக இருக்கும் போது, அதை எதிர்க்காமல் தமிழ் வழிக் கல்வி சாத்தியமாகுமா?**


படிப்பகம்

www.padippakam.com



## பிரெக்ட் நூற்றாண்டு விழா:

# ஜெர்மனியிலிருந்து ஒரு மக்கள் கலைஞன்

பிரெக்டின் 'எமக்குப்பின் பிறந்தார்க்கு' என்ற கவிதைதான் அவர் பெயரைச் சொன்னவுடன் நினைவுக்கு வரும். பிரெக்டின் முக்கியமான அரசியல் கவிதைகளில் அது ஒன்று.

**"அவர்கள் சொன்னார்கள்:**
**'சாப்பிடு, பருகு'**
**கிடைத்ததே என்று சந்தோசப்படு'**
**எப்படி நான் தின்பேன், குடிப்பேன்!**
**எனக்கான சோறு பசித்தவரிடமிருந்து**
**பிடுங்கிக் கொடுக்கப்படுகிறதே;**
**கிடைக்கும் ஒரு குவளைத் தண்ணீரும்**
**தாகத்தால் துடிப்பவர் கையில்**
**இருக்கிறதே.**
**இருப்பினும் நான் தின்கிறேன்,**
**குடிக்கிறேன்."**

பிரெக்டு பெர்லின் நகரத்திற்கு வந்தபோது எங்கும் பசி, பட்டினிச் சாவுகள், மக்களின் கலகங்கள்; கலகம் செய்தவர்களோடு பிரெக்டும் சேர்ந்து கொண்டார். கிடைத்த நேரத்தில் கிடைத்ததைச் சாப்பிட்டார். எந்நேரமும் கொலை நிழல் அவரது உறக்கத்தின் மீது படர்ந்து கொண்டே இருந்தது. பேச உரிமை இல்லை, நடமாட உரிமை இல்லை. அதிலும் அரசியல் விமர்சகர் உண்மையைப் பேசினால் கசாப்புக்கு அனுப்பப்பட்டார். அரசியல் தொடர்புகளைச் சந்திப்பதற்குச் சென்றால் அநேகமாகச் சிறைக்குள் தள்ளப்படுவது நிச்சயம்; அல்லது சுட்டுக் கொல்லப்படலாம்.

ஜெர்மனியில் இட்லரின் கூலிப்படைகளின் அடக்குமுறை ஆட்சி பற்றி பிரெக்டு எழுதிய கவிதையே மேலே நீங்கள் படித்தது. அவர் கலை வேறு, வாழ்க்கை வேறு என்று வாழ்வதை வெறுத்தார்; அதனாலேயே பல பிரச்சினைகளை எதிர் கொண்டார். பிரெக்டு உள்ளுறையாக மறைத்து அரசியலை எழுதினாலும் அதை இட்லரின் உளவுப் படை விளங்கிக் கொண்டது. அவரது நூல்களைத் தேடிப் பிடித்து எரித்தது; தடை செய்தது; அவரது நாடகங்களுக்கு உயிர் கொடுத்து வந்த நாடக அரங்கம் பூட்டிச் சீல் வைக்கப்பட்டது.

தனது பதினாறாவது வயதிலேயே சமூக நோக்குள்ள கவிதை எழுதத் தொடங்கிய அவர் தனது வாழ்க்கையில் பல பிரச்சினைகளைச் சந்திக்கக் கூடும் என்று தெரிந்தே இப்படி முடிவு செய்திருந்தார். ஆரம்ப காலத்திலேயே, — "கவிதை என்பது நிரந்தரமாக நிலைத்து நிற்கும் தரத்தில் சுய அனுபவங்களைச் சொல்ல வேண்டும்; அன்றாட சமூக, அரசியல் பிரச்சினைகளைப் பற்றி எழுதினால், அவற்றின் வாழ்வு அற்ப சொற்பமாக முடிந்து போய்விடும்" என்ற கருத்தை அவர் ஏற்கவில்லை. தனது கவிதைகளுக்கு நிரந்தரத்துவம் தேவையில்லை, அதைப் படிப்பவர் ஏற்றுப் பயன்படுத்த வேண்டும், அந்தக் கருத்துக்களுக்கு செயல் உருக்கொடுக்க வேண்டும் என்று முடிவு கொண்டிருந்தார்.

முப்பதாம் ஆண்டுகளில் ஜெர்மானியக் கவிஞர்கள் சிலர் வறுமைக்கும் துயரத்துக்குமான காரணத்தை சமூகத்துக்கும் அப்பால் தேடி, தப்பித்து, விலகி வாழ்ந்தபோது, பிரெக்டும் அவரைப் போன்ற சிலரும் அதற்கான காரணங்களைச் சமூகத்திலேயே தேடினார்கள். பொருளாதாரச் சீர்குலைவே சமூக அவலங்களுக்கு அடிப்படை, இதற்குக் காரணம் முதலாளித்துவப் பொருளாதாரமே என்று மார்க்சிய தத்துவத்தை வழிகாட்டியாக மேற்கொண்டார்கள்.

தொழிலாளிகள் ஐரோப்பா முழுவதும் ஒரு பெரும் சக்தியாகத் திரண்ட அன்றைய சூழலில் பிரெக்டு போன்றவர்கள் 'நடைமுறைப் பாடல்கள்' என்ற வடிவத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். சாதாரணத் தொழிலாளிகளும் எளிதாகப் பாடுவதற்காகப் பாடல்களை எழுதினார்கள். தனி நபர்வாதக் கவிஞர்களுக்கு எதிராக அரசியல் கலகக் கொடி ஏற்றிய கலைஞர்களுக்கு பிரெக்டு தலைமை தாங்கினார் என்றே சொல்லலாம்.

தனிநபர்வாதிகள் தங்கள் கவிதைகளின் ஆழத்துக்காக, ரசனைகளுக்காக

படிப்பகம்

www.padippakam.com

## பிரக்டின் வாழ்க்கையிலே...

பெர்டோல்டு பிரெக்ட் - நாஜி இட்லரை குலை நடுங்க வைத்த கம்யூனிஸ்டு கலைஞர்களில் ஒருவர். முக்கியமாக ஒரு நாடகாசிரியர்; ஒரு கவிஞர். மக்கள் கலை படைத்த ஒரு பேனாப் போராளி.

1898-இல் ஜெர்மனியில் பிறந்த பிரெக்டு, தாயின் மதநம்பிக்கையில் வளர்க்கப்பட்டு பின் எந்த மத நம்பிக்கையுமில்லாதவராக முதிர்ச்சி பெற்று ஒரு கம்யூனிஸ்டு கொள்கைப் பற்றாளராக வாழ்ந்தார். முதல் உலகப் போர் நிகழ்ச்சிகள் அவருக்கு ஏகாதிபத்திய நரகத்தையும், சோசலிச ரசியா என்ற நம்பிக்கை மலர்ச்சியையும் ஒருங்கே அடையாளம் காட்டின.

1918-இல் இராணுவ மருத்துவ மனையில் சேவை செய்ய உதவியாளராக அவர் தெரிந்தெடுக்கப்பட்டார். அன்று ஜெர்மனி இளைஞர்கள் கட்டாய இராணுவ சேவை செய்தேயாக வேண்டும். அது 'தேச'ப்பணி. இதற்குப் பிறகு மருத்துவப் படிப்பைத் தொடர்ந்து முடித்தார். என்றாலும் ஜெர்மானிய இதயங்களின் மனநோய்க்கு மருந்துகாண கலை இலக்கியத்தையே வாழ்க்கையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

1942-இல் பிரெக்டு பெர்லின் நகருக்குச் சென்று அங்கு பத்தாண்டுகள் வாழ்ந்தார். 'டாய்ட்ஸ் தியேட்டர்' என்ற நாடக அரங்குடன் இணைந்து பல நாடகங்களை எழுதி இயக்கினார். இவ்வாண்டுகளில் அவர் மார்க்சியத்தை முறையாகப் படித்தார். பாட்டாளி வர்க்கத்தின் உலகக் கண்ணோட்டத்தைப் பயின்றதோடு நில்லாமல் அவர்களோடு வாழ்ந்து அவர்களின் போராட்டங்கள், நடப்பு அரசியல் நிகழ்ச்சிகளை நெருங்கிக் கவனித்தார்.

1928-இல் தொழிலாளிகளுக்காக நடத்தப்பட்ட 'மார்க்சியப் பள்ளி'க்குச் சென்று கற்றார். நாஜிகள் உருவாக்கி வந்த யுத்தம் பற்றி வர்க்க விழிப்பு தேவை என்பதைப் பிரச்சாரம் செய்தார். இக்காலத்தில்தான் எலன் வைகல் என்ற பொதுவுடமைப் பற்று கொண்ட நடிகையை மணந்தார். நாஜிகள் சர்வாதிகாரம் ஆட்சிக்கு வருவதற்குச் சில நாட்கள் முன்னமேயே ''வட்டத்தலைகளும் கோணத் தலைகளும்'' என்ற நாடகத்தின் மூலம் இட்லரின் 'தேசிய சோசலிஸ்டுகள்' பற்றிய முதல் எச்சரிக்கையை மக்களிடம் கொண்டு சென்றார்.

1933-இல் நாஜிகள் ஆட்சிக்கு வந்தனர். பிரெக்டின் மீது பாசிசக் காட்டுமிராண்டித் தாக்குதல் தொடங்கியது. அவரது புத்தகங்கள் எரிக்கப்பட்டன; 'டாய்ட்ஸ் தியேட்டர்' இழுத்து மூடி சீல் வைக்கப்பட்டது; அவரது ஜெர்மனியக் குடியுரிமை பறிக்கப்பட்டது. 1933-முதல் 41 வரை ஒன்பதாண்டுகளுக்கு ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், ஸ்வீடன், நார்வே போன்ற நாடுகளில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தார். டென்மார்க்கில் நீண்ட காலம் இருந்து, பிறகு அமெரிக்கா சென்று 1947 வரை வாழ்ந்தார். அந்தப் பத்தாண்டு காலமும் அரசியல் ரீதியில் பாசிச எதிர்ப்பு முன்னணிச் செயல் வீரராகத் திகழ்ந்தார். பாசிசம் வீழும் என்று அறிவிக்கும் வலிமை வாய்ந்த கவிதைகளை, நாடகங்களை இக்கட்டத்தில் தான் பிரெக்டு எழுதினார்.

1949-இல் கிழக்கு ஜெர்மனிக்குத் திரும்பிய பிரெக்டு 'பெர்லின் நாடகக் குழு'வை நிறுவினார். 1871-இல் பாரீசில் தொழிலாளர்கள் அமைத்த கம்யூனை நினைவு கொண்டு 'கம்யூன் நாட்கள்' என்று ஒரு நாடகத்தை எழுதினார். அதுவே அவரது கடைசி நாடகம்; போராட்டம் மிகுந்த ஒரு செழுமையான வாழ்க்கை வாழ்ந்த பிரெக்டு, 14 ஆகஸ்டு 1956 அன்று மறைந்தார்.

---

பழைய வடிவங்களிலிருந்தும் சரி, புதிய வடிவங்களிலிருந்தும் சரி 'உயர்ந்த' பாணியை கடைப் பிடித்தார்கள். அதற்கு நேர் எதிராக - பிரெக்டு ஜெர்மானிய நாட்டுப்புறப் பாடல்களைப் பயன்படுத்தி கதைப் பாடல்களை எழுதினார்.

அவரது பாடல்கள் போர்க்கள முழக்கமாயின; படைநடைப் பாடல்களாயின; அங்கத வீச்சு வாள்களாயின. அவரது கதைப் பாடல்கள் ஒரே ஒரு கித்தாரைப் பின்னணி இசையாக மீட்டி இசைக்கப்பட்டன - அவரே கித்தாரை மீட்டிப் பாடுவார். நடைமுறைப் பயன்பாடு என்ற அணுகுமுறையை வைத்து கலையின் புது அழகியலை உருவரக்கிக் கொண்ட பிரெக்டு இயல்பாகவே நாடகத்தின் பக்கம் இழுக்கப்பட்டார். அவரது கதைப் பாடல்கள் நாடக அரங்கிலும் இடம் பெற்றன.

நாடக அரங்கிலும், சினிமாவிலும் இசைப் பாடல்களைப் பயன்படுத்தினார். குர்த்வைல், ஹான்ஸ் ஐஸ்லர் போன்ற இசை அமைப்பாளர்களைக் கொண்டு இசையமைத்து இவர் அமைத்த பாடல்கள் சர்வதேச அளவில் தொழிலாளர் இயக்கங்களில் ஏற்றுப் பாடப்பட்டன. ஜெர்மனி, ரசியா, பிரான்ஸ், ஸ்பெயின் உள்நாட்டுப்போர், அமெரிக்கா போன்ற நாடுகளின் தொழிலாளர் வழி நடைப் பாடல்களாக அவை உருவாயின. ஒரு சில தொழில் விற்பன்னர்களின் அக்கறையாக இருந்த கவிதை பல இலட்சம் தொழிலாளர்களை முடுக்கி, தூண்டி, உணர்வூட்டி இயக்கிய ஜனரஞ்சகமான பாடல்களாயின.

அவரது பேனாவிலிருந்து பல நாடகங்கள் பிறந்தன. அவை அன்றைய அரசியல் பற்றிய கூர்மையான அங்கத - நகைச்சுவை நாடகங்களாகவோ அல்லது முதலாளித்துவச் சந்தையைத் திரைகிழிக்கும் விமர்சன அரசியல் நாடகங்களாகவோ இருந்தன. 'எடுத்த நடவடிக்கைகள்', 'சந்தையின் புனித ஜோன்', கார்க்கியின் 'தாய்' நாவலின் நாடக வடிவம், 'மூன்று பென்னி (ஜெர்மானிய நாணயம்) இசை நாடகம்', 'வட்டத் தலைகளும் முக்கோணத் தலைகளும்' (ஒருவரின் இனத்தை வைத்து அவர் குலத்தைத் தீர்மானிக்கும் இட்லரின் இனவெறி அரசியலைக் கிழித்தெறியும் அங்கத நாடகம்), 'வெள்ளை வட்டம்' (உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற கருத்து), 'கலிலியோ' (பூமி உருண்டை என்று முடிவெடுத்ததற்காக கிறித்தவ மதத் தலைவர்களால் சித்திரவதைக்குள்ளாகும் கலிலியோ வாழ்க்கை பற்றி) - இப்படிப் பல நாடகங்கள் காவிய பாணியில் படைக்கப்பட்டன.

பிரெக்டு விஞ்ஞான யுகத்திற்கேற்ப தன் நாடக மேடையை அமைப்பதாகச் சொன்னார். ''விஞ்ஞானம் என்பது நேருக்கு நேர் மோதுதலைக் கொண்ட அறிவுத் தேட்டம்.... அதுபோல, நாடகக்காரர்களான நாம் விஞ்ஞானத்துக்கு முந்திய அஞ்ஞான யுகத்தில் இருப்பது போல் நடக்க முடியாது. பார்வையாளர்கள் நுழை வாயிலேயே தங்கள் மூளைகளை கழட்டி விட்டு வரும்படி நாம் கோர முடியுமா? - அது வெட்கக் கேடானது, அதேநேரம் அபாயகரமானதும் பொறுப்பற்றதும் கூட.''

சமூகத்தை, அரசியலை விளங்கிக் கொள்வதும், அதை மாற்றுவதற்கான உந்துதலைப் பெற்றுக் கொள்வதும் நாடக மேடையிலிருந்தும் நடக்க வேண்டும். இதற்கேற்ற 'காவியபாணி' என்றொரு பாணியை, வடிவத்தை பிரெக்டு உருவாக்கினார். பல ஊற்றுமூலங்கள்

படிப்பகம்

www.padippakam.com

இதற்கு உண்டு. கிழக்கு ஆசிய நாடக மேடையின் எளிமையும் தூரப்படுத்தும் கோட்பாடும்; ஹெர் ஸ்டெயின்ரக் என்ற நடிகரின் தேர்ந்த யதார்த்த பாணி நடிப்பு; எர்வின் பிஸ்கேட்டர் என்ற கம்யூனிஸ்டு அரசியல் நாடக இயக்குனரின் நாடகங்கள்; அமெரிக்கர்களின் அங்க சேட்டைகள் - இதிலிருந்து மனித நடத்தைகள் பற்றிய கவனிப்பையும் ஆய்வையும் பிரெக்டு எடுத்துச் செய்தார்; சார்லி சாப்ளினின் பாவனைகள் (உடல் அசைவுகள்) - இப்படி ஒரு வளமான கல்வியை பிரெக்டுதன் சொந்த முயற்சியில் பெற்றிருந்தார்.

சமூக மாற்றத்திற்கான நோக்கமோ, அதற்குரிய நாணயமான நடைமுறையோ இல்லாத முதலாளித்துவ அறிஞர்கள் சிலர் பிரெக்டின் தூரப் படுத்தும் கோட்பாட்டைச் சோதனை செய்து பார்க்கவும் அதற்குப் புதிய தத்துவஞான விளக்கம் தரவும் முயற்சிக்கிறார்கள்.

ஆசிய நாடகங்களிலிருந்து அவர் பெற்ற தூரப்படுத்தும் வடிவம் பற்றிச் சில முக்கியப் பிரச்சினைகளை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. எடுத்துக்காட்டாக தமிழக தெருக் கூத்தில் இடம் பெறும் கதை சொல்லும் முறையும், கட்டியங்காரனின் பங்கு பாத்திரமும் இத்தகையது. பழம் சீன நாடகங்கள் பற்றி பிரெக்டு இதேபோல குறிப்பிடுகிறார். மேடையில் நடக்கும் கதை பல ஆயிரமாண்டு முந்தையதாக இருந்தாலும், இடையே கதையைத் தற்கால அரசியலுக்கும் சமூகச் சூழலுக்கும் பொருத்தியோ அல்லது விமர்சித்தோ நடத்துவது இதன் முக்கியமான அம்சம். இதன் மூலம் நாடகம் பார்ப்பவர்கள் நாடகத்தின் உணர்ச்சிமயமான (நகைச்சுவை, சோகம்) பாத்திரங்களிலோ காட்சிகளிலோ மூழ்கிவிடாமல் ஒரு சமூக விமர்சகனைப் போலவும், ஒரு ஆய்வாளனைப் போலவும் விலகி நின்று ஆராயும் வாய்ப்பு ஏற்படுகிறது.

பிற்போக்குக் கருத்துக்களைத் தாங்கி இருப்பினும், ஆசிய நாடகங்களில் - குறிப்பாக நாட்டுப்புறக் கலைகளில் இந்தக் கூறுகள் உண்டு. இவைபற்றி பிரெக்டு அறிந்திருந்தார். உணர்ச்சிகளுக்கு அல்ல, மாறாக அறிவுக்கே இம் மேடை முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று காவிய பாணி நாடகம் பற்றி அவர் கூறியதாகக் குறிப்பிடுவார்கள்.

பிரெக்டின் கலைப் பாணியை அவர் வாழ்ந்த காலத்தின் அரசியல் பண்பாட்டுச் சூழலுடன் பொருத்திப் பார்த்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆரிய இனவெறி, வெள்ளை நிற வெறி, யூத எதிர்ப்பு, ஜெர்மன் தேச வெறி, போர்வெறி ஆகிய அனைத்தும் கலந்த நாஜி அரசியல் ஜெர்மானிய மக்கள் மீது செல்வாக்கு செலுத்திய காலம் அது.

ஆரிய இனத்தவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அரைக் குரங்குகள் என்று கருதும் இனவெறி வெறும் அரசியல் பிரச்சாரமாக மட்டுமின்றி பரிணாம வளர்ச்சிக் கோட்பாடாக, இயற்கை விஞ்ஞானமாகவே திருத்தி எழுதப்பட்ட காலம் அது. வேறு வார்த்தைகளில் சொன்னால் போலி உணர்ச்சிகளின் பலி பீடத்தில் பகுத்தறிவு காவு கொடுக்கப்பட்ட காலம் அது.

அந்தப் போலி உணர்ச்சிகளின் முகத்திரையைக் கிழித்தெறிய கலை, இலக்கியமும் பகுத்தறிவு எனும் ஆயுதத்தை முதன்மையாகப் பயன்படுத்த வேண்டியிருந்த காலம் அது.

எனினும் அறிவும் உணர்ச்சியும் இசைந்து செல்லும் படைப்பில்தான் கலை இலக்கியம் முன் மாதிரிகளைப் படைக்கிறது. இசைந்து செல்லுதல் என்பது ஒத்து ஊதுதல் அல்ல.

பிரெக்டின் அனுபவத்தை நாம் நமது நிலைக்குப் பொருத்துவது எப்படி? மதவெறியும், தேசவெறியும், ஆளும் வர்க்கங்களின் புனிதமான ஒழுக்க விழுமியங்களும் ''உணர்ச்சி பூர்வமாக'' ஊதிப் பருக்க வைக்கப்படும் போது, பகுத்தறிவு எனும் குண்டூசியால் நமது படைப்புகள் அதனைக் குத்த வேண்டியிருக்கிறது.

நுகர் பொருள் மோகமும், இன்பக் களியாட்ட வெறியும், அந்த வாழ்க்கையைப் பெறுவதற்காக எல்லா மனித உறவுகளையும், சக மனிதர்களையும் பண்டமாகக் கருதி ''வரவு - செலவுக் கணக்கு'' போடும் காரிய சாத்தியப் (Pragmatic) 'பகுத்தறிவும்' கோலோச்சும் இன்றைய பண்பாட்டுச் சூழலில் இதற்கெதிராக உழைக்கும் மக்களின் உணர்ச்சியை வாளாக ஏந்தவும் வேண்டியிருக்கிறது.

சமூக மாற்றத்திற்கான நோக்கமோ, அதற்குரிய நாணயமான நடைமுறையோ இல்லாத முதலாளித்துவ அறிஞர்கள் சிலர் பிரெக்டின் தூரப்படுத்தும் கோட்பாட்டைச் சோதனை செய்து பார்க்கவும் அதற்குப் புதிய தத்துவஞான விளக்கம் தரவும் முயற்சிக்கிறார்கள்.

ஆனால் சோசலிசத்தையும், சோவியத் அரசு வடிவத்தையும் எதிர்த்த இவ்வறிஞர்களின் மூதாதையர்களை எதிர்த்துப் போராடியவர் பிரெக்ட். சோசலிசம் உருவாக்கும் புதிய மனிதனைப் போற்ற கிழக்கு ஜெர்மனியின் கூட்டுப் பண்ணை அனுபவத்தை மேடையேற்றியவர்; பால்ராப்சனைப் போலவே சோவியத் அளித்த லெனின் விருது பெற்ற கலைஞர்.

முதலாளித்துவத்தைக் கட்டோடு வெறுத்த, சோசலிசத்தை நேசித்த, ஒரு இயங்கியல் பொருள் முதல்வாதிதான் பிரெக்ட் எனும் மனிதன்; அந்த மனிதனில் மலர்ந்தவன் தான் பிரெக்ட் எனும் கலைஞன்.

பிரெக்ட் எனும் மனிதனின் சமூகக் கண்ணோட்டத்தை ஏற்க மறுக்கும் ''கலை விற்பன்னர்கள்'' அவரது கலைக் கோட்பாட்டின் அடிப்படையில் நடத்தும் ''வித்தியாசமான சோதனை''களுக்கும், டி.வி.எஸ். அய்யங்கார், நாட்டுக் கோட்டை செட்டியார் வம்சங்களைச் சேர்ந்த மாமிகளும், ஆச்சிகளும் சதையைக் குறைப்பதற்காக நடத்தும் ''நாட்டிய சோதனை''களுக்கும் பெரிய வேறுபாடு இல்லை.

முதலாளித்துவத்தைக் கட்டோடு வெறுத்த, சோசலிசத்தை நேசித்த, ஒரு இயங்கியல் பொருள் முதல் வாதிதான் பிரெக்ட் எனும் மனிதன்; அந்த மனிதனில் மலர்ந்தவன் தான் பிரெக்ட் எனும் கலைஞன்.

''எங்கள் மூளைகளிலிருந்து சில்லுகளையும் தூசுகளையும் துடைத்தெறிந்தவர்'' என்று பிரெக்டைப் பற்றிக் கூறுகிறார் அன்னா செகர்ஸ் என்ற சக எழுத்தாளர். தாங்கள் அமைதி கண்டு விட்டதாகச் சொன்ன நண்பர்களை ஓயாது தொந்திரவு செய்து அவர்களது அமைதியைக் குலைத்தவர் பிரெக்ட். அவரது நூற்றாண்டில் நாம் தொடரவேண்டிய பணியும் அதுதான்.

● குப்பண்ணன்

ஓவியம் : துரை.

படிப்பகம்

www.padippakam.com

"சிவகாசி மழலையர் வாழ்வைப் பறிக்கும், பட்டாசுகளைக் கொளுத்தாதீர்கள்" என பண்டிகைக் காலங்களில் தன்னார்வக் குழுக்கள் ஊர்வலம் நடத்துகின்றன. நகரத்துக் குப்பைகளில் மக்காச் சோளத்தைப் பொறுக்கும் ஆப்பிரிக்க எலும்புக் குழந்தைகளைக் காண்பித்து, ஐ.நா. யுனிசெப் நிறுவனம் இவர்களின் பசியைத் தணிக்க நன்கொடை திரட்டுகிறது. நமது நாட்டு ஏழைக் குழந்தைகளைப் பற்றி இவர்கள் அடையும் கவலைகள் ஒருபுறமிருக்கட்டும். மத்தாப்பூ தயாரிக்கும் ஏழ்மையோ, மக்காச் சோளம் பொறுக்கும் அவலமோ இல்லாத இவர்களுடைய அமெரிக்கக் குழந்தைகளைப் பற்றி நாம் கொஞ்சம் கவலைப்படுவோம்!

அமெரிக்காவின அட்லான்டா நகரத்தில் சிறுமிகளுக்காக நடத்தப்படும் அழகிப் போட்டி ஒன்றைப் பற்றி, செய்திப் படமொன்றை பி.பி.சி. ஒளிபரப்பியது. ஜேனே ட்ரேஸ் தயாரித்திருக்கும் இக்குறும்படத்தின் பெயர் 'பெயின்டட் பேபீஸ்' (Painted Babies சாயம் பூசப்பட்ட குழந்தைகள்).

★☆★

பாடிக் கொண்டே, சுறுசுறுப்பாய் மூன்று சக்கர சைக்கிளை ஓட்டும் ஆசியா ஒரு ஐந்து வயதுச் சிறுமி. அட்லாண்டாவில், சதர்ன் சார்ம் நிறுவனம் நடத்தும் அழகிப் போட்டிக்குப் பயிற்சி எடுக்கும் அவளுக்கு இப்படி விளையாடுவதற்கான நேரம் கிடைப்பதே அரிது. அவள் மட்டுமல்ல மொத்தக் குடும்பமும் போட்டிக்கான ஆயத்தங்களில் மூழ்கியிருக்கிறது. சிறுமியின் பாட்டி மேரி பழைய பத்திரிகைகளின் அழகுக் குறிப்புக்களைச் சேகரிக்க, தாய் கிம் மான்சூர் (முன்னாள் விளம்பர நடிகை) ஆடை ஆபரணங்களைச் சரிபார்க்க, இருவருக்கும் தந்தை ஃபூ மான்சூர் உதவி செய்கிறார். தேர்வுக்கு கண் விழித்துப் படிக்கும் குழந்தைகளுக்கு, கண் விழித்து ஹார்லிக்ஸ் கொடுக்கும் நம்மூர் ஹார்லிக்ஸ் பெற்றோரை விட இக்குடும்பத்தின் 'தியாகம்' அளப்பரியது.

அன்ன நடைக்கான பயிற்சி, முகபாவனை, சிரிப்பு, பாட்டு என ஆசியாவின் ஒரு நாள் என்பதே பல பயிற்சிகளின் அட்டவணை! ஊண், உறக்கம் மறந்து மகளுக்காக அம்மா படும் அவஸ்தையை என்னவென்பது? சாப்பாட்டு மேசையிலும் மகளுக்கு பாட்டுப் பயிற்சியை நடத்தும் கிம் மான்சூரின் கண்களில் தெரியும் அந்த லட்சிய வெறி, நமக்குத் திகிலூட்டுகிறது. சிறுமி ஆசியாவிடம் பேட்டியாளர் கேட்கிறார், 'நீ எதற்காக போட்டியில் கலந்து கொள்கிறாய், எதிர்காலத் திட்டம் என்ன?' "நிறைய பணம் வேணும், கார் வேணும், பங்களா வேணும், இன்னும் நிறைய நிறைய பணம் வேணும், அவ்வளவுதான்," ஒரு ஹாலிவுட் நடிகையைப்போல வேகமாக பேசி, முகமசைத்து கை விரிக்கிறாள் அந்தச் சிறுமி.

ப்ருக்கி, ஆசியாவுடன் போட்டி போடும் மற்றொரு சிறுமி. ஏற்கனவே உள்ளூர்ப் போட்டியில் நான்கு இலட்சம் ரூபாய் வென்றவள், தேசியப் போட்டிக்கு தயாராகிறாள். பாட்டி பாம் ப்ரட்வெல் நடத்தும் அழகு நிலையத்திலேயே பேத்தியும் அமெரிக்க பார்பி பொம்மையைப் போல மெருகேற்றப்படுகிறாள். மகளுக்குத் தெற்றுப் பல். அதனால் பல்லைக் காட்டாமலேயே இளிப்பதற்கு தாய் பயிற்சி கொடுக்கிறாள். பாடல் பயிற்சிக்காக மட்டும் வாரம் ஒருமுறை 500 கி.மீ. தொலைவில் உள்ள பாடல் ஆசிரியையிடம் பயிற்சி எடுக்கிறாள் ப்ருக்கி.

போட்டிக்கு இரண்டு வாரங்களே இருக்கும் நிலையில் தினசரி மூன்று முறை சகல பயிற்சிகளையும் செய்கிறாள். பதிவு செய்த வீடியோ காசட் மூலம் திருத்தங்கள் செய்யப்படுகிறது. வெளியே தோட்டத்தில் நீர் பாய்ச்சும் ப்ருக்கியின் தந்தை, தனது சேமிப்புப் பணத்தை மகளின் கல்விக்காக செலவிட விரும்புகிறார். போட்டிக்கான உடையை மட்டும் 40,000 ரூபாயில் தயாரித்திருக்கும் தாய், சேமிப்பை அழகுப் போட்டிகளுக்காக செலவிட விரும்புகிறாள். பாட்டி, அம்மாவுடன் அட்லாண்டாவை நோக்கி விமானத்தில் பறக்கிறாள் ப்ருக்கி.

இப்படிக் கனவுகளோடும், குழந்தைகளோடும் அட்லாண்டாவில் வந்திறங்கும் தாய்மார்கள் பல விடுதிகளில் தங்குகின்றனர். வந்திருக்கும் பல அம்மாக்கள் போட்டி நடக்கும் மூன்று நாட்களிலும் பதட்டத்தோடு இருக்கின்றனர். போட்டி தவிர்த்த நேரங்களில் அழுகை, கோபம், விளையாட்டு, சாக்லேட் என்று குழந்தைகள், குழந்தைகளாக இருக்கின்றனர். ஒரு குழந்தைக்கு 15,000 ரூபாய் வசூலிக்கும் முகப்பூச்சு கலைஞர், போட்டிகளுக்கு மதிப்பெண் போடும் அலங்காரக் கிழவிகள், சிறுமிகளை இளம்பெண்களாகவே நடத்தி நிகழ்ச்சிகளை தொகுத்துரைக்கும் பாடகர் டிம்வெட்மர், போட்டியை நடத்தும் சதர்ன் சார்ம் நிறுவனத்தின் தலைவி.... மொத்தத்தில் போட்டி தீவிரமடைகிறது.

ஆடை, அலங்காரத்தோடு, தோற்றத்தை மதிப்பிடும் அழகுப் பிரிவு, 'ஆண்களின் கனவுக் கன்னி' எனும் பாடலுக்கேற்ப அபிநயம் பிடிக்கும் 'கனவுக் கன்னி' பிரிவு, பாடல் பிரிவு, நீச்சல் உடை - நாகரீக உடை அணிவகுப்பு... அனைத்து போட்டிகளிலும் மேடையில்




சிறுமிகள் செய்வதை, கீழே உள்ள தாய்மார்கள் கூடவே செய்து காட்டுகிறார்கள். ஆ... ஊ... என கத்தி உற்சாகப்படுத்துகிறார்கள். பாடி முடித்து, 'நன்றி சீமாட்டிகளே, சீமான்களே' என்று பெரியவர்களின் தோரணையில் பேசி புன்னகைக்கிறாள் ப்ருக்கி. கௌபாய் உடையில் நடக்க சிரமப்படுகிறாள் ஆசியா. கேள்விகளுக்கு ஒற்றை வார்த்தையில் திருத்தமாகப் பதிலளிக்கும் ப்ருக்கி போட்டி இடைவெளியில் கோபமாக இருக்கிறாள். சரளமாகப் பேசும் ஆசியா, வெறுத்துப்போன அன்றாட அழகுப் பயிற்சி அட்டவணையை மாற்றுமாறு தாயிடம் முனகுகிறாள். ஒரு வழியாய் போட்டி முடிந்து, 95-ஆம் ஆண்டின் பேரரசி யாரென அறிவிக்கும் தருணமும் வருகிறது.

தாய்மார்கள் பதட்டத்தின் உச்சியில் நகத்தைக் கடித்து, கைகளைப் பிசைந்து, கண்களை மூடுகின்றனர். முதல் மூன்று இடங்களுக்கான தகுதியை ஆசியாவும், ப்ருக்கியும் அடைகிறார்கள். முடிவில் ப்ருக்கி பேரழகியாக அறிவிக்கப்படுகிறாள். ஆசியாவுக்கு மூன்றாவது இடம் கிடைக்கிறது. பேரழகியின் தாய் ஆனந்தத்தில் கதறுகிறாள். ஆசியா

படிப்பகம்

www.padippakam.com




வின் தாய் அதிர்ச்சியில் கண்கள் பனிக்கிறார். வென்றவர்களும், தோற்றவர்களும் மீண்டும் அடுத்த ஆண்டு போட்டிக்கு வருவோம் என்கின்றனர். கவர்ச்சியான எதிர்காலக் கனவுகளோடு, அடுத்த ஆண்டு மட்டுமல்ல வாழ்க்கை முழுதும் குழந்தைகளாய், தாய்களாய், பாட்டிகளாய் - இறப்பு வரை அவர்கள் வருவார்கள், வந்து கொண்டேயிருப்பார்கள்.

★☆★

'அமெரிக்கத் தரம்' இல்லையென்றாலும், இந்தியக் கான்வென்டு பள்ளிகளில் மேற்கின் வார்ப்பில் நிறையவே அழகிப் போட்டிகள் நடக்கின்றன. இன்னும் இந்தி, தமிழ் சினிமாக்களின் கொச்சை நடனங்கள் பள்ளி ஆண்டு விழாக்களை ஆக்கிரமிப்பு செய்து வருகின்றன. ஏறக்குறைய அவிழ்த்துப் போட்டு தொப்புள் டான்ஸ் ஆடும் தமது குழந்தைகளை, அனைத்துப் பெற்றோர்களும் மெச்சிக் கொள்கின்றனர். இவர்களுடைய உலகிலிருந்துதான் குழந்தைகள் பற்றிய கவலையும் விதவிதமாக வெளிப்படுகின்றது.

பாராளுமன்றம், பத்திரிகை, தொலைக்காட்சி, திரையுலகம், கல்வி நிறுவனங்கள் கவலைப்படும் இந்தியக் குழந்தைகளின் பிரச்சினைகள் பல. போலியோ சொட்டு மருந்து, சிவகாசி, மத்தாப்புக் குழந்தைகள், பீடி - தீப்பெட்டி - கைத்தறி குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தை விபச்சாரம்... என்று நீளுகிறது. மேலும் பீகாரின் நக்சல்பாரிக் கட்சி, ஈழத்து விடுதலைப் புலிகள் முதல் உலக நாடுகளின் பல்வேறு போராளிக் குழுக்கள் வரை - சிறுவர்களை போரில் ஈடுபடுத்தி கொலை வெறியை வளர்க்கின்றனர் என்பதும் ஒரு முக்கியக் கவலை.

முதலில் ஒன்றைப் புரிந்து கொள்வோம். தீக்குச்சியை அடுக்கி, பீடி சுற்றி, துப்பாக்கியை ஏந்துவதற்கு காரணம், அக்குழந்தைகளின் பெற்றோரோ, குறிப்பிட்ட சமூகமோ அல்ல. பொருளியலிலும், அரசியலிலும் அச்சமூகப் பிரிவினரை ஆதிக்கம் செய்கின்ற சக்திகளே அந்தக் குழந்தைகளின் வாழ்க்கையைப் பறித்தவர்கள். உலகின் பெரும்பான்மை நாடுகளும், மக்களும் ஏழ்மையில் உழன்று கொண்டிருக்கும்போது, அம்மக்களின் குழந்தைகள் மட்டும் வயிறார உண்டு, கல்வி கற்பது எப்படி முடியும்? அடிமைத்தனத்தில் உழலும் ஒரு சமூகத்தின் குழந்தைகள் மட்டும் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியுமா? கட்டுண்டு கிடக்கும் மனிதர்களைப் பற்றி கவலைப் படாதவர்கள், குழந்தைகளுக்காக மட்டும் கண்ணீர் விடுவது அயோக்கியத்தனம்.

சிவகாசிக் குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய குறும்படம் ஒன்றில் 'பள்ளிக்குச் செல்லும் வயதில், பட்டாசுத் தொழிலுக்குச் செல்வது சரியா?' என்று ஒரு சிறுவனிடம் பேட்டியாளர் கேட்கிறார். 'பட்டாசு செய்வதால்தான் ஒரு வேளையாவது பசியாற முடிகிறது' என்று பதிலளிக்கிறான் அச்சிறுவன். ஆசியாவைப் போன்ற சிறுமிகளோ 'நிறையப் பணம் வேணும்' என்பதற்காக அழகுப் போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.

மேலும், 'நிறையப் பணம் வேணும்' என்ற வெறிதான் பின்னாளில் கிரிமினல்களை உருவாக்குகின்றது. பணம் குவிக்க எப்படியும் வாழலாம், என்ன வேலையும் செய்யலாம், எதையும் அவிழ்க்கலாம் என்பது அழகுப் போட்டி சிறுமிகள் கற்கும் அடிப்படைப் பாடம். ஆனால் துப்பாக்கி ஏந்தும் ஈழத்துச் சிறுவனுக்கு அமைதிப் படையின் ஆறாத வடுக்கள் காரணமாக இருக்கலாம். தன் மக்களைக் கொன்று குவிக்கும் ரன்வீர் சேனாவின் கொடுமை கண்டு ஒரு பீகார் சிறுவன் அரிவாளைத் தூக்கலாம். சிறுவயதானாலும், தன் மக்களின் அவலம் கண்டு ஆயுதம் தூக்கும் இவர்களிடம் கொலை வெறி வருவதில்லை. அடிமைத்தனத்தை எதிர்த்துப் போராடும் விடுதலை உணர்வும் சமூகப் பற்றுமே ததும்பி நிற்கும்.

ஆனால் செலவழிக்க பணம் திருடும் மேட்டுக்குடி சிறுவர்கள்தான் கொடூரமான கொலைகளைச் செய்கிறார்கள். இலட்சக் கணக்கிலும், கோடிக் கணக்கிலும் பரிசுத் தொகை கொண்டிருக்கும் பெரிய - சிறிய அழகுப் போட்டிகளில் வென்றவர் தோற்றவர் மனநிலையும், குறுக்கு வழியில் முன்னேறத் துடிக்கும் ஒரு கிரிமினலின் மனநிலையும் ஒன்றுதான்.

தெருமுனையில் வித்தை காட்டும் கழைக் கூத்தாடி, தனது மகளுக்கு பெண்கள் அணிவது போல மார்புக் கச்சையை அணிவித்து வேடிக்கை காட்டுகிறான். எவருக்கும் முதல் பார்வையிலேயே ஏனென்று விளக்காமலேயே இக்காட்சி கொடூரமாக இருக்கும். சிறுமியை கவர்ச்சிக் கன்னியாக உருவகப்படுத்தும் கழைக் கூத்தாடி, தனது வயிற்றுப்பாட்டிற்காக அப்படிச் செய்கிறான். அவளை வைத்து கோடம்பாக்கத்தையே ஒரு கலக்கு கலக்கி கோடிசுவரனாக மாற வேண்டும் என்பதற்காக அல்ல. அந்தச் சிறுமிக்கும், ஆண்களை வீழ்த்தி, பிரபல நடிகையாக ஒரு சுற்று வர வேண்டும் என்ற கனவெல்லாம் கிடையாது. இரவு ஒரு வாய் கஞ்சி கிடைத்தால் பெரிய விசயம். ஆனால் தனது குழந்தைகள் மேடையில் ஆடை அவிழ்ப்பதையும், ஆபாச சினிமா நடனங்கள் ஆடுவதையும் கண்டு நடுத்தரவர்க்கம் பெருமிதம் கொள்கிறது. காரணம் ஐஸ்வர்யாராய்க் கனவுதான்.

பருவம் அடைந்த பெண்கள் ஒரு ஆணைக் கவருவதற்கான நடை, உடை, முகபாவனை, உடல் அளவு, காதல் குறித்த பொது அறிவு இவைதான் அனைத்து அழகுப் போட்டிகளுக்கும் அடிப்படை விதிகள். சிறுமிகளுக்கான போட்டியும் இதற்கு விதிவிலக்கல்ல. 'ஆண்களைக் கவரும் கனவுக் கன்னி' என்ற ஒரு பாடலுக்கு ஆசியாவும், ப்ருக்கியும் முகபாவனை செய்கிறார்கள்.

ஏற்கனவே இந்தியச் சமூகம் பெண் குழந்தைகளுக்கு நாணத்தையும், செப்பு வைத்துச் சமைப்பதையும், சிறுவயதிலேயே சேலை கட்டுவதிலிருந்து சமைப்பது வரை அனைத்து அடிமைத்தனங்களையும் நுணுக்கமாகக் கற்றுக் கொடுத்து வருகிறது. இப்போது மேற்கிலிருந்து வேறு வடிவில் அழகு, கவர்ச்சி, வியாபாரம், ஆதாயம் அனைத்தும் சுதந்திரமாய் வந்திருக்கிறது. தனது குழந்தையை சமூகத்திற்கு பொறுப்புள்ள குடிமகனாய் வளர்க்க விரும்பும் பெற்றவர்கள் சிந்திக்கட்டும்.

• வேல் ராசன்


படிப்பகம்

www.padippakam.com

பள்ளிக் கூடம் விட்டு காலனி வந்துசேர இருட்ட ஆரம்பித்து விட்டது. காட்டு வேலைக்குப் போயி அப்பதான் வந்த சில பெரிசுகள் கோவணத்தோடு தெருவில் உட்கார்ந்து அலுப்பாறிக் கொண்டிருந்தார்கள்.

''அம்மாசி! இந்த வருஷம் ஒம்பதாம்ப்பு டவுன்லயா படிக்க?'' இந்த விசாரிப்புகளில் எப்பவும் புளகாங்கிதம் அடைந்திருந்த அம்மாசி, இன்று ஏனோ எரிச்சலுடன் பதில் சொல்லாமல் வெடுக்கென்று மூஞ்சியைத் திருப்பினான்.

அம்மணமாக சில சிறுபிள்ளைகள், வழக்கமாக இவன் பின்னால் வீட்டு வரை ஓடிவந்தன. ''இந்த அண்ணன் டவுன்ல படிக்கி'' ''இந்த அண்ணன் டவுன்ல படிக்கி'' குழந்தைகள் சொல்லி குதூகலித்துக் கொண்டன. அம்மாசி அணிந்திருந்த ஊதா கால் சட்டையும் வெள்ளை மேல் சட்டையும் அந்த காலனி ஆளுகளுக்கு ஒரு இராணுவ அணிவகுப்பின் பிரமிப்பாய் இருந்தன.

''என் ராசா வாய்யா!'' கேப்பை திரித்துக் கொண்டிருந்த அம்மாவின் வரவேற்பு. ''நம்ம மந்திரி வந்துட்டாரு. நம்ம தொரை வந்துட்டாரு. நம்ம சீமான் வந்துட்டாரு.'' விளையாடிக் கொண்டிருந்த சின்ன தம்பியிடம் அம்மாசியை மகிழ்வாய் காட்டினாள் அம்மா. அண்ணனைப் பார்த்து விரசலாய்த் தவழ்ந்து சிரிப்பாணியாய் எச்சில் சிந்தி வந்த தம்பியை அம்மாசி தூக்கிக் கொஞ்சி இடுப்பில் வைத்துக் கொண்டான்.

''பெரியவனே! அந்த அடுக்குப் பானையில் கெழங்கு அவிச்சி வச்சிருக்கேன். நீ ரெண்டு எடுத்து தின்னுட்டு ஐயாவுக்கு ரெண்டு வச்சி வையி. இப்ப ஒரு வீச்சில களி கிண்டிருதேன்.'' மகனைக் கனிவோடு பார்த்தாள். பண்டத்தை எடுத்து தம்பிக்கு ஊட்டித் தானும் தின்றான்.

''தெனமும் ஒம்பது கல் தொலவு நடந்து போயி படிக்க முடியுமா? ஆஸ்டல்ல சேர்றதுக்கு என்ன சொன்னாகம்மா?''

''அன்னைக்கி சொன்னாங்கல்ல அதயேதான் இப்பவும் சொல்றாங்க. ஐயா பேர்லயோ, இல்லெ நம்ம சொந்தக்காரங்களாயிருந்தாலும் பரவாயில்லயாம், சக்கிலிய சாதிதாம் அப்படீன்னு ரெக்கார்டா ஆதாரம் வேணுமாம், வீட்டுப்பத்திரம் நெலப்பத்திரம் இப்படி....

''இதென்னய்யா பாதரவு... பத்திரம் வச்சி இந்தச் சாதியில யாரு பொளச்சிருக்கா? சொன்னா காதுல வாங்க மாட்டங்கறாங்களே''. கவலையோடு மகனைப் பார்த்தாள்.

அவன் பசியாறிக் கொண்டிருந்தான். ''அப்ப ஒன்னும் ஆகாதாய்யா?'' அம்மாசி ஒன்றும் பதில் சொல்லாமல் இருந்தான். ஒரு பாயிண்டைப் பிடித்து விட்டதைப் போல ஆர்வமாய்க் கேட்டாள்: ஒண்ணு செய்யலாமுய்யா இந்த செருப்பு தக்கிற சாமான்கள வேணுன்னா நாளைக்கு ஐயாவ கொண்டு வந்து காட்ட சொல்லட்டுமா?''

அம்மாசிக்கி அம்மாவைப் பார்க்க பாவமாய் இருந்தது. இதெல்லாம் அவங்ககிட்ட எடுபடுமா? அன்னக்கி அப்படித்தான் தாலுகா ஆபிஸ் வந்து ஒரே ஒப்பாரி வச்சி ஊரைக் கூட்டிட்டா. அம்மாசிக்கி தாலுகா ஆபீஸை இப்ப நெனைச்சாலும் மனசு ஒரு மாதிரியா கனத்தது.

## சிறுகதை:

# ஆதாரம்

● இலட்சுமணப் பெருமாள்

● ● ●

''ஆஸ்டல்ல சேர்ற அளவுக்கு குடும்பம் அவ்வளவு ஏழ்மையாப்பா?'' வேறு ஏதோ வேலையில் ஆழ்ந்திருந்த தாசில்தார் பார்வையைத் திருப்பாமலேயே கேட்டார். தூரத்தில் இவன் மனு ஓரமாய் மேஜையில் சுருண்டு கிடந்தது. ''ஆமா சார்!''

''எஸ்.சி.யா?'' ''ஆமா சார்!''

''ஏன் வி.ஏ.ஓவும் ஆர். ஐயும் கையெழுத்து போட மாட்டேங்கிராங்க''. அப்பொ கிராஸா? என்ன பதிலக் காணோம்? என்ன பித்தலாட்டம் நடந்தது சொல்லு?''

அம்மாசி அதெல்லாம் இல்லை என்பது போல் தலையை ஆட்டினான். மனசில் அம்மா வி.ஏ.ஓ.விடம் இரண்டு கையையும் விரித்து கூக்காடு போட்டது நிழலாடியது. ''நாங்க பொய் சொல்ற சாதியில்ல சாமி. நாங்க பொய் சொல்ற சாதியில்லை.''

அம்மாசிக்கு கண் கலங்கியது. பேச நாக்கு எழும்பவில்லை. நம்ம சாதி சனத்தையெல்லாம் இந்த அதிகாரிங்க மனுச மக்க கணக்குல சேப்பாங்களா? மேலாவுல படிக்கிறதெல்லாம் நம்ம ஈனச்சாதிக்கி தேவையா? நாம வந்து நிக்கிற எடமா இது?

அம்மாசி தன் வீட்டையும் தாசில்தார் அலுவலகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தான். தேவையில்லாமல் ஐயாவையும் தாசில்தாரையும் இணை சேர்த்து தராதரம் பார்த்து குன்னிப்போய் நின்னான். இதெல்லாம் நமக்குத் தேவையில்லாத அதிகப் பிரசிங்கித்தனம் என்று அவன் மனசு குமைந்தது.

''காது கேக்குமில்லப்பா ஒனக்கு. இந்தா காது கேக்குமில்ல... '' அலட்சியமாய் மனுவை இரண்டு விரலுக்கிடையில் வைத்துக் கொண்டு முகத்தை எரிச்சலுடன் சுழித்தார் தாசில்தார்.

''சார் நான் சக்கிலிய சாதிசார். நான் சக்கிலியந்தானுட்டு உறுதி பண்ண என்ன ஆதாரம்னு கேக்குறாங்க, வீட்டுப்பத்திரம் நெலப்பத்திரம் இப்படி ஏதாவது வேணும்கிறாங்க.''

''ஓ! பின்ன சார் கேட்டவுடனே நீட்டுன எடத்துல நாங்க கையெழுத்து போட்டுறணும் அப்படீங்களா?'' அம்மாசிக்கி அவமானமாய் இருந்தது. ''எழுத்து பூர்வமான ரெக்கார்டு இல்லாம ஒன்னும் ஆகாது. இல்லெ ஊர்ல நாலுபேரு ஜாதிக்கு ஒருத்தனா வந்து சொல்லச் சொல் போ... போ...''

கூட வந்த அம்மா தூரத்தில் மர நிழலில் உட்கார்ந்திருந்தாள். அவளிடம் எப்படிச் சொல்வது. அவளுக்கு இவனின் படிப்பு மீதும் எதிர்காலத்தின் மீதும் எவ்வளவு நம்பிக்கை. கரிசல் காட்டில் அல்லாடிய அவள் தேகம் நார் நாராய்ப் பிரிந்து நைந்த நூலாய்த் துவண்டு போயிருந்தது.

www.padippakam.com



அம்மாசியைப் பார்த்ததும் எழுந்து நின்றாள். 'முடிஞ்சிரிச்சாய்யா' என்பது போல் தலையை ஆட்டி ஆவலாய்ப் பார்த்தாள். ''நாலா சாதியும் வந்து சொல்லணும்னு இவரும் சொல்றார்மா!''

இதே மாதிரி ஆர்.ஐ. சொல்லும் போது இவள் ஊருக்குள் போய் சொன்னாள். அப்பொ கெடைத்த கொடமானம் இவள் ஜென்மத்துக்கும் போதும்.

''நீ ஒரு மனுஷி ஒனக்காக நாங்க மெனக்கெட்டு அங்க வந்து கிளிக்கூண்டு ஏறிச் சொல்லணுமா? எவ்ளோ தெனாவட்டு ஒனக்கு, சின்னச் சாதிப்பய மவளே!''

''அவ மனசுல பெரிய்ய இந்திரா காந்தின்னு நெனப்பு அவ கூப்டுற இடமெல்லாம் நாம அலையறதுக்கு, அவள் அறிவு வரும்படியா தலய செறச்சி மூளியலங்காரி மாதிரி முச்சந்தியில மூணு சனிக்கிழமைக்கு ஒக்காரவையி, முண்டெக்கி அப்பத்தான் அறிவு வரும்.''

ஆளாளுக்கு அம்மாவை வைது கையை ஓங்கிக் கொண்டு அடிக்க வரும்போது பக்கத்திலிருந்த அம்மாசியால் அழத்தான் முடிந்தது.

''இத்தனை படிச்சவங்கள்ல நாம சொல்றது நெசந்தாமுன்னு ஏத்துக்க ஒரு எரக்கப்பட்ட புண்யவான் இல்லயா பகவானே!'' ஆமணக்கு இலய மாதிரி கைய பெரிசாய் விரித்து உரக்க அழுதாள். அம்மாசியும் வாய் கோணிக் கொண்டு அழ ஆரம்பித்தான். வீட்டிற்குச் சங்கடம் தராமல், எப்படியும் ஆஸ்டலில் சேர்ந்துவிட தெனமும் தாலுகா ஆபீஸிற்கு அலைகிறான்.

• • •

கிழங்கைத் தின்று முடித்த அம்மாசி தம்பியை இறக்கிவிட்டான். கையைக் கழுவி தம்பியின் வாயைத் தண்ணீரால் தொடைத்து விட்டான். ''ஐயா எங்கெம்மா?'' ''மேலத் தெருவுல ஒரு சாவுன்னு காலையில போன மனுசன். ஒரு தாக்கலுந் தெரியல. இந்நேரத் தூக்கியிருப்பாக, சுடுகாட்டுக்கு போனா பாக்கலாம்.'' அம்மாசி சுடுகாட்டுக்கு நடந்தான். கிழக்கே தூரத்தில் சிதை புகைவது தெரிந்தது. உறவினர்கள் கலைந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

தொத்தன் களிமண்ணைக் குழைத்துச் சிதைக்கு மேலே பூசிக் கொண்டிருந்தான். ''நீ எப்படா வந்தே?'' தற்செயலாய் திரும்பி கொஞ்சம் வியப்போடு அம்மாசியைக் கேட்டான். அம்மாசி ஒண்ணும் பேசாமல் ஒத்தாசையாய் ரெண்டு வாளி சாந்து கோதி கொடுத்தான்.

''நீ போய்யா, ஒனக்கு எதுக்கு இந்த வேல. நாம் பாத்துக்கிடமாட்டனா. போயி புஸ்தகம் எடுத்துப் படிப்பியா... உம் புறப்படு காலடி தடம் தெரியும் போதே வீடு போய்ச் சேரு'' வாளியிலிருந்த தண்ணீரில் கைய கழுவிக் கொண்டு புறப்பட்டான்.

''இந்தாடா பெரியவனே அம்மாசி!'' தொத்தன் சாந்தை ஒதறிக் கொண்டே மகனை நோக்கி வந்தான். ''மடியிலெ ஒரு சிட்டை இருக்கு எடு. ஏங்கையி சகதியாயிருக்கு'' இடுப்பை வளைத்து முன்னாடி நீட்டினான். சிட்டை வியர்வையில் மடிந்து கிடந்தது. உள்ளே ஐம்பது ரூபா தாளும் இருந்தது.

சுற்றி ஒரு தரம் எட்ட மட்டும் ஆள் அரவம் பார்த்துவிட்டு 'சிட்டையை வாசி' என்று மெல்லச் சொன்னான் தொத்தன். ''வெகுதான்ய வருடம் வைகாசி முப்பதாம் தேதி தெற்குத் தெரு சண்முகையா வேளார் சாவுக்கு சக்கிலியர்க் குண்டான சுடுகூலி சுதந்திரம், ஊர் பஞ்சாயத்து வழமைப்படி உள்ளூர் தொத்தன் பகடை வசம் ரூ. ஐம்பது மட்டும் நாட்டாமை உத்தரவில் கொடுக்கப் பட்டது. ரசீது நெம்பர் தேதி கையொப்பம்.''

''ம். ரைட்.'' தலையை ஆட்டினான் தொத்தன். ''ரூபாய அம்மா கிட்ட கொடு. சிட்டை ரொம்ப ரொம்ப பத்திரம். சாவு வீட்டில சோறு வாங்கியார இதான் ஆதாரம். அதோட அடுத்த சாவு வரைக்கும் இத பத்திரமாக வச்சிருக்கணும், இல்லேன்னா சுடுகூலி சுதந்திரம் போன தடவை முப்பதுதான் தந்தோமுன்னு ஒரேயடியா புளுகீறுவாங்க. ''பத்திரம் டோய்.''

அம்மாசி வேகமாய் நடந்தான். அவன் காதில் தொத்தனின் குரல் எதுவும் விழவில்லை. மாறாக ''எழுத்து பூர்வமா ஆதாரம் வேணும்'' என்று தாசில்தாரின் கத்தல் கேட்டது.

•

படிப்பகம்

www.padippakam.com

# இந்து மதவெறியை எதிர்த்து சமரும் சவடாலும்

பெரியார் சிலைக்குச் செருப்பு மாலை! தமிழகத்தில்தான். தஞ்சை மாவட்டம் ஒரத்தநாட்டில். உள்ளூர் திராவிடர் கழக இளைஞர்களின் எதிர்ப்பு நடவடிக்கையுடன் ஒரு உள்ளூர்ச் சம்பவமாகவே இது முடிந்து விட்டது.

பத்திரிகைகளில் செய்தியைப் பார்த்தவுடன் "சங்கராச்சாரிக்கு செருப்பு மாலை போடுவோம்" என்று நகரெங்கும் சுவரொட்டி ஒட்டினார்கள் திருச்சி ம.க.இ.க. தோழர்கள். ஒரு குறைந்தபட்ச எதிர்ப்பு நடவடிக்கைதான். எனினும் இந்தச் சுவரொட்டி ஒட்டியதற்காக நான்கு பேர் கைது - சிறை!

கதை அத்தோடு முடியவில்லை. தீப்பொறி ஆறுமுகத்தின் மொழியில் சொல்வதானால் "அரை நிஜாருடன் அலைந்து கொண்டிருந்த போலீசுகாரன்களுக்கு முழுக்கால் சட்டை கொடுத்து மனுசனாக நடமாடவிட்டாரே" அந்த கலைஞரின் ஆட்சியில் முழு நிஜார் போலீசார் அரைநிஜார் ஆர்.எஸ்.எஸ். காலிகளின் வேலையைச் செய்தனர். நகரம் முழுவதும் அலைந்து ம.க.இ.க. சுவரொட்டிகளைத் தேடித் தேடிச் சுரண்டிக் கிழித்தனர். கதை இதோடும் முடியவில்லை.

ஒரத்தநாடு சம்பவம் நடந்த அடுத்த சில தினங்களில் திருச்சி, துறையூர் நகரங்களில் நடைபெற்ற தி.க. பொதுக் கூட்டங்களில் பேசிய மானமிகு. வீரமணி அவர்கள் பார்ப்பனக் கும்பலை குறுக்கு நெடுக்காகக் கிழித்தெறியப் போகிறார் என்று காத்திருந்தவர்களுக்கு அதிர்ச்சி. செருப்பு மாலை விவகாரம் பற்றி தளபதி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்பதுதான் திருச்சியிலிருந்து நமக்குக் கிடைத்துள்ள செய்தி. பெரியார் பிறந்த மண் அம்பேத்கர் பிறந்த மண் என்ற மண்வாசனைச் சவடால்களின் எல்லைதான் இந்த மோன நிலை.

இந்த மதிப்பீடு உண்மைக்குப் புறம்பானது என்றால், பாரதிய ஜனதா மைய அரசைக் கைப்பற்றியபின் கடந்த ஓராண்டில், புரியும்படி சொல்வதானால், கோவை குண்டு வெடிப்புகளுக்குப் பிந்தைய ஓராண்டில் மேற்கூறிய அமைப்புகள் தமிழகத்தில் இந்துமத வெறிக்கெதிராக நடத்திய போராட்டங்கள் - கைதுகள், இயக்கங்கள் - அதன் விளைவாக எதிரிகளுடன் சந்தித்த மோதல்கள் எத்தனை என்று அறிய விரும்புகிறோம்.

அரசியல், சித்தாந்த ரீதியாக வெறியூட்டப்பட்டு, அமைப்பு ரீதியான குண்டர்படையாகத் திரட்டப்பட்டுள்ள இந்து மதவெறி பாசிஸ்டுகளை முறியடிக்க வேண்டும் என விரும்புபவர்களுக்கு எதிரியை முறியடிக்கும் சித்தாந்தம் வேண்டும்; அரசியல் வேண்டும்; மக்களைத் திரட்டுகின்ற நடைமுறையும் வேண்டும். அறிக்கைகள் விடுவதன் மூலமோ, ஆதரவாளர்கள் நிரம்பியுள்ள அரங்குகளில் இந்த முன்னணியை வாயாலேயே கிழிப்பதன் மூலமோ எதிரியின் நிழலைக்கூட எதுவும் செய்ய முடியாது.

கருவறை நுழைவுப் போராட்டம தொடங்கி இன்றுவரை பார்ப்பன இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு எதிரான மக்கள் திரள் இயக்கங்களையும் போராட்டங்களையும் ம.க.இ.க. அதன் தோழமை அமைப்புகளுடன் இணைந்து தொடர்ச்சியாகச் செய்து வருகிறது. கோவை குண்டு வெடிப்புகளுக்குப் பின், பயங்கரவாதம் என்றால் அல்-உம்மா என்ற கருத்து பத்திரிகைகளால் திட்டமிட்டே உருவாக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் "இந்து மதவெறிப் பாசிச பயங்கரவாதிகளை முறியடிப்போம்" என்ற முழக்கத்தினை முன்வைத்துத் தமிழகமெங்கும் இயக்கமெடுத்தோம். இந்து மதவெறியர்க்கெதிரான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் வருகிறோம். அவற்றில் சிலவற்றை - குறிப்பாகக் கடந்த இரண்டு மாதங்களில் நடைபெற்றவற்றை - தொகுத்துத் தருகிறோம்

### இந்து சாமியாரை எதிர்த்தால்: தேசிய பாதுகாப்புச் சட்டம்!

மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் தோழமை அமைப்பான புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியின் கரூர் மாவட்டச் செயலர் தோழர். தவமணி சென்ற மாதம் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

கரூர் - பசுபதிபாளையத்தில் உள்ள விவேகானந்தா கல்விக் கூடத்தின் நிர்வாகிகளான சாமியார்களை அம்பலப்படுத்தியதுதான் தவமணியின் முக்கியமான 'தேசவிரோத' நடவடிக்கை. ராமகிருஷ்ண தபோவனம் எனும் ஆர்.எஸ்.எஸ்.-ஸின் முகமூடி நிறுவனம் நடத்தி வரும் இந்தக் கல்வி நிறுவனத்தின் கீழ் சுமார் 6000 மாணவர்கள் படிக்கிறார்கள். ஆசிரியர்களுக்குச் சட்டபூர்வமான குறைந்தபட்ச ஊதியம் கிடையாது; குறைந்த பட்ச மரியாதையும் கிடையாது. இந்து தர்மத்தின்படி மாணவர்களுக்கும் ஜனநாயக உரிமைகள் கிடையாது.

ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஒடுக்குவதில் ஒற்றுமையாகச் செயல்பட்டு வந்த சாமியார்கள், கல்வி நிறுவனத்தின் சொத்தை யார் ஆள்வது என்ற பிரச்சினை வந்தவுடன் சாதி ரீதியாகப் பிரிந்து மோதிக் கொண்டார்கள். மோதல் ஆயுத மோதலாக வளர்ந்ததையும், காவியுடைத் துறவிகளைக் கட்டுப்படுத்த காக்கியுடைக் காவலர்கள் பள்ளி வளாகத்திலேயே முகாமிட்டிருந்ததையும் தமிழன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகூட எழுதியது. பள்ளி காலவரையறையின்றி மூடப்பட்ட பின்னரும், கரூரின் எந்த அரசியல் கட்சியோ பிரமுகரோ இதில் தலையிடவில்லை.

தோழர் தவமணியின் தலைமையில் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் இந்த ஆர்.எஸ்.எஸ். கூடாரத்தையும் சாமியார்களின் சாதிவெறியையும் அம்பலப்படுத்தினர். பள்ளியை அரசு ஏற்க வேண்டும் என சென்ற அக்டோபரில் ஆர்ப்பாட்டம், சாலை மறியல் நடத்தினர். மதக்கலவரத்தைத் தூண்டியதாகவும், பொதுச் சொத்துக்குச் சேதம் விளைவித்ததாகவும் இன்னும் ஏழெட்டு குற்றப் பிரிவுகளில் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். அந்தக் கைது அக்டோபரில் தற்போது, பிப்ரவரியில் தேசியப் பாதுகாப்புச் சட்டம்! இந்தக் கைதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தக்கூட அனுமதி மறுத்துவிட்டது கரூர் காவல்துறை. திருச்சியிலோ இந்தக் கைதைக் கண்டித்துச் சுரொட்டி ஒட்டியவர்களும் கைது!

ஆனால் தவமணியைக் கைது செய்ததற்காகத் தமிழக அரசைப் பாராட்டி அறிக்கை வெளியிட்டுள்ளது பா.ஜ.க. உண்மையில் இது எமது செயல்பாட்டுக்குக் கிடைத்த பாராட்டு!

### ஆர்.எஸ்.எஸ். காக்கியும் அரசாங்கக் காக்கியும்!

மார்ச் 20, 21 தேதிகளில் நடை

படிப்பகம்

www.padippakam.com

பெற்ற பா.ஜ.க. மாநாட்டையொட்டி திருச்சி நகரத்திற்குள் நுழையும் எல்லாச் சாலைகளிலும் காவல்துறையின் சோதனைச் சாவடிகள்.

போலீசைக் கண்டவுடன் வாய்குளறும் அப்பாவிகள் சந்தேகத்தின் பேரில் நிறுத்தி வைக்கப்பட்டனர். போலீசைக் கண்டும் வாய்குளறாமல் தெளிவாகப் பதில் சொன்னவர்கள் தீவிரவாதிகளாய் இருக்கக்கூடும் என்பதால் அவர்களையும் பிடித்து வைத்தது போலீசு. போதாக் குறைக்கு வீடு வீடாகச் சோதனை. 'இந்துக்கள்' பகுதியும் விட்டுவைக்கப்படவில்லை. ஒவ்வொரு வீட்டிலும் ரேசன் அட்டையை வாங்கி அதில் உள்ள நபர்கள் தவிர வேறு வெளியூர்க்காரர்கள் யார் வந்திருந்தாலும், அது பெற்ற பிள்ளையானாலும், 24 மணிநேரத்தில் ஊரைக் காலி செய்ய வேண்டும் என்றும் இல்லையேல் சிறை செல்ல வேண்டும் என்றும் எச்சரித்துத் துரத்தியது போலீசு.

நகரமே தங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது குறித்து பார்ப்பன - பனியா கும்பலுக்குப் பெருமை பிடிபடவில்லை. ஆனால் இட்லரின் இராணுவம் கைப்பற்றிய ரசியாவைப் போல திருச்சியே சுடுகாடாகக் காட்சியளித்தது. காவித் துண்டுகளைத் தவிர காக்கி உடுப்புகள் மட்டுமே எஞ்சியிருந்த 'மினி' இந்து ராஷ்டிரமாகிவிட்டது திருச்சி.

**பாரதீய ஜனதாவின் சேலைக் கனவு!**

மாநாடு என்றால் அதற்கு மக்களும் தேவைப்படுகிறார்களே! தனக்குத் தேவையான எதையும் விலைக்கு வாங்கியே பழக்கப்பட்ட பனியா கும்பல் திருச்சி மக்களை விலைக்கு வாங்குவதற்கு குஜராத்திலிருந்து பாலியெஸ்டர் வேட்டிகளையும், பூனம் சேலைகளையும் மலை மலையாகத் தருவித்திருந்தது. ஆனால் அவற்றை விநியோகிக்கப்பதற்குத் தேவையான தொண்டர்கள் கூட இல்லாத அளவுக்கு கட்சி திருச்சியில் 'வேர்' விட்டிருந்த காரணத்தினால், ஏழு மலையான் நோட்டீசைப் போல கண்டவன் கையிலெல்லாம் 100, 200 சேலையைக் கொடுத்து "உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு விநியோகம் செய்து மாநாட்டுக்கு ஆள் திரட்டுங்கள்" என்று ஏற்பாடு செய்துவிட்டனர்.

இப்படி விநியோகப் பொறுப்பேற்ற உறையூர் செட்டித் தெருவைச் சேர்ந்த பா.ஜ.க. பேர்வழி ம.க.இ.க. இயங்கும் காந்திபுரம் பகுதியில் சேலை விநியோகம் செய்துவிட்டார். "150 ரூபாய் மதிப்புள்ள சேலை; தலைப்பில் தாமரைச் சின்னம் போட்டிருக்கிறதே என்று தயங்காதீர்கள். அதைக் கையாலேயே சுரண்டி எடுத்துவிடலாம்; இந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு மாநாட்டுக்கு வந்தால் அங்கே இதைவிட நல்ல சேலை தருவோம்" என்று ஆசைகாட்டி சில சேலைகளையும் விநியோகம் செய்துவிட்டான்.

மீண்டும் சேலை விநியோகத்துக்கு வந்தபோது ம.க.இ.க. தோழர்கள் மறித்து நிறுத்திக் காறி உமிழ்ந்தனர். ஏற்கனவே வாங்கியவர்கள் அந்தச் சேலையை அவர்கள் முகத்தில் விட்டெறிய வேண்டும் என்பதை விளக்கிக் கூறினர்.

பிச்சையிட்ட கையின் 'பாத்திரத்தை'ப் புரிந்து கொண்டவுடனே பேசத் தெரியாதவர்களெல்லாம் பேசத் தொடங்கினர். "காந்திபுரத்துக்குள்ளே சாமி வராது, சேலை மட்டும் வருமா?" "கட்ட சேலை தர்றியே, கட்ட பொண்ணு தருவியா?" என்று கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறினார்கள் சேலை விநியோகஸ்தர்கள்.



பா.ஜ.க. மாநாட்டில் வைகோ, ராமதாஸ் -சலாம் வரிசை தமிழினத் தளபதிகள்

இலவச சேலையைக் கூட வாங்க மறுக்கும் 'பயங்கரவாதிகளை'க் கட்டுப்படுத்தி தருமத்தை நிறைவேற்ற போலீசை அழைத்து வந்தது பா.ஜ.க. கும்பல்.

"என் பெண்டாட்டிக்கு அவன் சேலை எடுத்துத் தர்றானே, நாளைக்கு செட்டித் தெரு பொம்பளைக்கெல்லாம் நாங்க சேலை எடுத்துத் தர்றோம். அதுக்கு பந்தோபஸ்து கொடுக்க போலீசு வருமா?" என்ற கேள்வி தாங்கள் தற்போது ஈடுபட்டிருக்கும் தொழில் என்ன என்பதை போலீசு அதிகாரிக்கு முற்றிலும் புதிய கோணத்தில் புரிய வைத்தது.

இன்னொருமுறை சேலை தெருவில் நுழைந்தால் காலை எடுத்து விடுவோம் என்ற எச்சரிக்கையுடன் கொடுத்த சேலைகளை நடுத்தெருவில் வைத்துக் கொளுத்தினார்கள் தோழர்கள்.

பா.ஜ.க.வின் சேலைக்கனவைக் கலைத்தது மட்டுமின்றி நகரில் திரும்பிய பக்கமெல்லாம் மாநாட்டு எதிர்ப்புச் சுவரொட்டிகளை ஒட்டிவிட்டனர் ம.க. இ.க., பு.மா.இ.மு. தோழர்கள்.

கண்டனச் சுவரொட்டிகளை ஒட்டுவது என்பது மிகச் சாதாரணமான ஜனநாயக உரிமை. எனினும் நகரில் குவிக்கப்பட்டிருந்த 10,000 போலீசாருக்கும், பா.ஜ.க.வினருக்கும் இது தன்மானப் பிரச்சினை, தோழர்கள் கைது செய்யப்பட்டனர்; தோழர்கள் கிடைக்காத இடத்தில் குடும்ப உறுப்பினர்கள் கைது; கரூரிலோ வீடு புகுந்து தாக்கின காவல் நாய்கள்.

இத்தனை முஸ்தீபுகளுக்குப் பின் நடைபெற்ற மாநாட்டில் முதல் நாள் காலையில் உட்கார்ந்திருந்த கூட்டம் வெறும் 400 பேர் என்றெழுதியது தினத்தந்தி. மறுநாள் இரவு நடந்த பொதுக்கூடடத்தில் 20,000 அமரத்தக்க திடலில் பாதி காலி என்று ஒப்புக் கொண்டது தினமணி. அதில் பொதுமக்கள் வேடத்தில் அமர்ந்திருந்த போலீசு எத்தனை ஆயிரம் என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம். அடுத்தமுறை பா.ஜ.க. மாநாட்டுக்கு முன் வீடுவீடாகச் சோதனை போடும் போலீசார் "மரியாதையாக மாநாட்டுக்குப் போ, இல்லையென்றால் சிறைக்குப் போ" என்று உத்தரவிட்டால் கூட்டம் சேர்ப்பது சுலபம்.

**ஸ்ரீதர் கொலை: கடையடைப்பை எதிர்த்து:**

திருச்சி நகர பா.ஜ.க. தலைவர் ஸ்ரீதர் கொலை செய்யப்பட்டபோது அதையே சாக்காக வைத்து நகரில் ரவுடித்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர். இதற்கென்றே திண்டுக்கல், துவரங்குறிச்சி போன்ற பகுதிகளிலிருந்து பா.ஜ.க. ரவுடிகள் இறக்குமதி செய்யப்பட்டனர்.

அரசு மருத்துவமனையில் சவப்பரிசோதனை நடந்து கொண்டிருந்தபோது வாயிலில் கூடியிருந்த இந்தக் கூட்டம் பேருந்துகளை உடைத்தது. கண்ணில் பட்ட முஸ்லீம்களையெல்லாம் தாக்கியது. "ம.க.இ.க.வைத் தடை செய்; தி.க. ஒழிக" என்று கோஷம் போட்டது.

மறுநாள் இல. கணேசன், ரங்கராஜன் குமாரமங்கலம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற சவ ஊர்வலத்தில் கருணாநிதியையும், அமைச்சர் நேருவையும் சொல்லக் கூசும் ஆபாச வசவுகளால் அர்ச்சித்தனர். நேருவின் வீட்டு வாசலிலேயே கலாட்டா நடந்தது. போலீசு மட்டுமல்ல கழகக் கண்மணிகளும் எவ்வித சொரணையுமில்லாமல் மவுனமாகவே இருந்தனர். கடையடைப்பு நடத்துமாறு கடைக்காரர்கள்

www.padippakam.com

மிரட்டப்பட்டனர்.

பா.ஜ.க.வின் ரவுடித்தனத்தை எதிர்த்தும், கடைகளைத் திறந்து வைக்கக் கோரியும் ம.க.இ.க. திருச்சி கிளை அறிக்கை வெளியிட்டது. சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன. கையில் ஆயுதங்களுடன் கடை வீதிகளில் சுற்றும் பா.ஜ.க. ரவுடிகளைக் களத்தில் நேருக்கு நேர் சந்திப்பது என்று முடிவு செய்து 'உரிய' தயாரிப்புகளுடன் சிவப்புச் சட்டை அணிந்த ம.க.இ.க., பு.மா.இ.மு. தொண்டர்கள் வீதியில் இறங்கினர். ''கடைகளைத் திறந்து வையுங்கள்; நாங்கள் பாதுகாப்புத் தருகிறோம்'' என்று சொல்லி, மோதலை எதிர்பார்த்துத் தயாராக நின்றனர். ஆனால் பா.ஜ.க. கோழைகள் போலீசின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டனர். ''நாங்கள் கடையடைப்பு நடத்த கோரிக்கை விடுகிறோம். இவர்கள் கடையை எப்படித் திறக்கச் சொல்லலாம்? போலீசு எப்படி இதை அனுமதிக்கலாம்?'' என்று அறிக்கை விட்டார் சட்டம் ஒழுங்கின் காவலரான மத்திய அமைச்சர் குமாரமங்கலம்.

போலீசின் துணை, ரவுடிகளின் பலத்தைக் கொண்டு எதையும் செய்யலாம் என்ற இந்து மத வெறியர்களின் திமிர் எடுபடவில்லை. களத்தில் மோத வேண்டியிருக்கும் என்பது நாம் அவர்களுக்குத் தந்திருக்கும் எச்சரிக்கை; மக்களுக்கோ இது புதியதொரு நம்பிக்கை.

**பிச்சுவாக் கத்தியும் பிரசுர விநியோகமும்!**

தஞ்சை பெரிய கோயில் குடமுழுக்கு விழாப் பந்தலுக்குத் தீ வைத்தவர்கள் ம.க.இ.க.வினர்தான் என்று ராம. கோபாலன் விட்ட அறிக்கை வாசகர்களுக்கு நினைவிருக்கும். அதை நம்புவதற்கு ஒரு நாய்கூட இல்லை. தனது 'ஆதார பூர்வமான' குற்றச்சாட்டை தஞ்சையில் பொதுக்கூட்டம் போட்டுச் சொல்லவோ, வழக்கு தொடரவோ அந்தப் பார்ப்பனக் கும்பலுக்கு தைரியமும் இல்லை, நாணயமும் இல்லை. எனினும் ஆண்டுதோறும் தமிழ் மக்கள் இசை விழாவிற்குப் பெருகிவரும் வரவேற்பைக் காணப் பொறுக்கவும் இல்லை.

எனவே இந்த ஆண்டு இசைவிழா முடிந்த ஒரு மாதத்தில் தீண்டாமை ஒழிப்பு - இந்து எழுச்சி மாநாட்டை தஞ்சையில் நடத்தியது இந்து முன்னணி. அதே நாளன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்த ம.க.இ.க. கோரியதற்கு வழக்கம் போல அனுமதி மறுத்தது காவல்துறை.

பீகாரில் தாழ்த்தப்பட்ட மக்களைக் கொன்றொழித்துவிட்டு, தஞ்சையில் தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்தும் பார்ப்பன மதவெறிக் கும்பலை 'நிம்மதியாக' மாநாடு நடத்தவிடக் கூடாது என முடிவு செய்தனர் தஞ்சைத் தோழர்கள். ஆர்.எஸ்.எஸ். கும்பலின் சாதிவெறி முகத்தை நார் நாராகக் கிழிக்கும் கேள்விகளை துண்டுப் பிரசுரங்களாக ஆயிரக்கணக்கில் அச்சிட்டு நகரில் விநியோகித்தனர். அதோடு வேலை முடியவில்லை.

மாநாட்டுப் பேரணியைப் பார்வையிடுவதற்காக ராம கோபாலன் நின்றிருந்த மேடையின் முன்பிலேயே நின்று பேரணிக்கு வந்த கூட்டத்திடம் பிரசுரத்தை விநியோகித்தனர் ஐந்து தோழர்கள். உடனே மேடையில் காவலுக்கு நின்ற காக்கி நிஜார் குண்டர்கள் ஒரு தோழரைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். அவரோ அந்த அரை நிஜார்களைச் சட்டை செய்யாமல் தன் வேலையைத் தொடர்ந்தார். ஆத்திரம் தலைக்கேறிய ஆர்.எஸ்.எஸ். காலிகள் பிச்சுவாக்கத்தியை உருவினர்.

அந்தத் தோழர் என்ன சொன்னாரோ தெரியவில்லை, மறுகணமே கத்திகள் உறைக்குள் ஒளிந்தன, கூலிகள் மேடைக்கு ஓடினர். பிறகு தோழர்களைப் போலீசு கைது செய்தது.

''கூட்டத்திற்குள் ம.க.இ.க.வினர் ஊடுருவியிருப்பார்கள். உஷார்.. உஷார்'' என்று மேடையிலிருந்து எச்சரித்துக் கொண்டேயிருந்தனர் இந்து முன்னணித் தலைவர்கள். அன்று ஊடுருவியவை ம.க.இ.க.வின் துண்டுப் பிரசுரங்கள். அவை எழுப்பிய கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் ''ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் சாதி பார்ப்பதில்லை'' என்பதையே வளைத்து வளைத்து விளக்கிக் கொண்டிருந்தார்கள் பேச்சாளர்கள். துண்டறிக்கை எழுப்பிய கேள்விகளை எந்தக் கத்தியால் குத்துவது? பேரணிக்கு வந்த முட்டாள்களை அந்தக் கேள்விகள் அல்லவா குத்திக் குடைந்து கொண்டிருக்கும்!

**மருத்துவ சேவைக்கெதிராக ஒரு கரசேவை!**

சென்னை சேத்துப்பட்டின் சேரிப் பகுதியில் ம.க.இ.க. தலைமை அலுவலகம்; மேட்டுக்குடியினர் வசிக்கும் மாளிகைப் பகுதியில் ஆர்.எஸ்.எஸ். தலைமை அலுவலகம் - என்று இரு துருவங்களும் சரியான இடத்தில்தான் அமைந்திருக்கின்றன.




இருந்தாலும் இந்தப் பக்கம் மூக்கை நுழைக்க ஆர்.எஸ்.எஸ். கும்பல் முனைந்ததில்லை. 'சேரிப்' பகுதிக்கு 'ஆசி' வழங்குவதற்காக ஒரு முறை காஞ்சி சங்கராச்சாரியைக் கொண்டுவந்து, ம.க.இ.க. தோழர்கள் மறித்துத் தகராறு செய்த பின்னால் இந்தப் பக்கம் திரும்பாமலிருந்தனர்.

''ஆசி வழங்க வந்தால் காலில் விழ ஆளில்லை, சேவை செய்து பார்ப்போம்'' என்று யோசித்த ஆர்.எஸ்.எஸ். நரிகள், சேவாபாரதி எனும் சங்க பரிவாரக் கொலைக் கூட்டத்தின் சார்பில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை மாநகராட்சிப் பள்ளியில் நடத்தவிருப்பதாக அறிவித்தனர்.

''மருத்துவ முகாமைப் புறக்கணிப்போம் - இந்து மதவெறிக் கும்பலை அடித்து விரட்டுவோம்'' என்று விரிவாக ம.க.இ.க.வின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. ஆனால் ஆர்.எஸ்.எஸ். கும்பல் போலீசு பாதுகாப்புடன் சேவையைத் தொடங்கியது.

ம.க.இ.க. தோழர்களில் ஒரு குழுவினர் வாயிலில் நின்று முழக்கமிட்டனர்.


படிப்பகம்

www.padippakam.com

இன்னொரு குழுவினர் அங்கு கட்டியிருந்த பேனரைக் கிழித்தெறிந்து, நாற்காலி மேசைகளை தூக்கி வீசினர். போராட்டத்தின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட மக்களில் சிலர் மருத்துவர்களையும், காவல் துறையினரையும் கேலி செய்து விரட்டினர்.

மதவெறிக் கும்பலுக்கு மாநகராட்சிப் பள்ளியில் எப்படி இடம் தரலாம் என்று காவல்துறை உதவி ஆணையரிடம் கேள்வி எழுப்பினார் ம.க.இ.க. செயலர். அந்தக் கேள்விக்குப் பதிலளிக்குமுகமாக ம.க.இ.க. தோழர்களைக் கைது செய்தது காவல்துறை.

ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பு சக்திகள் அவைவரையும் ஒன்று திரட்டி இப்போராட்டத்தை நடத்த வேண்டும் என்பதால், காலம் குறுகியதாக இருந்தபோதும் எல்லாக் கட்சியினர்க்கும் தகவல் கொடுத்தோம். பெரியார் தி.க.வைச் சேர்ந்த ஒரு தோழரைத் தவிர யாரும் கலந்து கொள்ளவில்லை.

இனி சேரிக்கு மருத்துவ சேவை எனும் நாடகம் நடத்த முயன்றால் தங்களுக்கு மருத்துவசேவை தேவைப்படும் என்பதை சங்க பரிவாரம் புரிந்திருக்கும்.

**கோவையில்**
**ம.க.இ.க.-வுக்கு**
**மட்டும் தடை!**

கோவை நகரில் இந்து மதவெறியை எதிர்த்துப் போராடுவதற்கும் தமிழகத்தின் பிற பகுதிகளில் போராடுவதற்கும் பெரும் வேறுபாடு உள்ளது. ஆலை முதலாளிகள், வியாபாரிகள், காவல்துறை, நீதிமன்றம் ஆகிய அனைத்திலும் ஆர்.எஸ்.எஸ்.ஸின் ஆட்களோ அல்லது சிந்தனையோ ஊடுருவியுள்ளன.

கடந்த பல மாதங்களில் ம.க.இ.க. தோழர்கள் கைது செய்யப்படாத மாதம் இல்லை; தோழர் காளியப்பன் உள்ளிட்ட பேச்சாளர்கள் பலர் தங்களது பொதுக்கூட்டப் பேச்சுக்காக ராஜத் துரோகம், மதக் கலவரத்தைத் தூண்டுதல் ஆகிய குற்றப் பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டு, நீதின்றங்களால் தொடர்ந்து பிணை மறுக்கப்பட்டு 1½ மாதம் 2 மாதம் சிறையில் இருந்தனர். தெருவில் இறங்கிப் பிரச்சாரம் செய்தாலோ இந்து முன்னணிக் காலிகளை எதிர் கொள்வதன் விளைவாக கொலை முயற்சி வழக்குகள்.

அத்வானியின் சமீபத்திய கோவை வருகையை எதிர்த்து சுவரொட்டி ஒட்டியதற்காகக் கைது செய்யப்பட்ட தோழர்களை 45 நாட்கள் வரை நீதிமன்றங்கள் பிணையில் விடவில்லை. சென்ற நவம்பர் 7 புரட்சி நாளையொட்டி கோவையில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி மறுத்தது போலீசு. அதனை எதிர்த்துத் தாக்கல் செய்த ரிட் மனுவுக்கு 6 மாதங்களாக போலீசுக்கு வாய்தா வழங்கி வருகிறது உயர்நீதி மன்றம்.

ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறியர்களைக் கூர்மையாகத் தாக்கிப் பேசுவதால் ம.க.இ.க. பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி கிடையாது என்பதை நிரந்தரச் சட்டமாக்கியிருக்கிறது கோவை காவல் துறை. சமீபத்தில் தமிழ் தமிழர் இயக்கம் சார்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ம.க.இ.க. தோழர் ஒருவரும் பேச்சாளர் பட்டியலில் இருந்ததால் அந்தக் கூட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அவரது பெயரை நீக்கிய பின்னர்தான் அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் கைது, மோதல், சிறை எதைப் பற்றியும் கவலைப்படாமல் இந்து முன்னணியின் செல்வாக்கு மண்டலங்களுக்குள் புகுந்து பிரச்சாரம் செய்கிறார்கள் தோழர்கள். இதன் விளைவாக இந்து முன்னணியிலிருந்து பலர் விலகியுள்ளனர்; நம் பக்கம் வந்துள்ளனர். இந்து முன்னணிக்குத் தோன்றியுள்ள இந்த நெருக்கடிதான் போலீசின் கெடுபிடிக்கு அடிப்படை.

களத்தில் இறங்காதவர்கள், பார்ப்பன இந்துமதவெறி என்று கூறி குறிவைத்துத் தாக்கிப் பேசாதவர்கள், பொதுவாக மதவெறி பற்றிப் பேசும் அமைப்புகள் - இவர்களுக்கெல்லாம் எந்தத் தடையும் இல்லை. இவர்களைப் பற்றி இந்து முன்னணிக்குக் கவலையும் இல்லை.

**சலாம் வரிசை**
**துவங்கிவிட்டது...**
**சங்கே முழங்கு!**

ஆர்.எஸ்.எஸ்.இன் மருத்துவ சேவை முகாமில் புகுந்து அம்பலப்படுத்துவது, இந்து முன்னணியின் ஊர்வலத்தில் புகுந்து பிரசுரம் விநியோகிப்பது, பா.ஜ.க. விநியோகிக்கும் இலவசச் சேலைகளைப் பிடுங்கிக் கொளுத்துவது, ஆர்.எஸ்.எஸ். ரவுடிகளை வீதியில் நேருக்கு நேர் சந்திப்பது... போன்ற இந்த நடவடிக்கைகள் எல்லாம் கடந்த 2 மாதங்களில் சில கிளைகளின் நடவடிக்கைகள்.

இந்து மதவெறி பாசிஸ்டுகளை ஒழித்துக் கட்டும் பெரும் பணியில் எமது இந்தப் பணிகள் ஒரு சிறு துளி மட்டுமே என்பதை அறிவோம். எனவே இது எமது தோழர்களின் வீரம் குறித்த தற்பெருமை அல்ல; பல்வேறு தமிழர் தலைவர்கள், தளபதிகள், அறிஞர்களது 'விவேகம்' குறித்த ஐயம்!

**இந்து மதவெறி பாசிஸ்டுகளை ஒழித்துக் கட்டும் பெரும் பணியில் எமது இந்தப் பணிகள் ஒரு சிறு துளி மட்டுமே என்பதை அறிவோம். எனவே, இது எமது தோழர்களின் வீரம் குறித்த தற்பெருமை அல்ல; பல்வேறு தமிழர் தலைவர்கள், தளபதிகள், அறிஞர்களது 'விவேகம்' குறித்த ஐயம்!**

''வர்க்க ஒற்றுமை என்ற கம்யூனிசப் பேச்செல்லாம் கவைக்குதவாது, தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் - சிறுபான்மையினர் ஒற்றுமை தான் தீர்வு'' என்று பிரகடனம் செய்தவர்கள், கோவையில் இதை அமுல்படுத்த முயன்றதுண்டா? இல்லையெனில் இதை ஏதேனும் ஒரு உண்மை அறியும் குழு ஆராயுமா?

மேற்படி அரசியலின் நம்பிக்கை நட்சத்திரம் 'போராளி ராமதாஸ்' ''சிறையில் தீவிரவாதிகள் கலவரம் - ஆயுதம் - ஐ.எஸ்.ஐ'' என்று அறிக்கை விடுவதில் ராம. கோபாலனை விஞ்சுகிறாரே! இதில் அம்பலமாவது அவரது துரோகமா, அல்லது மேற்படி அரசியலின் உண்மை சொரூபமா?

தமது சொந்தப் பதவியும் பவிசும் பறிபோகாத அளவில் தங்களது ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்புக்கு வரம்பு கட்டிக் கொள்பவர்கள், ''தன் பதவியையே இழக்க நேர்ந்தாலும் கருணாநிதி பா.ஜ.க.வுடன் மோத வேண்டும்'' என்று கோருவது கேலிக்குரியதில்லையா?

தி.மு.க. அமைச்சர்கள் வீட்டு வாயிலில் ரவுடித்தனம் செய்யும் ஆர்.எஸ்.எஸ். காலிகளை உடன் பிறப்புகளால் விரட்ட முடியவில்லை; முதல்வரை சாதியைச் சொல்லி வாய்கூசும் வார்த்தைகளால் ஏசும் ஊர்வலத்திற்கு தி.மு.க. அரசின் காவல்துறை பாதுகாப்புத்தான் தருகிறது; தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரை உள்ளாடையுடன் விரட்டிய கோவையில் இன்னமும் தி.மு.க. பதிலடி தரவில்லை.

இந்த தி.மு.க. அரசையும் அதன் காவல் துறையையும் வைத்து இந்து மத வெறியை ஒழித்து விடலாம் என்று எத்தனை கனவுகள்! எடுத்துச் சொல்லவும் இடித்துரைக்கவும் எத்தனை 'தளபதிகள்'! ''ராமதாசும், வை.கோவும் சரியாக இருந்திருந்தால்'' என்று அங்கலாய்க்க

www.padippakam.com

எத்தனை அறிஞர்கள்!

'அடிக்க முடியாது' என்று ஒத்துக் கொண்டு சரணடைந்துவிட்டால் அடிக்க முடிந்தவன் களம் இறங்கக் கூடும். சலாம் வரிசைப் பேர்வழிகளால்தான் தொல்லையே! இந்து மதவெறிக்கு எதிராக மக்களைத் திரட்டும் மக்கள் திரள் பாதை, மலர்ப்பாதை அல்ல; பத்திரிகைகளின் அறிக்கை விட்டு ஒழிப்பதற்கு பா.ஜ.க. என்பது வாழப்பாடி கட்சி அல்ல; அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட குண்டர் படை. மக்களின் மதஉணர்வைப் பயன்படுத்தி ஊடுருவும் ஐந்தாம்படை. அதை அறிக்கை விட்டும் ஒழிக்க முடியாது; அல்-உம்மா பாணியிலும் ஒழிக்க முடியாது.

'நமக்கேன் வம்பு' என்று எவன் செத்தாலும் கடையை அடைக்கும் வியாபாரியிடம் போராட வேண்டும். ஸ்ரீதரன் சாவுக்கு கடையை அடைக்கச் சொன்னால், அதை மறுத்து திறந்து வைப்பதே ஒரு ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பு அரசியல் நடவடிக்கை எனப் புரிய வைக்க வேண்டும். இழப்பு வரினும் போராடக் கோர வேண்டும். உங்கள் பேச்சுக்கு அந்த வியாபாரி காது கொடுக்க வேண்டுமென்றால், உங்கள் .அரசியலின் நேர்மை குறித்து அந்த வியாபாரிக்கு ஏற்கனவே தெரிந்திருக்க வேண்டும்.

"தாமரைச் சின்னத்தைச் சுரண்டி விட்டு சேலையைக் கட்டிக் கொள்கிறோமே" என்று கெஞ்சும் ஏழைப் பெண்களையும், ஆர்.எஸ்.எஸ். மருத்துவ முகாமுக்கு இலவச மருந்து வாங்கப் போகும் முதியவர்களையும் எப்படித் தடுப்பது? உங்கள் அரசியல் உழைக்கும் வர்க்கத்துக்கானது என்பதும், நீங்கள் அவர்களில் ஒருவர் என்பதும் உங்கள் நடைமுறை வாயிலாக அவர்களுக்கு ஏற்கனவே நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்களை அறிக்கைவிட்டுத் திருப்பியனுப்ப முடியாது.

வெறும் துண்டறிக்கை விநியோகம்' தான்; எனினும் அதை இந்து முன்னணி ஊர்வலத்தில் புகுந்து கொடுக்க வேண்டுமென்றால் வாய்க்கரிசி போட்டுக் கொண்டுதான் புறப்பட வேண்டும்; சும்மா சுவரொட்டி ஒட்டுவதுதான் - ஒட்டியபின்னால் இரண்டு மாதமாவது சிறையிலிருக்க வேண்டும் என்றும், பிள்ளை குட்டிகள் சோற்றுக்குத் தவிக்கும் என்றும் தெரிந்துதான் பசையைக் கையில் எடுக்க வேண்டும், கோவையில் இந்து முன்னணியின் பகுதிகளுக்குள் சென்று இந்து மதவெறியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யவும், கோட்டை மேட்டில் நுழைந்து அல்-உம்மாவைக் கண்டித்துப் பேசவும் தேவைப்படுவது என்ன? வீரமா, துணிவா, நாவன்மையா - இல்லை இவை அனைத்துக்கும் மேலாக நாணயம், அரசியல் நாணயம்.

இத்தகைய துள்புறுத்தும் பாதையில் பயணம் செய்யாமல் ஆர்.எஸ்.எஸ்.லை 'முறியடிக்க' விரும்புபவர்கள் என்ன செய்யலாம்? பா.ஜ.க. கூட்டணியின் உள் முரண்பாடுகளையும் சமூகநீதி காத்த வீராங்கனையின் அதிரடி நடவடிக்கைகளையும் தினசரிகளில் படித்து மகிழலாம்!

அல்லது நாற்காலி கூட்டல் கழித்தல் கணக்கில் ஹர்கிஷன்சிங் சுர்ஜித்துக்கு உதவலாம்;

அல்லது அல்-உம்மாவின் நடவடிக்கைகளை அக்கம் பக்கம் பார்த்து அதன்பின் பேசி ரகசியமாக மெச்சிக் கொள்ளலாம்!

அல்லது சமூக நீதிப் போராளி ராமதாசின் மறு வருகைக்காக ஜெபம் செய்யலாம்.

அதிகம் சொல்வானேன்! தமிழ் வழிக் கல்வி உண்ணாவிரதத்திற்கு வாழ்த்துரை வழங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார் பா.ஜ.க. தலைவர் இல. கணேசன்.

தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்தும் அளவிற்கு இறங்கி வந்துவிட்டார் இராம. கோபாலன்.

ஈழத்தமிழர் போராட்டத்தை ஆதரித்துக் குரல் கொடுக்கிறார் பால் தாக்கரே.

அப்புறமென்ன, எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே.... சங்கே முழங்கு!

• • •

இக்கட்டுரை அச்சேறும் தருணத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டது. தி.மு.க.வின் முயற்சியை மீறி பா.ஜ.க ஆட்சி கவிழ்ந்துவிட்டது; மார்க்சிஸ்களின் முயற்சியை மீறி காங்கிரசும் மண்ணைக் கவ்விவிட்டது.

'மார்க்சிஸ்டு' கட்சிக்கும், தி.மு.க.வுக்கும் முட்டுக் கொடுக்க தினமணியின் நடுப்பக்க அறிவுஜீவிகள் தயாராகி விட்டார்கள்.

பா.ம.க., ம.தி.மு.க., அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய அனைவரது 'கற்பையும்' ஆர்.எஸ்.எஸ். குறையாடிவிட்டது. இனி முக்காடு தேவையில்லை. நடைமுறைக்கு ஏற்ற ஒழுக்கநெறி விளக்கம்தான் தேவைப்படுகிறது.

அதுவும் தயாராகிவிட்டது. ஈழ ஆதரவு, சேது சமுத்திரம், காவிரி போன்ற பிரச்சினைகளில் நமக்கு ஆதாயம் இருந்தால், திராவிடக் 'கற்பையும்', தமிழ் 'மானத்தையும்' விலை கூறலாம், பா.ஜ.க.வுக்கு மாலையிடலாம் என்ற புதிய ஒழுக்க நெறியும் தயாராகிவிட்டது. இதைவிட செருப்பு மாலையே மேல்!

• மருதையன்

## தமிழ்ப் போராளி மணிவண்ணன் பேசுகிறார்!

"இந்து மதவெறியர்கள் ஆயுதமேந்தித் தாக்குதல் தொடுத்து வருகிறார்கள் - புரட்சியாளர்கள் என்ன புண்ணாக்கு தின்கிறார்களா?" என்று நந்தன் இதழில் எழுதியிருக்கிறார் திரைப்பட நடிகர் மணிவண்ணன்.

புரட்சியாளர்கள் என்று அவர் குறிப்பிடுவது நக்சல்பாரி புரட்சியாளர்களைத்தான், கருவறை நுழைவுப் போராட்டம் துவங்கி இன்று வரை பார்ப்பன இந்து மதவெறிக்கு எதிராக ம.க.இ.க.வும் அதன் தோழமை அமைப்புகளும் நடத்தி வரும் போராட்டங்களையும், சந்திக்கும் மோதல்களையும் தமிழகம் அறியும். பீகாரில் பா. ஜனதாவின் ரண்பீர் சேனாவுடன் மோதிக் கொண்டிருப்பதும் நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் தான்.

எனவே புரட்சியாளர்கள் என்ன தின்கிறார்கள் என்று ஆராய்ச்சி செய்வதற்கு முன்னால், தன்னைத் தோளில் சுமந்து கூத்தாடும் திராவிட இயக்கக் கொழுந்துகளும், தமிழ்ப் 'போராளி'களும் என்ன தின்று கொண்டிருக்கிறார்கள் என்று மணிவண்ணன் ஆராய்ச்சி செய்யட்டும்; கருணாநிதியிடம் பல்லைக் காட்டும்போது தி.மு.க.வினர் தின்று கொண்டிருப்பதும், தின்ன இருப்பதும் என்ன என்று தனக்கேயுரிய சினிமா பாணியில் 'நைசா' விசாரிக்கட்டும்.

முக்கியமாக, கோடம்பாக்கத்தின் பணமும் பவிசும் கிடைப்பதற்காகத் தனது குருநாதர் பாரதிராஜாவின் செருப்பைக் கையில் சுமந்து அந்தப் புகைப்படத்தை பத்திரிகைகளில் வெளியிட்டுத் தன் குரு பக்தியை விளம்பரம் செய்தாரே, சுயமரியாதைச் சுடரொளி மணிவண்ணன், அந்தக் காலத்தில் தான் தின்று கொண்டிருந்தது என்ன என்பதையும் நினைவுபடுத்திப் பார்க்கட்டும்.


இவையெல்லாம் நிச்சயமாகப் புண்ணாக்கை விட உயர்ந்த பொருளாக இருக்க வாய்ப்பில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# அவர் கட்சிக்காரரா அறிவு ஜீவியா?



இண்டலெக்சுவல் என்று சொல்லப்படும் அறிவு ஜீவிகளில்தான் எத்தனை விதம்! எத்தனை ரகம்! இந்த வகையறாவில் ஒருவரை சமீபத்தில் சந்திக்க நேர்ந்தது.

அச்சமயம் என்கையிலிருந்த புத்தகங்களை அடக்கத்துடன் வாங்கி அனைத்தையும் புயல் வேகத்தில் துழாவிவிட்டு சான்றாதாரங்களைச் சரி செய்து கொண்ட ஒரு ஆய்வாளரைப் போல முடிவுக்கு வந்தவராய் "என்ன சார் நீங்க கம்யூனிஸ்டா?" என்றார்.

ஆமாம் என்றவுடன் என்னை ஒரு முறை பரிதாபமாகப் பார்த்துவிட்டு ஒரு ஏளனப் புன்னகையை உதட்டில் தவழவிட்டார்.

"எங்கசார் ரசியாவுலயும் போயிடுச்சி, சீனாவுலயும் செத்துகிட்டு இருக்கு."

அதனால என்ன செய்யலாங்குறீங்க? - நான் திருப்பிக் கேட்டவுடன் பதில் சொல்லிப் பழக்கமில்லாதவர் போல மௌனத்தில் உறைந்தவர், சிரிப்பால் முகத்தை சரிசெய்து கொண்டார். எந்த ஒன்றிற்கும் என்ன செய்வது? என்று முடிவுக்கு வருவது ஆய்வாளர்களுக்கு அழகல்ல என்பதைச் சொல்லாமல் சொல்லியது அந்தச் சிரிப்பு.

"எல்லாருமே சாகத்தான் போறோம். ஏன் சீக்கு வந்தா வைத்தியம் பார்த்துகிட்டு, வாழ்ந்துகிட்டு பேசாம வுடு பாடையிலேன்னு வுட்ற வேண்டியதானே, நீங்க சொல்றத பார்த்தா பாரீஸ் கம்யூன் தோல்விக்கு பிறகு மார்க்ஸ் புரட்சியே வேண்டாம்னு முடிவெடுத்திருக்கனும்; தோல்விக்கு காரணம் என்ன ஏதுன்னு அதோட அனுபவத்தைத் தொகுத்து அடுத்த கட்டத்துக்கு வளர்றதுலேதான் சார் சமூக மாற்றம். மார்க்சியத்த விடுங்க, விஞ்ஞானமே அதான் சார்! அதவுட்டுட்டு மார்க்சியமே தோல்வின்னா அதுக்கு மாற்றா உங்க கண்டுபிடிப்பையாவது சொல்லுங்க, சரின்னா ஏத்துக்கிறேன்.."

என்கிட்டயே ஆராய்ச்சியா என்பது போல வெறித்தவர் தனது கவச உடைகளை எடுக்க ஆரம்பித்தார். "தம்பி! நான் பொலிட்டிகல் சயன்ஸ்ல பி.எச்.டி பண்ணி இருக்கேன். லூயி போர்ஹேன்னு ஒரு அறிஞர். படிச்சிருக்கீங்களா, அதெல்லாம் படிக்கனும்" தொடங்கிய கேள்விக்கு பதில் சொல்லாமல் அப்படியே சிரசாசனத்திற்கு தாவியது போல பேச்சைப் புரட்டிப் போட்டார்.

"சார், நான் மார்க்சியத்த மறுக்குற புத்தகங்கள படிச்சிருக்கேன். நீங்க கம்யூனிஸ்டு கட்சி அறிக்கையை சொந்தமா படிச்சிருக்கீங்களா?" எப்போதுமே கேள்வி கேட்பதை அவரது மேதமைக்கு துன்புறுத்தலாக கருதியவர் போல் பெருமூச்சுவிட்டார்

இயல்பான தாவலுடன் குறுக்கு விசாரணையில் இறங்கினார், "நீங்க கம்யூனிஸ்ட்ல எந்த பிரிவு?"

"கம்யூனிஸ்ட்னாலே இந்தியாவுல மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் தாங்க." அதுலயும் தான் ஏகப்பட்ட குழு இருக்கீங்க. எப்படியும் என் ஆணிவேரை அசைப்பதில் அவரின் அறிவு முனைப்பு காட்டியது.

"ஒவ்வொருத்தரும் இந்த வழிமுறைலதான் ஒரு புரட்சிய நடத்த முடியும்னு நாங்க பல பிரிவா இருக்கிறதுக்கு எனக்கு காரணம் புரியுது. ஆனா ஒரே மாதிரி சம்பளம் வாங்கிகிட்டு பஞ்சப்படி, கிராக்கி படிக்கு சேர்ந்து கத்திகிட்டு தானுண்டு, தன்வேலை உண்டுண்டு சுயநலமா வாழற அறிவாளிகள் ஒவ்வொருத்தரும் ஒரு குழுவா இயங்குறதுதான் எனக்கு புரியாத புதிரா இருக்கு?"

கிண்டலின் வீரியத்தில் பதைத்துப் போனவர், "நீங்க நெனச்சிக்ற மாதிரி எல்லாரும் இல்லசார்! தினமணியில் லோக்பால் மசோதாவின் அவலம் என்று ஒரு ஆர்டிகல் எழுதியிருக்கேன் தெரியுமா?"

"ஜெயலலிதா - சசிகலா கொள்ளை அடிச்சா, மக்கள் சொத்தை சூறையாடினாங்கிறதுக்கு ஆராய்ச்சி என்ன சார் வேண்டியிருக்கு. ஐந்தாண்டு ஆட்சியே சாட்சி, அந்த சொத்தையெல்லாம் மசோதா போட்டு பறிமுதல் செய்ய முடியுமா? மக்களைத் திரட்டிப் போராடி பறிமுதல் பண்ணாத்தான் உண்டு. அத எந்த ஆய்வாளர் பத்திரிகைல எழுதறார் சொல்லுங்க?"

என்னை முழுவதுமாக அடையாளம் கண்டவர் போல் ஓ! நீங்க ம.க.இ.க வா என்று குரலெடுத்தார். "அப்பவே நெனச்சேன் ஏதோ ஆக்டிவிஸ்டா இருப்பீங்கன்னு" என்றவர் அடுத்த தாவுக்கு தயாரானவராய், வெண்மனி தியாகிகள் தொடர்பாய் என் கையிலிருந்த ஒரு நூலை எடுத்தவாறு, ஏன் சார் இந்த நூலாசிரியர் யாரு? இண்ட்டலெக்சுவலா இல்ல ஆக்ட்டிவிஸ்ட்டா" என்றார்.

'அப்படின்னா?'

"அதாவது ஆக்ட்டிவிஸ்ட்னா கட்சிகாரங்களா இருந்து எழுதுவாங்க, இண்ட்லெக்ச்சுவல்னா தனித்துறை ஆய்வாளர் இப்படி....?"

"என்னைப் பொறுத்த வரைக்கும் நான் ஆக்டிவிஸ்டா உள்ளவங்களைத்தான் இண்டலெக்சுவலா கருதறேன். மத்தவங்கஎல்லாம் அறிவுப் பிழைப்புவாதிகள்தான்."

முகத்தில் அறைந்த பதிலை சிரித்து உள்வாங்கியவர் "வேற வழியில்ல சார் யுனிவர்சிட்டி, இன்ஸ்டிடியுசன் எல்லாமே கேரியரிஸ்ட்டாதான் இருக்கு. பணத்த வாங்கினமா புராஜக்ட் பண்ணினோமா வெளிநாடு போனோமான்னு தான் இருக்காங்க, நான் கூட நெக்ஸ்ட் மன்த் ஐரோப்பா போறேன். என்ன செய்யறது சொல்லுங்க."


"இதுக்கு எதுக்கு சார் ஆய்வாளர் பட்டம்? அத்துக் கூலிக்காரங்களுக்கு உள்ள நேர்மையோ, சமூக அக்கறையோ கூட அறிவுக் கூலிகளுக்கு இல்லையே! கேக்குறனேன்னு தப்பா நெனக்காதீங்க. எனக்கு ஏன் கம்யூனிசம் புடிக்கும்னு சொல்ல எனக்கு காரணம் சொல்லத் தெரியும். உங்களுக்கு ஏன் கம்யூனிசம் புடிக்கலேன்னு காரணத்த சொல்லுங்க பார்ப்போம்?"

வியாக்கியானங்களுக்கு இடையே ஒளிந்து கொண்டிருந்த அவரது பிழைப்பு வாதம் வெளிவந்துவிட்ட படியால் இனி தாவுவதற்கு வேறு தத்துவக் கிளை தேட வேண்டிய அவசியம் இல்லாமல் போனது. பழையபடியும் ஓசையில்லாமல் ஒரு சிரிப்பை உதிர்த்தபடி 'எல்லாத்தையும் ஒரே அமர்வில் பேசி தீர்க்க முடியாது. பார்க்கலாம் பிறகு, கண்களால் கங்கணம் கட்டியபடி விடை பெற்றார்; மீண்டும் ஒரு ஓசையற்ற புன்னகையோடு. அட! அறிவாளிகளுக்கு சிரிப்பும் ஒரு தற்காப்புக் கலை.

• சுடர்விழி


படிப்பகம்

www.padippakam.com




சிறுகதை:

# பிராய்லர் மனிதர்கள்

"மனுசன் வீடு போய் சேர்ந்தா தான் நிச்சயம்னு ஆகிப் போச்சு நெலம, கால நேரத்துல ஊர்வலத்த வுட்டு "கழுத்தறுக்குறானுங்க பாருங்க." பக்கத்திலிருந்தவரும் சேர்ந்து கொண்டார், "இதுக்கெல்லாம் ஆபீஸ் அவர்ஸ்ல பர்மிஷன் தர்றாம் பாருங்க அவன சொல்லனும்." முன் இருக்கையிலிருந்தவரும் வயிற்றெரிச்சலைக் கொட்டி தீர்த்தார், "அவனுகளுக்கென்ன, ஆபீசரெல்லாம் ஏ.சி. கார்ல போறான், நாம இல்ல புழுங்கிச் சாவறோம். டர்ட்டி கவர்ன்மெண்ட் சார்."

பேருந்தும் சேர்ந்து பொறுமிக் கொண்டு நின்றது. பேச்சில் தீவிரமாய் இருந்தவர் பக்கத்தில் நிற்பவரை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டார். நிற்பவரின் அழுக்கேறிய லுங்கியும் அவரது பழுப்பேறிய விழிகளின் அசைவையும் கவனித்தபடி சூட்கேஸை இன்னும் இறுக்கமாகப் பற்றிக் கொண்டவர் அங்கலாய்க்க ஆரம்பித்தார், "டிரைவர் சார்! அப்புடியே ரூட்ட கட் பண்ணி மவுண்ட்ரோடு வழியாக போகலாம்ல, இப்படியே நின்னா நாங்க எப்ப ஆபிஸ் போய் சேர்றது?"

இருக்கையிலிருந்த வேறு சிலரும் சேர்ந்து கொண்டனர், "நாம எவ்ளோ சொன்னாலும் கேக்க மாட்டாங்க சார்! வண்டி நின்னா என்னா? போனா என்ன? அவங்களுக்கு பிரச்சனை இல்ல, நாமல்ல லேட்டா போய் அவதிப்பட வேண்டியிருக்கு." டிரைவர் காதுபடவே உரக்கப் பேசினார் சூட்கேசுக்காரர்.

"உங்களுக்கு டிரைவர், கண்டக்டர்தான் இளிச்சவாயன், நீங்க ஆபிசுல கிழிக்குற கிழி எங்களுக்குத் தெரியாது, ஒரு டேபிள்லேந்து அடுத்த டேபிளுக்கு ஒரு பைல் போக ஒரு நாளாகுது. பஸ் அதவிட வேகமாத்தான் போவுது. ஒரு நாள் என் வேலய நீ செஞ்சு பாரு வேலயும் வேணாம், உன் சம்பளமும் வேணாம்னு ஓடி போயிடுவ" நடத்துனரின் பதிலடியைக் கேட்டு கையில் மட்டப் பலகையை வைத்துக் கொண்டு ஓரமாய் நின்று கொண்டிருந்தவர் வாய்விட்டு சிரித்தார். இருக்கையிலிருந்தவர்கள் தமக்குள் முனகியபடி ஆற்றாமையை பகிர்ந்து கொண்டனர்.

வண்டி பெருமூச்சுடன் நகரத் தொடங்கியது. "அப்பா! அரை அவரா ஆயிருக்கு சார், ரோடு கிளியராக நல்ல வேள, இதோட முடிஞ்சுதுனு சந்தோசப்படுங்க, சமயத்தி[l] அரை நாள் ஆயிடும்." இருக்கைய[l]லிருப்பவர்கள் மாறி, மாறி பேசி[k] கொள்வதை பொழுது போகும் வி[l]மாக கவனித்துக் கொண்டு வந்தன[r] நின்றவர்கள்.

அடிக்கடி பக்கத்தில மாறி[k] கொண்டிருக்கும் நபர்களை உற்று[k] கவனித்தவாறு சூட்கேஸை பற்றி[k] கொண்டார் இருக்கையிலிருந்தவர் "பட்ஜெட்ல பாத்தீங்களா கிளாஸ் ஒண்ணுக்கெல்லாம் சம்பளத்த எக்க[ச்]சக்கமா ஏத்தி வுட்டுட்டான். நம்பள மாதிரி மிடில் கிளாசதான் சார் கெட்ட[ப்]புல போட்டுர்றான்." "கடைசில கரக்டா போய் ஓட்டுப் போடறது நாமதான்; ஹை அபிசியல்ஸ் ஓட்டு போடவே போக மாட்டேங்குறான் அவனுக்கு ஏத்தறான், நமக்கு அரியர்ஸ் கூட ஒழுங்கா தர்றதில்ல" சூட்கேஸ்காரர் நாளேட்டை கையில் வைத்திருந்தவரிடம் அனுபவத்தை பகிர்ந்த படிக்கு,

"பார்த்தீங்களா நியூசை, கோயம்புத்தூர்ல எவ்ளோ பேர குண்டு வச்சி கொன்னான், இவனுக என்னாடான்னா கோர்ட்டு கேசுன்னு பேசிகிட்டு இருக்கானுங்க, அவன் ஏன் சார் போட்டோவுக்கு போஸ் கொடுக்க மாட்டான், பாத்தீங்களா அவன் படத்துல நிக்கிற ஸ்டைல."

"இது அவன் இல்ல, வேற யாரோ மறியல் பண்



படிப்பகம்

www.padippakam.com

ாங்களாம், அமெரிக்கா கொடிய ரிச்சிட்டாங்களாம் அந்த பாட்டோ போட்டிருக்கான்.''

தனது எண்ணத்தில் உறுதியாய் ருந்த சூட்கேஸ்காரர் ''எவனோ ார்! சட்டத்த மீறி ஒருத்தன் துணிச் லா ஒன்னு பண்றான்னா சும்மா பச்சு வார்த்தன்னு அவன விட்டு வக்க கூடாது சார்! அரபு நாட்ல ாருங்க உடனே தண்டனை, நிக்க ச்சி சுட்டுறான் பாருங்க''

''என்ன பண்றது சார் நாம ஜன ாயக நாடாச்சே'' ''ஜனநாயகமா து, வெங்காயமாவது இந்த பச்சே கூடாது சார், ''இப்படியே சால்லித்தான், வீணா போயிட் டாம், ஜனநாயகம்னு சொல்லிட்டு ரூளாளுக்கு நடுரோட்ல மறியல் ண்றான். பேசறதுக்கே ரைட்ஸ் காடுக்க கூடாது'' ஆங்கிலப் பதங்க ின் அதிகாரத் தொனியில் சுட் ண்டு கவனித்தனர் பக்கத்தில் நிற்ப ர்கள்.

''சார்! அப்படியே ஒன்னு அம் து ஒன்னு வாங்குங்க'' என்று ாசை நீட்டியவரிடம் வாங்க மறுத்த ட்கேஸ்காரர் நான் அடுத்த டாப்ல இறங்க போறேன் என்றார் இது வேற வம்பு சார், நம்ப உதவி சய்யப் போயி, அப்புறம் பத்த காடுத்தன், இருவத கொடுத் தன்னு உபத்தரவம் வந்து சேரும்'' ன்று தன்னிலை விளக்கம் காடுக்க, பக்கத்தில் இருப்பவர் மல்லிய புன்னகையுடன் தலை ாட்டிக் கொண்டார்.

''சார் டிக்கட்'' பரிசோதகர் ரல் பயணிகளை பரபரப்பாக்கி து. ''மணி சார் பின்னாடி ஒரு ஆள் றங்குது பாருங்க'' சக பரிசோதக க்கு சமிக்ஞை காண்பித்தார் அவர். மல் பையில் விரல்களை துழாவி மாந்த சூட்கேஸ்காரர் பரபரப்பு ள் எழுந்து பேண்ட், பாக்கெட்டுக ல் டிக்கட்டை தேடி முகம் வாடிப் பானார்.

''என்ன சார்! இவ்வளோ நரம், சீக்கிரம் எடுங்க,'' பரிசோத சலித்துக் கொண்டார்.

''இருங்க சார், டிக்கட் வாங்கி னன் விழுந்துருச்சி போல ருக்கு'', கீழே குனிந்து எட்டிய மட் ம் கையை ஊன்றிப் பார்த்தார்.

''யோவ் எவ்வளோ நேரமா வண்டியை நிப்பாட்றது கீழ இறங்கி தேடுயா'', நடத்துனரின் குரலோடு பயணிகளின் குரலும் கலந்து வந்தது.

''யோவ் யார்யா இது உன்னால நாங்க வேற காத்து கெடக்க வேண்டி யிருக்கு. இறங்குயா சீக்கிரம் கீழ எறங்கி பொறுமையாத் தேடுய்யா... சாவு கெறாக்கி.''

> ## ம.க.இ.க-வின் ஏழாவது மாநில மாநாடு
>
> மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் ஏழாவது மாநில மாநாடு மார்ச் 19, 20 தேதிகளில் மதுரையில் நடைபெற்றது. கடந்த இரண்டாண்டுப் பணிகளை மாநாடு பரிசீலித்து இந்துமவெறிப் பாசிச அபாயமும், மறுகாலனி யாக்க அபாயமும் நிலவுகின்ற இன் றைய அரசியல் சூழலில் பண்பாட் டுத் துறையில் நாம் ஆற்ற வேண்டி யிருக்கும் அவசரக் கடமைகள் குறித்தும் மாநாடு விவாதித்தது.
>
> இறுதியாக நடைபெற்ற நிர்வா கிகள் தேர்வில் தோழர். மருதையன் செயலராகவும், தோழர். காளியப்பன் இணைச் செயலராகவும், தோழர். சீனிவா சன் பொருளாளராகவும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.
>
> மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கி மாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு மா. செ. கு. உறுப்பினர் தோழர். கதிரவன் தலைமை தாங்கினார். தோழர். காளியப்பன், தோழர். சீனிவாசன் ஆகியோர் உரையாற்றினர்.
>
> ம.க.இ.க. கலைக்குழுவின் புரட்சிகரக் கலை நிகழ்ச்சியுடன் பொதுக்கூட்டம் நிறைவடைந்தது.

''மாப்ள இப்ப சாரு எறங்கு றறா? இல்ல எல்ப் பன்னனுமான்னு கேளு.. ஆங்காங்கே குரல் வலுக்க ஆரம்பித்தது. பரிசோதகர் பொறுமை இழந்தார், ஏதோ பேச முற்பட்ட சூட்கேஸ்காரரிடம் கையை மறித்தவாறு.

''மிஸ்டர் இங்க பேச்செல்லாம் கூடாது, பேசறது கேக்கிறதுக்கு நான் இங்க வர்ல, டிக்கெட் எடுக்காம என் ளையா பேச்சு வேண்டி கெடக்கு, எறங்குயா சீக்கிரம்.''

''என்ன சார் இது அநியாயமா இருக்கு, அடுத்தவங்க பேசறதயே கேட்காம, இவ்வளவு இன்டீசன்ட்டா பிகேவ் பண்றீங்க, எங்க வேல பாக் குறேன் தெரியுமா, ஆள் தெரியமா அசிங்கமா பேசாதீங்க. வேண்ணா பக்கத்தில இருக்கிறவர கேட்டுப் பாருங்க.''

அவர் எதிர் பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை. பக்கத்தில் பேசிக் கொண்டு வந்தவர் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்.

''கண்டக்டர் சொல்றார் இல்ல கீழ போய் பேசிக்கிங்க சார், ஏன் வீணா டென்சன் ஆகிறீங்க.'' பின் சீட்டில் உள்ளவரின் பேச்சைக் கேட்டு மேலும் அதிர்ச்சிக்குள்ளா னது அவரது முகம்.

''சார் கொஞ்சம் இந்த சூட் கேஸ்ஸ வச்சுகுங்க, பணம் கட்டிட்டு வந்துடறேன்'' என்றார் பக்கத்து சீட் காரரிடம் கெஞ்சலாக.

''எதுக்கு சார் ரிஸ்க்கு, பஸ்சு கிளம்பிடும் கையிலேயே வச்சுகுங்க'' நிலைகுத்தி அதிர்ச்சிக்குள்ளான சூட் கேஸ்காரரை கையை பிடித்து இழுத் தார் பரிசோதகர்.

ஆளை இறக்கி விட்டு பேருந்து நகர ஆரம்பித்தது. இருக்கையிலிருந் தவர்கள் புதிய ஆட்களை சேர்த்துக் கொண்டு பேச ஆரம்பித்தனர்.

''நீங்க செஞ்சதுதான் சார் சரி. ஆள் தெரியாம சூட்கேஸ வாங் கிட்டு அப்புறம் நம்ம மாட்டிகனும்.''

''பின்ன, நான் எத்தன பேர பாத்திருக்கேன், ஆளு 'டிப்-டாப்பா' டிரஸ் பண்ணிகிட்டு ஒரு டிக்கட் எடுக்காம வரான்னா அவன் எவ்ளோ பெரிய ஆளா இருப்பான்.

ஆமா சார், நல்லவன் மாதிரி பேசிகிட்டு இவனுகளே பெட்டிக் குள்ளே குண்ட, கிண்ட வைச்சுட்டு நம்மகிட்ட தள்ளி வுட்டுட்டு போயி டுவானுவ சார், வெளியில வந்தா உஷாரா இருக்கனும். ஆமோதிப் பதை போல சுத்தி இருந்தவர்கள் தலையாட்டி சிரித்தனர். இருப்புக் கொள்ள முடியாதது போல பேருந்து நெளிந்தது.

• துரை. சண்முகம்.

படிப்பகம்

www.padippakam.com

# கலை இலக்கிய இரவா? களவாணி இரவா?

ம.க.இ.க.வின் பாடல்களில் தமக்கு வசதியானவற்றைத் திருடி, இன்னாருடைய பாடல் என்று சொல்லாமல் பாடுவதை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நீண்ட நாட்களாகவே செய்து வருகிறது. இதைப் பலமுறை, பல மேடைகளில் நமது தோழர்கள் தட்டிக் கேட்டு அம்பலப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த திருட்டுத்தனத்தில் ஒரு புதிய எல்லையைத் தொட்டிருக்கிறார்கள் 'மார்க்சிஸ்டு'கள். தமிழ்ப் புத்தாண்டன்று தாம்பரத்தில் நடந்த மு.எ. சங்கத்தின் கலை இலக்கிய இரவில், ம.க.இ.க.வின் 'காவி இருள்' பாடல் ஒலிப்பேழையில் உள்ள வாஜ்பாயியை அம்பலப்படுத்தும் பாடலை யாருடையது என்று சொல்லாமல் பாடியுள்ளனர்.

வரிக்கு வரி மக்களின் கைதட்டலைக் கேட்டவுடன் அறிவிப்பாளர் கம்பீரமாகப் பிரகடனம் செய்தார்: "நாளை நடப்பது என்ன என்பதை முன்னறிந்து சொல்லும் திறன், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சமூக விஞ்ஞானிகளுக்குத்தான் உண்டு என்பதற்கு எங்களுடைய இந்தப் பாடலே சான்று" என்றார். திருடர்களுக்குப் பெயர் விஞ்ஞானிகள் என்றால் விஞ்ஞானிகளை என்னவென்று அழைப்பது?

முற்போக்கு எழுத்துத் திருடர்களுக்கு ஒரு கேள்வி: ஆட்சிக் கலைப்புக்கு முன்னால் நடந்த தாம்பரம் கூட்டத்தில் பாடிய அதே வாஜ்பாயி பாட்டை ஜெயலலிதாவுடன் கள்ளக் கூட்டு வைத்திருக்கும் இன்றைய சூழலில் உங்களால் பாட முடியுமா?

இதைப் போன்ற சிக்கல்களுக்கு வழி கண்டுபிடித்த 'கவிஞரும்' மு.எ. சங்கத்தில் இருக்கிறார். ம.க.இ.க. பாடல்களில் உள்ள ஆயுதப் போராட்டம், புரட்சி, பார்ப்பனிய எதிர்ப்பு, தேர்தல் புறக்கணிப்பு போன்ற வரிகளை தேவைக்கேற்ப நீக்கி சுத்தம் செய்துவிட்டு, அவற்றைத் தானே பாடிப் பதிவு செய்து, ஒலிப் பேழைகளையும் விற்றுக் காசு பார்க்கும் அந்தப் பக்காத் திருடனின் பெயர் மதுரை சந்திரன்.

இவர் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற்ற திருடன் என்பது குறிப்பிடத்த கது. இந்த நபர் எந்த மேடையில் பா னாலும் 'எம்பா இது உன் பாட்டுதான என்று நீங்கள் தாராளமாகக் கேட்கலா

ம.க.இ.க.வின் பாடல்களை ப வேறு அமைப்பினரும் தங்கள் பொது கூட்டங்களில் ஒலிபரப்புகின்றன ஜெயா ஆட்சிக் காலத்தின் போ ம.க.இ.க.வின் இருண்ட காலம் ஒலி பேழையை பொதுக் கூட்டத்தில் ஒலி ரப்பி அதைத் தடுத்த போலீசுடன் ம லுக்கு நின்ற தி.மு.க.வினரும் இரு கின்றனர். சென்ற சட்டமன்ற தேர்த பிரச்சாரத்திற்குக் கூட 'அண்ணன் வ ரு' ஒலிப் பேழையை தி.மு.க.வினர் ப இடங்களில் பயன்படுத்திக் கொண் னர்.

ஆனால் 'இது நாங்கள் எழுதி பாட்டு' என்று சொல்லும் தைரியம் ஜித் பரம்பரைக்கு மட்டும்தான் இருக் றது. இனி இத்தகைய கலை இலக்கி 'இரவுத் திருட்டில்' ஈடுபட்டால் விடி தற்குள் முற்போக்கு திருடர்களின் மு மூடி கிழிக்கப்படும்.

---

❖ இது சிறப்பாக இருந்தது - இது இல்லை என குறிப்பிட இயலாதவாறு அனைத்து விசயங்களையும் சரியான திசையில் சுட்டிக் காட்டிய கிரிக்கெட் கட்டுரை வாசகர்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

தனியார்மயம், தாராளமயம், உலகமயத்தின் கேடுகளை விளக்கி பேருந்துகளில் பேசும் போது, தலை குனிந்து நமட்டுச் சிரிப்பு சிரிக்கும் நடுத்தர வர்க்கத்தின் கழுத்துக்கு மேலேயே அந்தக் கத்தி தொங்கிக் கொண்டிருப்பதை - 'முதலாளித்துவ சொர்க்கம், கிழக்காசிய நரகம்' - கட்டுரை படம் பிடித்துக் காண்பிக்கிறது.

ஒரு முன் மாதிரியான வாழ்க்கையுடனே, கடினமான போராட்டத்திலும் ஊன்றி நிற்பது எப்படி என்பதை பால். ராப்சனின் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ள அவரைப் பற்றிய கட்டுரை உதவியது.

'ஐயனாரு இந்த அரிசீ பீ நாத்தம் அடிக்கும்பா, கஞ்சித் தண்ணி வாய்ல வக்க ஒப்பாது, எனக்கோசரம் அதோ மூணாவதா கீதே, அந்த மூட்டய பிரியேன்' என அலமேலு கெஞ்சுவதும், ரேசன் கடைக்காரன் மிரட்டுவதும், ஏழ்மையின் அவலத்தை கண்முன் நிறுத்துகிறது. சிறுகதை. சென்னை மொழி நடையை சிலர் புரியவில்லை என்கிறார்கள்.

கவிதை - படித்தவுடன் மனதில் இனம்புரியாத சோகம். அனைத்து அவலங்களையும் ஏற்றுக் கொள்ள மனது பழக்கப்பட்டு வருவது - உண்மைதான்.

• சுரேஷ் மற்றும் வாசகர்கள்
திருச்சி.

❖ மூ. சொர்க்கம், கி. நரகம் - படித்தபோது, 'டன்லப்' ஆலை மூடியபின் தொழிலாளர்கள் பெட்டிக் கடை வைத்தது, சமோசா விற்பது, குழந்தைகளை ஆங்கிலப் பள்ளியிலிருந்து மாந ராட்சிப் பள்ளிக்கு மாற்றியது - நினை வுக்கு வருகிறது.

• மீனா, சென்னை

❖ சீன நாவல் - படிக்கும் போ உந்துதலையும், நம்பிக்கையையும் ஏற் டுத்துகிறது. 'அன்று என் அம்மா நிமி தம் அஞ்சியதில்லை, இன்று என் தா நாட்டின் நிமித்தம் அஞ்சவில்லை' எனக்குப் பிடித்த வரிகள்.

• சத்யா, சென்னை

❖ மதமாற்றம் கட்டுரையி மீனாட்சிபுரம் மதமாற்றத்தை, அயோ தியின் சர்ச்சைக்குரிய இடம் என்ற தீர்ப் டன் ஒப்பிட்டு கேட்பது அருமை. சட்ட தின் 'மனசாட்சி சுதந்திரத்தையும், அ சட்டத்தின் மதமாற்றத்தை தடை செ யும் உரிமையையும் ஒப்பிட்டது அத மோசடியை, கேலிக் கூத்தை புரிந் கொள்ள முடிகிறது.

• தியாகு, சென்னை

❖ மதமாற்றம் குறித்து... தமிழ்நா டில் பொதுவாக 'பறையர்கள்' மத்தியி கிறித்தவ மதமாற்றமும், 'பள்ளர்கள்' ம தியில் இசுலாமிய மதமாற்றமும் - ஓர விற்கு நடந்து வருகிறது. ஆனால் தாழ் தப்பட்டோர் படிநிலையில் கடைசியா இருக்கும் 'சக்கிலியர்' மத்தியில் எந் மதமாற்றமும் இல்லையே, ஏன்?

• இராசா, கம்ப

## • வாசகர் கடிதம் •





படிப்பகம்

www.padippakam.com

■ நூல் அறிமுகம் ■

# "தமிழ்நாடு விவசாயிகள் இயக்கத்தின் வீர வரலாறு"

நகரத்தாரும் நாட்டுக் கோட்டைகளும், குன்னூர் சாம்பசிவ அய்யரும், வடபாதி மங்களங்களும், குடும்பம் நடத்தி, குட்டி போட்டதையும், கொள்ளை இலாபத்தில் குடமுழுக்கு நடத்தியதையும், வரலாறாக, பண்பாடாக இங்கு இலக்கிய அந்தஸ்தோடு வரிந்துகட்டிக்கொண்டு எழுதப்பட்டவைகள் ஏராளம். ஆனால் குடும்பம் குடும்பமாக வயல்காட்டில் காய்ந்து மாட்டுத் தொழுவத்தில் தேய்ந்து விளைச்சலை ஆண்டைகளுக்கும் கொடுத்துவிட்டு எலும்பும் தோலுமாய் எருக்குழிக்கு போய்ச்சேர்ந்தவர்களின் அவலத்தை அவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை வரலாறாக அல்ல, ஒரு வாழ்க்கையாக மதிக்கக்கூட யாரும் முன் வந்ததில்லை.

ஏக்கமாகவே மக்கிமடிந்த விவசாயக்கூலிகள் ஒரு இயக்கமாக எழுந்த போது அவர்களைப் பற்றி பேசாத ஆளில்லை. அவர்களையும் அவ்வியக்கத்தையும் சட்டம் ஒழுங்கு பிரச்சினையாக, சமூக அமைதியை குலைக்கும் கிரிமினல் நடவடிக்கையாக பண்ணை முதல் பாராளுமன்றம் வரை பேச ஆரம்பித்தார்கள். மக்கள் மாற மாட்டார்கள் என்ற மமதையில் இருந்த ஆண்டைகள் மட்டுமல்ல, 'அறிவாளிகளுக்கும்' மக்கள் எவ்வாறு மாறினார்கள் என்பதை தொகுத்து சொல்வதுடன் இன்று போராட்ட களத்தில் இருக்கும் விவசாய தொழிலாளர்களுக்கு நம்பிக்கையூட்டுவதில் பெரும் பங்காற்றுகிறது இந்நூல்.


அந்தக்காலம் போல உண்டா? அன்று ஆனை கட்டி போரடித்தோம் என்று ஆசிரியப்பா பாடுபவர்களின் மூஞ்சிக்கு முன்னே இருவேறு உலகங்களை உடைத்துக் காட்டுகிறது இந்நூலின் ஒரு பகுதி.

''ஆண்டு முழுவதும் மாட்டுத் தொழுவத்தில் வேலை செய்தால் மாதம் மூன்று மரக்கால் அல்லது நான்கு மரக்கால் நெல்கிடைக்கும். பண்ணையாளின் பிள்ளைகள் மாடுமேய்க்க வேண்டும். பண்ணையாள் வீட்டில் எரிக்கும் அடுப்புச் சாம்பலும் உரமாக சேர்த்து வைக்கப்பட்டு மிராசுதார் நிலத்திற்கு எந்த விலையும் இல்லாமல் கொடுக்க வேண்டும்'' இது என்னடா சமூகநீதி? என்று சிலிர்ந்து எழுந்தது செங்கொடி இயக்கம் ''மிராசுதாரர்கள் அனுமதி இல்லாமல் பண்ணையாள் தனது பிள்ளைக்கோ, பெண்ணுக்கோ திருமணம் செய்ய முடியாது, இடுப்பில் வேட்டி கட்டக்கூடாது. கோவணத்துடன் இருக்க வேண்டும்.... (பக்:11)'' அடுக்குமோ இந்த அநியாயம்? என்று ஆர்த்தெழுந்த விவசாய இயக்கத்தின் மேல் வழக்குகள் பாய்ந்தன.

இப்படி சிவிலியன்களை (விவசாயிகளை) கிரிமினல்களாகவும், கிரிமினல்களை (நிலபிரபுக்களை) சிவிலியன்களாகவும் ''சட்டத்தின் படி'' ஆண்ட அரசும், ஆளும் வர்க்கமும் நிலப் பிரபுக்களுக்குச் செய்த சேவையை, 1947-க்கு பிறகு கைமாற்றிக்கொண்ட காங்கிரசு பெருச்சாளியின் வர்க்கத் தன்மையை இந்நூலின் வாயிலாகப் புரிந்துகொள்ள முடியும்.

இனாம் ஒழிப்பு, கூலிஉயர்வு, பண்ணையடிமை ஒழிப்பு, ஒப்பந்தக் கூலி இப்படி ஒவ்வொன்றிக்கும் உயிரிழப்பு உட்பட பல்வேறு அளப்பறிய தியாகங்களை புரிந்த விவசாய இயக்கம், சாதிய சமூக கலாச்சார ஒடுக்குமுறையையும் எதிர்த்து ''சாணிப்பால் கொடுக்காதே! சவுக்கடியை நிறுத்து!'' என்று முழக்கமிட்டு முன்னேறிய போது தமிழகமெங்கும் விவசாயிகள் இயக்கத்தை தமதாக்கிக் கொண்டாடினர்.

முன்னணியாளர்களின் தலைக்கு அரசும், ஆளும்வர்க்கமும் விலை வைத்த போதும் மக்கள் தஞ்சமளித்து, நெஞ்சை நிமிர்த்து போராட்டக் களம் புகுந்தனர். ஒரு இயக்கமாக வீறுகொண்டெழுந்த விவசாயிகள் ஆண்டைகளின் கட்டளையை மீறி வயலில் இறங்கி அறுவடை இயக்கம் மட்டும் நடத்தவில்லை, சமஉரிமை கேட்டு தீண்டாமை ஒழிப்பு, தனிக்குவளை ஒழிப்பு, பண்பாட்டு உரிமைகள்... என்று அரசியலரங்கில் ஒரு மாற்றுச் சக்தியாக வளர்ந்தனர், என்பதை விவரிக்கிறது நூலின் முன்பகுதி.




நூலின் அடுத்த பகுதியோ, போர்க்குணமிக்க இவ்விவசாயிகள் இயக்கத்தை அரசியல் அதிகாரத்திற்கான இயக்கமாக வளர்த்தெடுக்காமல் பாராளுமன்ற பலிபீடத்தில் காணிக்கையாக்கியதைக் 'கம்பீரமாகப்' பிரகடனம் செய்கிறது.

''பகிரங்கமாகச் செயல்படத் துவங்கியதும் தேர்தலில் கலந்து கொள்ள முடிவு செய்ததும் நிலப்பிரபுக்களைக் கதிகலங்கச் செய்தது'' - (பக்கம் - 51)

நிலப்பிரபுக்களே தோழமைக் கட்சியாகி, இன்று சோனியா, சு.சாமியுடன் சுர்ஜித்தும் ஜோதிபாசுவும் பேரம் பேசுமளவுக்கு நிலைமை சீரழிந்துவிட்டதைக் கண்டு உண்மையில் கதிகலங்கி நிற்பவர்கள் உணர்வுள்ள கட்சி அணிகளல்லவா?

நூலின் முதற்பகுதி தோற்றுவிக்கும் உணர்வுடன் பிற்பகுதியைப் படித்தால் வாட்டாக்குடி இரணியனும், சிவராமனும் குண்டடிபட்டுச் செத்தது கூட்டணி பேரத்திற்காகவா என்று கேள்வி வாசகருக்கு எழுவது தவிர்க்கவியலாது.

போராளிகளையும், போலிகளையும் இனங்காண்பதற்கு ஒருசேர உதவும் நூல்.

**• துரை. சண்முகம்**

"தமிழ்நாடு விவசாயிகள் இயக்கத்தின் வீர வரலாறு" — கோ. வீரய்யன், விலை ரூ. 60

வெளியீடு:
சவுத் விசன்
சென்னை - 2

கிடைக்குமிடம்:
கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 2.

படிப்பகம்

www.padippakam.com
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER
FOR INDIA UNDER NO. 42647/87

# தேசிய வேட்டி கிழிஞ்சி போச்சு



வாஜ்பாயி... வாஜ்பாயி
வாராது வந்த நம்ம வாஜ்பாயி
வாரார் வாரார் நம்ம வாஜ்பாயி - அப்படி
வாரார் வாரார் நம்ம வாஜ்பாயி

நாடே போற்றும் பிரதமர் இவரு
இவரப்போல தலைவரு எவரு

(வாரார்)

ஆயிரம் யானை மோதினாலும்
அசைக்க முடியா ஆட்சி
அடிச்சிச் சொன்னார் அடல்பிகாரி
அதுதான் சூப்பர் பேச்சு
ஆஹா அதுதான் சூப்பர் பேச்சு
பிரதமர் பதவி சீட்டுக்குள்ளே
போயசு மூட்டப்பூச்சி
வெளிய தெரிஞ்சிடாம சொறிஞ்ச சொறியில
தேசிய வேட்டி கிழிஞ்சி போச்சு

(வாரார்)

அலை அலையாக எம்.பி. வந்தான்
ஆளுங்கட்சிக்கு மாறி
சொளை சொளையாக அள்ளித் தந்தார்
யாரு அந்தப்பாரி
ஆஹா யாரு வள்ளல் பாரி - அவர்
புள்ளக்குட்டி ஏதுமில்லா
கட்டப் பிரம்மச்சாரி - ரொம்ப
உள்ளப்போயி நோண்டாதீங்க
ஐயாம் வெரி சாரி

(வாரார்)

எதிரிகள் கூட்டம் நடுநடுங்கும்
இடி முழக்கப் பேச்சு
எதுகை மோனை சந்தம் துள்ளும்
பிரதமர் கவிதை வீச்சு
ஆஹா பிரதமர் கவிதை வீச்சு
அப்பேர்பட்ட கிளிண்டனையே
காய்ச்சிட்டாராம் காய்ச்சி
கூப்புட்டு எக்கினாபார் ஜெயலலிதா
எதுகையும் மோனையும்
கொழம்பி போச்சு

(வாரார்)

அய்யோ என்றார் அநீதி என்றார்
அழுதார் அடல்பிகாரி
அயோத்திக்காக வடித்த கண்ணீர்
தேரும் ஒரு லாரி
அது தேரும் ஒரு லாரி
ஆலயம் அங்கே கட்டுறான்டா
அரசாங்கத்த மீறி - இவன்
அரசாங்கத்த மீறி - நம்ம
அடல்பிகாரிக்கு ஆரத்தி சுத்தி
மூஞ்சியில் துப்புக்காரி

(வாரார்)

பாம்புகளெல்லாம் அடையிமிடந்தான்
ஆர்.எஸ்.எஸ். கேம்பு
கூட்டணிக் கட்சிக்காரங்கெல்லாம்
சும்மா வெத்தலக் காம்பு
ஆமாம் சும்மா வெத்தலக்காம்பு
அத்வானிக்கும் சிங்காலுக்கும்
கொம்பேரி மூக்கன் வீம்பு
ஆமாம் கொம்பேரி மூக்கன் வீம்பு - ஆனா
அப்படியில்ல அடல்பிகாரி
பாவம் நல்ல பாம்பு

(வாரார்)

• • • •

செப்டம்பர் '98-இல் வெளியிடப்பட்ட மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் 'காவி இருள்' பாடல் ஒலிப்பேழையில் இடம்பெற்றுள்ள பாடல்.

ஒலிப்பேழை கிடைக்குமிடம்
சீனிவாசன், உதயசூரியன் தேநீர் விடுதி,
காந்திபுரம்,
தில்லைநகர் 5-வது குறுக்குத் தெரு,
திருச்சி - 18.

படிப்பகம்